# கூட்டுச் சேரா இயக்கம்: பெல்கிரேத் முதல் டெல்லி வரை

வி. பெனெவலேன்ஸ்கி

வி. பெனெவலேன்ஸ்கி

# கூட்டுச் சேரா இயக்கம்: பெல்கிரேத் முதல் டெல்லி வரை

ES-3
05/08/23

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: இரா. பாஸ்கரன்

**В. Беневоленский**
ДВИЖЕНИЕ НЕПРИСОЕДИНЕНИЯ:
ОТ БЕЛГРАДА ДО ДЕЛИ
*на тамильском языке*

**V. Benevolensky**
THE NON-ALIGNED MOVEMENT:
FROM BELGRADE TO DELHI
*in Tamil*

**வாசகர்களுக்கு**

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகள் வரவேற்கவும் **முன்னேற்றப் பதிப்பகம்** மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

© தமிழ் மொழிபெயர்ப்பு

முன்னேற்றப் பதிப்பகம், 1986

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Б $\frac{0803000000—673}{014(01)—85}$ 350—86

## பொருளடக்கம்

முன்னுரை . . . . . . . . . . 5

அத்தியாயம் ஒன்று. கூட்டுச் சேரா இயக்கம் எப்படித் தோற்றுவிக்கப்பட்டது

1. லட்சியங்கள் மற்றும் கோட்பாடுகள் உருவாதல் . . . . . . . . 13

2. கூட்டுச் சேரா இயக்கத்தின் மூலவர்கள் . . . . . . . . . . . 25

3. முதல் உயர் மட்ட மகாநாடு . . . 37

அத்தியாயம் இரண்டு. முக்கிய மைல் கற்கள்

1. இரண்டாவது — ஆறுவது உயர் மட்ட மகாநாடுகளின் முடிவுகள். . 45

2. ஏழாவது மகாநாடு . . . . . 90

அத்தியாயம் மூன்று. கூட்டுச் சேரா இயக்க ஒற்றுமையின் மீது எது, எப்படித் தாக்கம் செலுத்துகிறது

1. கூட்டுச் சேராமை, நடுநிலைமை, ''சம அளவில் விலகியிருத்தல்'' . . 108

2. ஒற்றுமையைப் பாதிக்கும் பிரச்சினைகள் . . . . . . . . . . . . 115

அத்தியாயம் நான்கு. எதிரிகளும் கூட்டாளிகளும்

1. அமெரிக்க ஐக்கிய நாட்டின் நிலை. 133
2. சோவியத் யூனியனும் கூட்டுச் சேரா இயக்கமும் . . . . . . . 156

முடிவுரை . . . . . . . . . . . . . 176
குறிப்புகள் . . . . . . . . . . . . . 183

## முன்னுரை

இன்று சுமார் நூறு சுதந்திர அரசுகள் பங்கேற்கும் கூட்டுச் சேரா இயக்கம் உலக அரசியலிலும், தேசிய மற்றும் சமூக விடுதலை, மிகச் சமீபத்தில் காலனி விலங்குகளை உடைத்தெறிந்த கோடிக்கணக்கான மக்களின் சிறப்பான வாழ்க்கை ஆகியவற்றிற்காக வளர்ச்சியுறும் நாடுகளின் மக்கள் நடத்தும் போராட்டத்திலும் முக்கியப் பங்காற்றுகிறது. 60க்களின் துவக்கத்தில் செய்ய முயன்றதைப் போல் இப்போது எந்த ஒரு ஏகாதிபத்திய வல்லரசாலும் இந்த இயக்கத்தை அலட்சியப்படுத்த இயலாது. அரசியல் சுதந்திரத்தைப் பெற்ற இளம் அரசு பல நேரங்களில் ஏகாதிபத்திய வல்லரசிடம் புகலிடம் தேட வேண்டியிருந்த அல்லது ஆக்கிரமிப்பு நோக்குடைய இராணுவக் கூட்டில் சேரும்படிக் கட்டாயப் படுத்தப்பட்ட காலங்களும் மறைந்து விட்டன. இன்று உலக அரங்கில், இராணுவக் கூட்டுகளோடு கூட்டுச் சேரா கொள்கையைக் கடைப்பிடிக்கவும் சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றவும் ஏற்ற யதார்த்தச் சூழ்நிலைகள் நிலவுகின்றன.

இளம் சுதந்திர நாடுகளை ஆக்கிரமிப்பு இரா ணுவக் கூட்டுகளுக்குள் இழுக்க மேலைய நாடுகள் செய்த முயற்சிகளுக்குப் பதிலாகக் காலனி நாடு களிலும் சார்பு நாடுகளிலுமுள்ள மக்களுடைய தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றிகர மான வளர்ச்சியின் விளைவாக 60க்களின் துவக்கத் தில் தோன்றிய கூட்டுச்சேரா இயக்கம், சர்வ தேசப் பதட்டநிலைத் தணிவு, ஆயுதக் களைப்பு, உலகெங்கும் சமாதானம், விடுதலை மற்றும் முன் னேற்றத்திற்கான போராட்டத்தில் செல்வாக்கு மிக்கச் சக்தியாகியது.

1961ஆம் ஆண்டு பிப்ரவரியில் பெல்கிரேதில் நடைபெற்ற கூட்டுச் சேரா நாடுகளின் முதல் உயர்மட்ட மகாநாட்டில் 25 நாடுகள் பங்கேற் றன என்ருல், 1983ஆம் ஆண்டு மார்ச் மாதம் டெல்லியில் நடைபெற்ற 7வது மகாநாட்டில் 97 சுதந்திர அரசுகளும் (50 ஆப்பிரிக்க நாடுகள், 27 ஆசிய நாடுகள், 16 லத்தீன் அமெரிக்க நாடு கள், 3 ஐரோப்பிய நாடுகள், பசிபிக் கடல் பிர தேசத்திலிருந்து 1 நாடு) பாலஸ்தீன விடுதலை முன்னணி, SWAPO எனும் தென்மேற்கு ஆப்பிரிக்க மக்கள் ஸ்தாபனம் ஆகிய இரு தேசிய விடுதலை ஸ்தாபனங்களின் தலைவர்களும் கலந்து கொண் டார்கள் என்பதை நினைவு கூர்வதே போது மானது.

கூட்டுச் சேரா இயக்கம் மற்றும் கொள்கை யின் செல்வாக்கு வளரக் காரணம் என்ன? ஆரம் பத்திலிருந்தே ஏகாதிபத்திய எதிர்ப்பும் காலனி எதிர்ப்பும், சமாதான சகவாழ்வு மற்றும் சர்வ

தேசப் பாதுகாப்பு ஆகியவற்றின் பாலான நாட்டமும் இந்த இயக்கத்திற்கு உரித்தானவை.

''கூட்டுச் சேரா இயக்கத்தின் கொள்கையின் சாரமானது, ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், நவீன காலனியாதிக்கம், இனவெறி, ஜியோனிசம் உட்பட நிறவெறி, சகலவித அந்நியத் தாக்குதல், ஆக்கிரமிப்பு, ஆதிக்கம், தலையீடு அல்லது மேலாதிக்கத்தின் வடிவங்கள், மேலாதிக்க வல்லரசுக் கொள்கை மற்றும் கூட்டுக்களின் கொள்கை ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்தில் அடங்கியுள்ளது'' என்று டெல்லி மகாநாட்டின் அரசியல் பிரகடனத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.*

சமாதானத்தைப் பேணிப் பாதுகாக்கும் நம்பிக்கைகள் மட்டுமின்றி, டெல்லி மகாநாட்டின் அரசியல் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டபடி ''மதிப்பு மற்றும் சுதந்திரம், சமத்துவம் மற்றும் ஒத்துழைப்பின் அடிப்படையிலான புதிய உலக முறையைத் தோற்றுவிக்கும்'' நம்பிக்கைகளும் கூட்டுச் சேரா கொள்கையோடு தொடர்பு கொண்டுள்ளன. இது பொருளாதாரத் துறையில் மட்டுமின்றி, சர்வதேச அரசியல் உறவுகளிலும் அடிப்படை மாற்றத்தை முன்னனுமானிக்கிறது.

இன்று எல்லா கண்டங்களிலும் உள்ள நாடுகளையும் மக்களினங்களையும் ஆட்கொண்டுள்ள உலக எதிர்காலம் மற்றும் பாதுகாப்பின் மீதான கவலை, எல்லா சமாதான சக்திகளையும் ஒன்றிணைப்பதில் ஆதரவைத் தேடுமாறு இவர்களைத் தூண்டுகிறது. எனவே அணு ஆயுதப் பேரழிவு

---

* *NAC/Conf. 7/Doc. 1/Rev. 2*, 10.3.1983, p.4.

தோன்றும் அபாயம் அதிகரித்துள்ள சூழ்நிலை களில் பெரும் போர் எதிர்ப்பு, இராணுவவெறி எதிர்ப்புச் சக்தியாகிய கூட்டுச் சேரா இயக்கம் குறிப்பாக விசேஷ முக்கியத்துவத்தைப் பெறு கிறது.

ஏகாதிபத்திய வல்லரசுகள், எல்லாவற்றிற் கும் மேலாக அமெரிக்க ஐக்கிய நாடு, சாராம்ச ரீதியாகப் பார்த்தால் உலக அரசியலின் எல்லா முக்கியப் பிரச்சினைகளிலும் கூட்டுச் சேரா இயக் கத்திற்கு எதிராக நிற்கின்றன. இயக்கத்தை உள்ளிருந்தே குலைப்பது என்பது ஏகாதிபத்தியப் பொது போர்த்தந்திரத்தின் அம்சங்களில் ஒன்று கும். ஏகாதிபத்திய சக்திகளின் தரப்பிலிருந்து மட்டுமின்றி, இந்தச் சக்திகளின் தாக்கத்திற்கு உட்படும் இந்த இயக்கத்தின் சில உறுப்பு நாடு களின் தரப்பிலிருந்தும் வரும் இடையரு நிர்ப் பந்தத்தினல் இயக்கம் பாதிப்பிற்குள்ளாகிறது. இந்த இயக்கத்தின் உள்ளடக்கம் பல்தன்மை யுடையதாயிருப்பதால் அந்தந்த சர்வதேசப் பிரச் சினைகளை அணுகுவதிலும் பல்வேறு அணுகுமுறை கள் வெளிப்படுகின்றன. இதன் அடிப்படையில் முரண்பாடுகள் தோன்றுகின்றன. இவை சில நேரங்களில் இயக்கத்தின் உள்ளேயே பல திட்ட வட்டமான அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்தும் ஏன் அடிக்கடி கூட்டுச் சேரா கொள்கையின் உள்ளடக்கப் பிரச்சினைகள் மீதும் கூட போராட்டத்தைத் தோற்றுவிக்கின் றன. கூட்டுச் சேரா கொள்கையின் ஆரம்ப, அடிப் படைக் கோட்பாடுகளைத் திரித்து கூட்டுச் சேரா நாடுகளின் ஒற்றுமையைக் குலைத்து, சோஷலிச

உலகுடனும் மற்ற முற்போக்குச் சக்திகளுடனும் இந்நாடுகளுக்குள்ள ஒத்துழைப்பு வலுவடைவதைத் தடுக்கவும் முயலும் வட்டங்கள் ஏகாதிபத்தியத்தின் அதிகரித்து வரும் நிர்ப்பந்தத்தின் கீழ் சுறுசுறுப்படைந்துள்ளன. இயக்கத்தின் ஒரு சில உறுப்பு நாடுகள் இதன் ஏகாதிபத்திய எதிர்ப்பு, காலனியாதிக்க எதிர்ப்புப் போக்கைத் தொடர்ந்து பின்பற்றுவதன் அவசியத்தையே மறுக்கின்றன.

கூட்டுச் சேரா இயக்கத்தின் எதிர்காலம் எப்படிப்பட்டது? உள்ளடக்கத்தில் இவ்வளவு வேறுபட்ட அரசுகளின் ஒன்றிணைப்பு தனது ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் நீண்ட காலத்திற்கு அப்படியே வைத்திருக்காது, இவற்றின் இடையேயான முரண்பாடுகளும் வேறுபாடுகளும் கண்டிப்பாக இது கலைந்து போக வழிகோலுமென ஒரு சிலர் கருதுகின்றனர். இந்தக் கண்ணோட்டம் இயக்கத்திலுள்ள ஒரு சில உறுப்பு நாடுகளின் நிலை மீது குறிப்பிட்ட செல்வாக்கைச் செலுத்துகின்றது. இயக்கத்தைத் துண்டு துண்டாக்கி குலைத்து, இறுதியில் அதை பிளவுபடுத்தும் தமது முயற்சிகளில் ஏகாதிபத்தியச் சக்திகள் இதைப் பரவலாகப் பயன்படுத்துவது முற்றிலும் புரியக் கூடியதே.

ஆனால் பெரும்பான்மையான கூட்டுச் சேரா நாடுகள் இத்தகைய கண்ணோட்டங்களையும் கொள்கையையும் நிராகரிக்கின்றன. இதற்கெதிராக இந்நாடுகள், இயக்கத்தைச் சகலவிதங்களிலும் வலுப்படுத்துதல், ஏகாதிபத்திய எதிர்ப்பு, காலனியாதிக்க எதிர்ப்பு, சமாதான செயல்திட்டம்—

இதனோடு கூட சம உரிமையுள்ள, ஜனநாயக அடிப்படையில் சர்வதேச பொருளாதார உறவுகளைச் சீரமைக்கும் செயல்திட்டமும் சமீப ஆண்டுகளில் சேர்ந்து கொண்டது—ஆகியவற்றின் அடிப்படையில் இயக்கத்தின் ஒற்றுமையை உறுதிப்படுத்தும் கொள்கையை முன்வைக்கின்றன.

சோவியத் யூனியன் கூட்டுச் சேரா இயக்கத்தை நவீன சர்வதேச உறவுகளின் மிக முக்கியக் காரணிகளில் ஒன்ருகக் கருதி உலக அரசியலில் கூட்டுச் சேரா நாடுகளின் பாத்திரமும் பங்கேற்பும் அதிகரித்துள்ளதை வரவேற்கிறது. சம உரிமையின் அடிப்படையில் கூட்டுச் சேரா நாடுகள் உட்பட எல்லா அரசுகளின் பங்கேற்பின்றி நம் பூமியின் எல்லா பிரதேசங்களிலுமுள்ள பதட்ட நிலையைக் குறைப்பதும் சர்வதேசப் பிரச்சினைகளை சமாதான வழியில் தீர்ப்பதும் இயலாதது என்று சோவியத் யூனியன் பன்முறைக் கூறி வந்துள்ளது.

முக்கிய சர்வதேசப் பிரச்சினைகளின் மீதான கூட்டுச் சேரா நாடுகளின் நிலைகள்—இவை இந்நாடுகளின் மகாநாடுகளிலும் கூட்டங்களிலும் ஏற்கப்பட்ட ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன—சோவியத் யூனியன், மற்ற சோதர சோஷலிச நாடுகளின் நிலைகளோடு சாராம்சத்தில் ஒத்துள்ளன அல்லது இவற்றிற்கு நெருக்கமானவையாக உள்ளன.

''சமாதானம் மற்றும் மக்களினங்களின் பாதுகாப்பிற்காகவும், ஆயுதப் போட்டியை நிறுத்துவதற்கும் படைக்கலைப்பிற்கும், நியாயமான ஜனநாயக அடிப்படைகளில் சர்வதேசப் பொருளா

தார உறவுகளை மாற்றியமைப்பதற்காகவும், முழுமையாக, சகல விதங்களிலும் காலனியாதிக்கத்தை அகற்றுவதற்காகவும் கூட்டுச் சேரா இயக்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு சோவியத் நாட்டில் எப்போதுமே ஆழ்ந்த ஆதரவு இருந்து வந்துள்ளது, இப்போதும் இருக்கிறது'' என்று கூட்டுச் சேரா இயக்கத்தின் ஏழாவது மகாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கு சோவியத் யூனியனின் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவும் சோவியத் அமைச்சரவையும் விடுத்த செய்தியில் கோடிட்டுக்காட்டப்பட்டிருந்தது.

இந்நூலில் மேலே குறிப்பிடப்பட்ட பிரச்சினைகள் விளக்கப்பட்டுள்ளன, இயக்கத்தின் கோட்பாடுகள் மற்றும் மகாநாடுகளின் முக்கியத் தீர்மானங்களைப் பற்றிய ஆசிரியரின் மதிப்பீடும், இந்த இயக்கத்தின் பால் அமெரிக்க ஐக்கிய நாடும் சோஷலிச முகாம் நாடுகளும் எத்தகைய உறவு முறைகளைக் கடைப்பிடிக்கின்றன என்பது பற்றிய ஆய்வும் அடங்கியுள்ளன.

கூட்டுச் சேரா இயக்கத்தின் எல்லா பிரச்சினைகள் மீதோ அல்லது பெரும்பான்மையான பிரச்சினைகள் மீதோ கவனம் செலுத்துவதை ஆசிரியர் தனது லட்சியமாக வைக்கவில்லை; கூட்டுச் சேரா பிரச்சினைகளைப் பற்றிய சோவியத் விஞ்ஞானிகளின் எல்லா ஆராய்ச்சிகளையுமோ அல்லது குறைந்த பட்சம் இவற்றில் பெரும்பான்மையானவற்றையோ பொதுமைப்படுத்துவது ஆசிரியரின் நோக்கமல்ல. அவரது நோக்கம் இவற்றை விட மட்டானது — ஆவணங்கள், இயக்கத்திலுள்ள உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளின் பேச்சுகள்,

தாமாகவே ஏற்றுக் கொண்ட கடமைகளின் நிறைவேற்றத்தின் நடைமுறை விளைவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் கூட்டுச் சேரா இயக்கத்தின் முக்கியப் பிரச்சினைகள் மற்றும் இதன் எதிர்காலம் பற்றிய தனது கருத்தைத் தெரிவிப்பதே ஆசிரியரின் நோக்கமாகும்.

# அத்தியாயம் ஒன்று

# கூட்டுச் சேரா இயக்கம் எப்படித் தோற்றுவிக்கப்பட்டது

## 1. லட்சியங்கள் மற்றும் கோட்பாடுகள் உருவாதல்

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் உலக நிலவரம் சோஷலிசம் மற்றும் முற்போக்குச் சக்திகளுக்குச் சாதகமாக கணிசமாக மாறியது. பாசிச முறியடிப்பு (இதில் சோவியத் யூனியன் தீர்மான கரமான பங்காற்றியது), கிழக்கு ஐரோப்பாவில் புதிய சோஷலிச அரசுகளின் தோற்றம், சோஷலிச முகாமின் உருவாக்கம், காலனியாதிக்க முறையின் வீழ்ச்சி, பல டஜன் கணக்கான இளம் சுதந்திர அரசுகளின் பிறப்பு ஆகியவற்றின் விளைவாய் ஏகாதிபத்திய ஆதிக்க நிலைகளின் மீது பேரிடி வீழ்ந்தது.

இந்தச் சூழ்நிலைகளில் ஏகாதிபத்திய வட்டங்கள், எல்லாவற்றிற்கும் மேலாக அமெரிக்க ஐக்கிய நாடு, சோவியத் யூனியன் மற்றும் இதர சோஷலிச நாடுகளுக்கு எதிராக வெளிப்படையான பகைமை மற்றும் இராணுவத் தயாரிப்புகளின் பாதையை மேற்கொண்டன, ''கெடுபிடி யுத்தத்தை''[1] மூட்டி விட்டன, ஆக்கிரமிப்பு இராணுவக் கூட்டுகளை உருவாக்க ஆரம்பித்தன. 1947ஆம் ஆண்டு செப்டெம்பரில் அமெரிக்க

ஐக்கிய நாடுலத்தீன் அமெரிக்க நாடுகளின் மீது மேற்கு கோளகர்த்த பாதுகாப்பு ஒப்பந்தத்தைத் திணித்தது. 1949ஆம் ஆண்டு ஏப்ரலில் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்தம் கையெழுத்தாகி வட அட்லாண்டிக் ஒப்பந்த ஸ்தாபனமாகிய **நேட்டோவை**[2] உருவாக்கியது. 1951ஆம் ஆண்டு செப்டெம்பரில்அமெரிக்க ஐக்கிய நாடு, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்திற்கு இடையேயானஇராணுவக் கூட்டு ஒப்பந்தம் **(அன்ஜியூஸ்**[3]**)** செய்து கொள்ளப் பட்டது. 1954ஆம் ஆண்டு செப்டெம்பரில் அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன், பிரான்ஸ், ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, பாகிஸ்தான், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் அடங்கிய **ஸியாட்டோ**[4] எனும் இராணுவ அரசியல் கூட்டு தோற்றுவிக்கப்பட்டது. 1955ஆம் ஆண்டு பிப்ரவரியில் இராக்கிற்கும் துருக்கிக்கும் இடையில் பாக்தாத் ஒப்பந்தம் கையெழுத்தானது; பிரிட்டன், பாகிஸ்தான், இரான் ஆகிய நாடுகள் இதில் சேர்ந்து கொண்டன (1959இல் இராக் இதிலிருந்து வெளியேறிய பின் இதன் பெயர் **சென்டோ**[5] என்று மாற்றியமைக்கப்பட்டது).

இத்தகைய இராணுவ அரசியல் கூட்டுகளை யும் சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடு களைச் சுற்றியுள்ள இராணுவத் தளங்களையும் ஏகாதிபத்தியம் தேசிய விடுதலை இயக்கங்களுக்கு எதிரான போராட்டத்திற்குப் பயன்படுத்தியது.

இராணுவத் தாக்குதல் அபாயம் மேன்மேலும் அதிகரித்து வரும் சூழ்நிலையில் சோவியத் யூனிய னும் கிழக்கு ஐரோப்பாவில் உள்ள சோஷலிச நாடுகளும் 1955ஆம் ஆண்டு மே மாதத்தில் நட்பு,

ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி பற்றிய ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன. இதுவே வார்சா ஒப்பந்தம் என்றழைக்கப்படுகிறது.

இளம் அரசுகள்—முன்பு காலனியாதிக்கத்தின் கீழும் அரைகாலனியாதிக்கத்தின் கீழுமிருந்த நாடுகள் — உலகில் எதிரெதிரான சமூக முறைகளும் ஒன்றை ஒன்று எதிர்த்து நிற்கும்இராணுவக் கூட்டுகளாகிய நேட்டோவும் வார்சா ஒப்பந்தமும் நிலவும் ஒரு சிக்கலான சர்வதேசச் சூழ்நிலையில் விடப்பட்டன. இந்த நிலைமைகளில் ஏகாதிபத்தியம், முந்தையக் காலனி மற்றும் சார்பு நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்திய நாடுகளுக்கு இன்னமும் இருந்த செல்வாக்கையும் தொடர்புகளையும் மற்றும் இளம் அரசுகளின் பொருளாதார சார்பு நிலையையும் பயன்படுத்தி இவற்றை சோஷலிச நாடுகளுக்கு எதிராயும் முற்போக்கு சமுதாய மாற்றங்கள், உண்மையான சுதந்திரத்தை அடையும் பாதைக்கு வந்த மற்ற நாடுகளுக்கு எதிராயும் நிறுத்தும் தனது முயற்சிகளைக் கைவிடவில்லை.

இப்படிப்பட்டதொரு சூழ்நிலையில், ஒரு புறம் இராணுவ அரசியல் கூட்டுகளில் பங்கேற்காது, மறுபுறம் வென்று பெற்ற அரசுரிமையைப் பாதுகாக்கவும் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் பொது சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வகை செய்யவும் அதிகபட்ச அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கக் கூடிய வெளிவிவகாரக் கருத்தமைப்புகளை உருவாக்கும் வழிகளைத் தேடுமாறு வளர்ச்சியுறும் நாடுகள் நிர்ப்பந்திக்கப்பட்டன. கூட்டுச் சேரா கொள்கை அல்லது சில

நேரங்களில் குறிப்பிடப்பட்டபடி ஆக்கபூர்வமான நடுநிலைக் கொள்கைதான் இத்தகைய அரசியல் கருத்தமைப்பாகும். இது ஒரு நிலையுருவற்ற அமைதிவாதமோ அல்லது இராணுவ அரசியல் கூட்டுகளில் வெறுமனே பங்கேற்காது இருப்பதோ அல்ல. கூட்டுச் சேரா கொள்கை தனிமைப்பட்டு கிடக்க வேண்டுமென கூறவில்லை, மாறாக எல்லா நாடுகளுடனும் சம உரிமையுள்ள உறவுகளை ஏற் படுத்தி வளர்க்க வேண்டும், வளர்ச்சியுறும் நாடு களுக்கு இடையே ஒத்துழைப்பு வேண்டும், பொரு ளாதார சுதந்திரத்திற்காகப் போராட வேண்டும் என்று முன்மொழிந்தது. தமது தேசிய சுதந்திரத் தையும் மக்களினங்களின் சட்ட பூர்வமான உரி மைகளையும் பாதுகாப்பதில் இளம் சுதந்திர நாடு களுக்கு உள்ள உறுதியின் பயனாய் கூட்டுச் சேரா இயக்கம் தோன்றியது.

ஐ.நா. சங்க விதிமுறைகளின் கோட்பாடு கள், லட்சியங்கள், பொதுச் சபை மற்றும் பாது காப்புக் கவுன்சிலின் தீர்மானங்கள் கூட்டுச் சேரா இயக்கத்தின் சர்வதேச சட்ட அடிப்படையாக ஆயின. வேறுபட்ட சமூக அரசியல் முறைகளை உடைய அரசுகளின் சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளை ஒப்புக் கொள்வது இவற்றில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இயக்க உறுப்பு நாடுகளின் சந்திப்புகள், மகாநாடுகளின் தீர்மா னங்கள் ஐ.நா. சங்க விதிமுறைகளின் கோட்பாடு களுக்கு ஏற்றதாக உள்ளன. அரசியல் கண்ணோட் டத்திலிருந்து பார்க்கும் போது கூட்டுச் சேரா இயக்கத்திற்கு இரண்டு முக்கிய அம்சங்கள் உண்டு என்பது தெரிகிறது. முதலாவதாக, இது அரசு

களின் தேசிய சுதந்திரத்திற்கு வகை செய்ய கணிசமான அளவு துணை புரிகிறது. ஏனெனில் ஆக்கிரமிப்புக் கூட்டாகிய நேட்டோ, பாதுகாப்பு தன்மையுடைய வார்சா ஒப்பந்தம் எனும் இரு இராணுவ அரசியல் கூட்டுகளின் பகைமையுடன் தொடர்புடைய எந்த ஒரு இராணுவக் கூட்டிலும் கலந்து கொள்ள கூட்டுச் சேரா நாடுகள் மறுக்கின்றன. இரண்டாவதாக, கூட்டுச்சேரா கொள்கையானது, ஐ.நா. சங்க விதிமுறைகளின் கோட்பாடுகளின் நிறைவேற்றத்திற்கான போராட்டத்தில், முக்கியமாக இளம் அரசுகளின் வளர்ச்சிக்கும் இவற்றின் தேசிய சுதந்திரத்தை வலுப்படுத்துவதற்குமான அனுகூலமான சூழ்நிலைகளுக்கு வகை செய்ய வல்ல சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளின் நிறைவேற்றத்திற்கான போராட்டத்தில் அரசுகளின் தீவிரப் பங்கேற்பை முன்னனுமானிக்கிறது.

பெரும்பான்மையான ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் காலனியாதிக்க முறை வீழ்ச்சியடைந்து அரசியல் சுதந்திரம் பெற்ற பின் கூட்டுச் சேரா கோட்பாடுகளின் பாலான தமது ஆதரவைத் தெரிவித்தன என்றால் லத்தீன் அமெரிக்காவில் கூட்டுச் சேரா இயக்கத்திற்கு மாறிச் செல்லும் போக்கிற்குத் தனிச் சிறப்பியல்புகள் இருந்தன.

இரண்டாம் உலக யுத்தத்தின் இறுதியில் லத்தீன் அமெரிக்காவில் 24 அரசுகளும் 20 ஓரளவு சிறிய காலனி பிரதேசங்களும்—பெரும்பாலும் கரிபியக் கடற் பகுதியிலிருந்த தீவுகளில்—இருந்தன. பெரும்பான்மையான லத்தீன் அமெரிக்க நாடுகள் சென்ற நூற்றாண்டின் துவக்கத்திலேயே

அரசியல் சுதந்திரத்தைப் பெற்று முதலாளித்துவ வளர்ச்சியில் கணிசமான பாதையைக் கடந்து வந்துள்ளன. அமெரிக்க ஐக்கிய நாட்டு ஏகபோகங்களை நிதிக்காகவும் பொருளாதார ரீதியாகவும் இவை சார்ந்துள்ளதும் எனவே அமெரிக்க ஐக்கிய நாட்டின் மீதான அரசியல் சார்பு நிலையும்தான் இந்நாடுகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான முக்கியத் தடையாகியது.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் லத்தீன் அமெரிக்க நாடுகளில் பெரும் பண்ணைகளை ஒழிப்பதற்காக பெரும் நிலச்சுவாந்தார்களுக்கு எதிரான போராட்டமும் (இப்பிரதேச மக்களில் 2/3 பங்கினர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர்) உழைப்பாளிகளின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டமும் கூர்மையடைந்ததோடு கூட ஏகபோகங்களின் ஒடுக்குமுறையிலிருந்து மக்களை விடுவிப்பதற்கான போராட்டமும் வெடித்தது. தேசிய முதலாளி வர்க்கத்தின் குறிப்பிட்ட ஒரு பகுதியும் பல சமூகப் பொருளாதார மாற்றங்களை நிறைவேற்றுவதிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் செல்வாக்கை மட்டுப்படுத்துவதிலும் அக்கறை கொண்டிருந்தது.

1945ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடு, அந்நிய மூலதனத்தை தொடக் கூடாதென்பதை நோக்கமாகக் கொண்டு பரஸ்பர உதவி மற்றும் அமெரிக்க ஒருமைப்பாட்டைப் பற்றிய சபுல்தெபேக் பிரகடனத்தையும்[6] பொருளாதார சாசனத்தையும் லத்தீன் அமெரிக்க நாடுகள் மீது திணித்தது. ஏற்கெனவே குறிப்பிடப்பட்டபடி 1947ஆம் ஆண்டு லத்தீன் அமெரிக்க நாடுகளை

பென்டகனின் இராணுவத் திட்டங்களுக்கு உட்படுத்தி இவற்றை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் போர்த்தந்திர பின்னணியாக மாற்றும் நோக்கத்தோடு ''மேற்கு கோளகர்த்த பாதுகாப்பு ஒப்பந்தத்தினுள்'' இந்நாடுகளை அமெரிக்க ஐக்கிய நாடு இழுத்தது.

அமெரிக்க ஐக்கிய நாடு மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பொருட்படுத்தாது ஏகாதிபத்திய ஆதிக்கம், ஸ்தல பிற்போக்கு, குறிப்பாக இராணுவ சர்வாதிகார முறைகள் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டம் வலுவடைந்தது. லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஜனநாயக, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் வளர்ச்சி, கியூபாவில் மக்கள் புரட்சியின் வெற்றி (1959), கொலம்பியா, வெனிசுலா, பெரு போன்ற பல நாடுகளில் ஏற்பட்ட நல்ல மாற்றங்கள் ஆகியன, அமெரிக்க ஏகபோகங்களைச் சார்ந்துள்ள நாடுகளில் கூட அமெரிக்க ஐக்கிய நாடு மேன்மேலும் அதிகரித்து வரும் மக்கள் எதிர்ப்பை சந்தித்து இன்னல்களை எதிர்கொள்கிறது என்பதை இன்னுமொரு முறை காட்டின. இப்பிரதேசத்திலுள்ள பல நாடுகளுக்குக் கூட்டுச்சேரா கொள்கை என்பது தேசிய அரசுரிமையின் பாதுகாப்பையும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதிக்கம் பலவீனமடைவதையும் குறித்தது. நவீன காலனியாதிக்க நோக்கங்களுக்காக அமெரிக்க ஐக்கிய நாட்டால் தோற்றுவிக்கப்பட்ட ''ஒப்பந்தங்களிலும்'' ''சாசனங்களிலும்'' பங்கேற்ற நீண்டகால ''அனுபவத்திற்குப்'' பின்னர்தான்

லத்தீன் அமெரிக்க நாடுகள் கூட்டுச் சேரா கொள் கைக்கு வந்தன.

கூட்டுச் சேராக் கொள்கை முதன்முதலாக ஜவஹர்லால் நேருவால் உருவாக்கப்பட்டது. இந்திய இடைக்கால அரசாங்கத்தின் துணைப் பிரத மராக இருந்த நேரு 1946ஆம் ஆண்டு செப் டெம்பர் 7ஆம் தேதி இந்திய வானொலியில் உரை யாற்றுங்காலே, நாட்டின் வெளிவிவகாரக் கொள் கையின் முக்கியக் கோட்பாடுகளைப் பற்றிக் குறிப் பிடும் போது இந்தியா, அரசுகளின் குழுக்கள், இராணுவ அரசியல் கூட்டுகளுக்கு வெளியில் இருக்குமென்றும் அதே நேரத்தில் எல்லா நாடு களுடனும் நட்புறவுகளை வைத்துக் கொள்ள முயலும் என்றும் அறிவித்தார். 1947ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சுதந்திர இந்தியாவின் பிரத மராக இருந்த நேரு அரசியல் நிர்ணய சபையில் ஆற்றிய உரையில் அயல்நாட்டுக் கொள்கையின் இந்தக் கோட்பாட்டை ஊர்ஜிதப்படுத்தி வளர்க் கிறார். இந்திய ஆராய்ச்சியாளர்களின் கருத்துப் படி, கூட்டுச் சேரா சித்தாந்தத்தை முற்றிலும் இந்திய தேசிய நலன்களை வழிகாட்டியாகக் கொண்டுதான் நேரு உருவாக்கினர். பின்னல்தான் அவர் இதை அயல்நாட்டுக் கொள்கையின் அடிப் படையாக மற்ற ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளுக்கு முன்மொழிந்தார்.*

1954 ஏப்ரலில் நடைபெற்ற இந்திய- சீன பேச்சுவார்த்தைகள் கூட்டுச் சேரா கொள் கையின் கோட்பாடுகளை மேற்கொண்டு வளர்ப்ப

---

* உதாரணமாக, J. Malhotra, *Beyond the Delhi Summit*. — *Times of India*, March 17, 1983.

தில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்கின. இப்பேச்சுவார்த்தைகளின் போது திபெத்தின் அந்தஸ்து பற்றிய உடன்படிக்கை கையெழுத்தாகையில் இந்தியத் தூதுக் குழுவின் முன்மொழிவின் பேரில் ''பஞ்சசீலம்'' எனும் ஐந்து கோட்பாடுகள் ஏற்கப்பட்டன. பிரதேச முழுமையையும் அரசுரிமையையும் பரஸ்பரம் மதித்தல், ஒருவரையொருவர் தாக்காதிருத்தல், மற்றவரின் உள் விவகாரங்களில் தலையிடாதிருத் தல், சமத்துவம் மற்றும் பரஸ்பர ஆதாயம், சமாதான சகவாழ்வு ஆகியவையே இந்த ஐந்து கோட்பாடுகளாகும். பல இளம் அரசுகள் கூட்டுச் சேராமையின் அரசியல் மற்றும் சட்ட அடிப் படையாக இந்த ''பஞ்சசீலக்'' கோட்பாடுகளை அங்கீகரித்து ஆமோதித்தன. ஆசிய-ஆப்பிரிக்க ஒற்றுமை, ஏகாதிபத்தியம் மற்றும் நவீன காலனி யாதிக்கத்திற்கு எதிரான கூட்டுப் போராட்டங் கள் ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்கள் ஆக்கிர மிப்பு இராணுவ அரசியல் கூட்டுகளில் அங்கம் வகித்த வளர்ச்சியுறும் நாடுகளில் கூட மேன் மேலும் ஆதரவைப் பெற்றன.

பாண்டுங்கில் (இந்தோனேசியா, 1955, ஏப்ரல் 18—24) நடைபெற்ற மகாநாடு சமா தான சகவாழ்வுக் கோட்பாடுகளின் அடிப்படை யில் வளர்ச்சியுறும் நாடுகளை நெருங்கி வரச் செய்வதில் ஒரு முக்கிய கட்டமாக அமைந்தது. இம்மகாநாட்டில் பங்கேற்றவர்கள்* ஆசிய,

---

* மகாநாட்டில் கலந்து கொண்ட 29 நாடு களில் 8 நாடுகள் மட்டுமே (இந்தியா, பர்மா, இந்தோனேசியா, லாவோஸ், கம்போடியா,

ஆப்பிரிக்க நாடுகளின் பொது பிரச்சினைகளை ஆராய்ந்து அதிக முழுமையான பொருளாதார, கலாச்சார, அரசியல் ஒத்துழைப்பிற்கு வகை செய்ய உதவக் கூடிய பாதைகளையும் முறை களையும் விவாதித்தனர்.

நிறவெறியைக் கண்டித்த மகாநாடு ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் நிறவெறியின் சகலவித சுவடுகளும் ஒழித்துக் கட்டப்பட வேண்டுமென் றது. மகாநாட்டில் கலந்து கொண்ட நாடுகள் காலனிமுறை முற்றிலுமாக ஒழித்துக் கட்டப்படு வதன் அவசியத்தை எடுத்துரைத்து பாலஸ்தீனப் பிரச்சினை பற்றிய ஐ.நா. சங்கத் தீர்மானத்தை நிறைவேற்றும்படி அறைகூவல் விடுத்தது. ஆயுதக் களைப்பிற்கு ஆதரவாயும், அணு ஆயுதங்களையும் தெர்மோ அணு ஆயுதங்களையும் உற்பத்தி செய் வது, சோதிப்பது, பயன்படுத்துவதைத் தடை செய்ய வேண்டுமென்றும் மகாநாடு கருத் துரைத்தது.

**பொது சமாதானத்திற்கும் ஒத்துழைப்பிற்கும் துணைபுரியும் பிரகடனம்**தான் பாண்டுங்கின் மிக முக்கிய ஆவணமாகும். இதில் மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் சுயநிர்ணயத்தின் பால் எல்லா மக்களினங்களுக்கும் உள்ள பிரிக்க இயலா உரிமையையும் ஐ.நா. சங்க விதிமுறை

---

ஆப்கானிஸ்தான், நேப்பாளம், எகிப்து) இராணுவ கூட்டுகளில் சேரக் கூடாது எனும் கோட்பாட் டைப் பின்பற்றின; 6 அரசுகள் (தென் வியட்நாம், இரான், தாய்லாந்து, துருக்கி, பிலிப்பைன்ஸ், ஜப்பான்) அமெரிக்காவுடன் இராணுவத் தன்மை யுள்ள உடன்பாடுகளை வைத்திருந்தன.

களுக்கேற்ப அரசியல், பொருளாதார அமைப்புகள் மற்றும் வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தையும் ஒருமனதாக ஊர்ஜிதப்படுத்தினர்கள். இவர்கள் அரசுகளுக்கு இடையிலான உறவுகளின் கோட்பாடுகளை* உரு

---

* 1. அடிப்படை மனித உரிமைகளையும் ஐ.நா.சங்க விதிமுறைகளின் லட்சியங்கள் மற்றும் கோட்பாடுகளையும் மதித்தல்.

2. எல்லா நாடுகளின் பிரதேச முழுமையையும் அரசுரிமையையும் மதித்தல்.

3. சிறிய, பெரிய, சகலவித மக்களினங்களின், எல்லா இனத்தவரின் சமத்துவத்தை அங்கீகரித்தல்.

4. இன்னெரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடாதிருத்தல், ஆக்கிரமிப்பில் இறங்காதிருத்தல்.

5. ஐ.நா. சங்க விதிமுறைகளுக்கேற்ப தனிஅல்லது கூட்டுப் பாதுகாப்பிற்கு ஒவ்வொரு நாட்டிற்கும் உள்ள உரிமையை மதித்தல்.

6. a) கூட்டுப் பாதுகாப்பைப் பற்றிய உடன்பாட்டை ஏதாவதொரு பெரும் வல்லரசின் தனிப்பட்ட நலன்களுக்காகப் பயன்படுத்தாமல் இருத்தல்.

b) எந்த ஒரு நாடும் இன்னெரு நாட்டை நிர்ப்பந்திக்காது இருத்தல்.

7. எந்த ஒரு நாட்டின் பிரதேச முழுமை அல்லது அரசியல் சுதந்திரத்திற்கு எதிராக ஆக்கிரமிப்பு செய்யாதிருப்பது, ஆக்கிரமிப்பதாக அச்சுறுத்தக் கூடாது, பலத்தைப் பிரயோகிக்கக் கூடாது, பிரயோகிப்பதாக அச்சுறுத்தக் கூடாது.

8. சகலவித சர்வதேச தகராறுகளையும் பேச்சுவார்த்தைகள், சமரசம், மத்தியஸ்தம் போன்ற அமைதியான வழிகளிலோ அல்லது நீதிமன்றத்திலோ அல்லது ஐ.நா. சங்க விதிமுறை

வாக்கினுர்கள். இவை ''பஞ்சசீலக்'' கோட்பாடு களின் மேற்கொண்ட வளர்ச்சியாக விளங்கின.

1956 ஜூலையில் பிரியோனி தீவில் (யுகோஸ்லாவியா) இ.பி. டிட்டோவிற்கும் க.அ. நாசருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு கூட்டுச் சேரா இயக்கம் பற்றிய கருத்தின் மேற்கொண்ட வளர்ச்சிக்குப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த தாக அமைந்தது. இதில் ஏற்கப்பட்ட கூட்டறிக்கையில் இரு தரப்பினரும் பாண்டுங் மகாநாட்டு கருத்துக்களின் பாலான தமது ஆதரவை ஊர்ஜிதப்படுத்தி சர்வதேசப் பதட்ட நிலைத் தணிவிற்கும் அணு ஆயுத யுத்த அபாயத்தை அகற்றுவதற்கும் ஆதரவாகக் கருத்துரைத்தனர். ''நியாயமான அடிப்படை உரிமைகளை வெற்றிகரமாகக் காத்து நின்று சர்வதேச நிகழ்ச்சிப் போக்குகளின் மீது செல்வாக்கு செலுத்த எமது இந்த முயற்சிகளை ஒன்றிணைப்பது அவசியமாயிருந்தது. எங்களிடையே நிலவிய எல்லா வேறுபாடுகளையும் பொருட்படுத்தாது நேருவும் நாசரும் நானும்—பின்னல் சுகர்னேவும் நுக்ருமாவும் மற்றவர்களும் எங்களுடன் சேர்ந்து கொண்டனர்—ஒரே மாதிரியாகச் சிந்தித்தோம், ஒரே லட்சியத்தை நாடினேம், கூட்டுச் சேரா இயக்கத்தைத் தோற்றுவிக்கும் நோக்கத்தோடு உடனடியான நடவடிக்

---

களுக்கேற்ப தரப்புக்கள் முடிவு செய்யும் இதர அமைதியான வழிகளிலோ தீர்ப்பது.

9. பரஸ்பர நலன்களுக்கும் ஒத்துழைப்பிற்கும் உதவி செய்வது.

10. நியாயத்தையும் சர்வதேச வரையளவுகளையும் மதித்தல்.

கைகளை மேற்கொண்டோம்''* என்று பின்னுல் இ.பி. டிட்டோ நினைவு கூர்ந்தார்.

## 2. கூட்டுச் சேரா இயக்கத்தின் மூலவர்கள்

ஜவஹர்லால் நேரு, இயோசிப் டிட்டோ, கமால் அப்துல் நாசர், சுகர்னே, க்வாமே நுக்ருமா ஆகியோர் கூட்டுச் சேரா இயக்கத்தின் மூலவர்களாக உரிமையுடன் கருதப்படுகின்றனர். உதாரணமாக, ஹவானுவில் நடைபெற்ற கூட்டுச் சேரா இயக்கத்தின் 6வது மகாநாட்டில் சில ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் சார்பாய் உரையாற்றிய கினி குடியரசின் ஜனுதிபதி செக்கு துரே இவர்கள் ஆற்றிய மகத்தான பாத்திரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். ''தமது நடவடிக்கையாலும், முரணற்ற தன்மையாலும், தமது பங்காலும் செல்வாக்காலும் தனித்து மிளிர்ந்த அரசுப் பிரமுகர்கள் கூட்டுச் சேரா இயக்கத்தில் எப்போதுமே இருந்து வந்துள்ளனர்''** என்று யுகோஸ்லாவிய ஆராய்ச்சியாளர் டாக்டர் ரான்கோ பித்கோவிச் கருதுகிறுர்.

ஏற்கெனவே மேலே குறிப்பிடப்பட்டபடி, கூட்டுச் சேரா இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை வகுத்த பெருமை ஜவஹர்லால் நேருவைச் சாரும். தேசிய விடுதலை இயக்கங்கள்,

---

* சர்வதேச அரசியல், பெல்கிரேத், எண் 704-5, ஆகஸ்டு 20, 1979, பக்கம் 15.

** சர்வதேச அரசியல், எண் 714, 1980, பக்கம் 16.

காலனியாதிக்கம், நவீன காலனியாதிக்கம் மற்றும் நிறவெறிக்கு எதிரான போராட்டம் ஆகியவற்றைத் தீவிரமாக ஆதரிப்பது என்பது இந்தியா விடுதலை அடைந்த பின் இந்திய வெளிவிவகாரக் கொள்கையின் முக்கிய அங்கமாக மாறியது. நேரு காலத்திய இந்தியா, கொரியாவில் யுத்தத்தை[7] நிறுத்துவதில் குறிப்பிட்ட பங்காற்றியது, பல்வேறு ஸ்தல சச்சரவுகளை நிறுத்த வேண்டுமென்றும் இராணுவக் கூட்டுகளையும் தளங்களையும் தோற்றுவிப்பதற்கு எதிராயும் மற்றவர் பிரதேசங்களிலிருந்து அந்நியத் துருப்புகள் வெளியேற்றப்பட வேண்டுமென்று கோரியும் சர்வதேச மேடைகளில் தொடர்ச்சியாகப் போராடியது.

''பஞ்சசீலக்'' கோட்பாடுகளைக் கூட்டுச்சேராக் கொள்கையின் அரசியல் மற்றும் சட்ட அடிப்படையாகப் பயன்படுத்த வேண்டுமென நேருதான் முதன் முதலாக முன்மொழிந்தார். உலக அரங்கில் விடுதலையடைந்த நாடுகளின் தீவிர சமாதான அரசியல் போக்காகக் கூட்டுச் சேராக் கொள்கையை உருவாக்கியதில் முக்கியப் பங்கு இவரைத்தான் சாரும். கூட்டுச் சேராக் கொள்கையைப் பற்றி நேரு கொண்டிருந்த கருத்து உலகப் பிரச்சினைகளின் தீர்வின் மீது கூட்டுச் சேரா அரசுகளின் தீவிர தாக்கத்தை முன்னனுமானிக்கிறது. பாண்டுங் மகாநாட்டிற்கு ஏற்பாடு செய்த முக்கிய நபர்களில் இவரும் ஒருவர். இந்தியத் தூதுக்குழுவின் செல்வாக்கின் கீழ் மகாநாட்டின் தீர்மானங்களில் முக்கியக் கவனம், சமாதானத்திற்கு வகை செய்தல், ஆயுதக்

கலப்பு மற்றும் யுத்தத்தைத் தடுத்து நிறுத்துதல் ஆகிய மிக இன்றியமையா பிரச்சினைகளின் மீது செலுத்தப்பட்டது.

உலகில் உள்ள எல்லா முற்போக்கு சக்திகளுடனும் கூட்டை ஏற்படுத்த, ஒற்றுமையை நிலை நாட்ட நேரு இடையறாது பாடுபட்டு வந்தார் என்பதைக் குறிப்பிட வேண்டும். உதாரணமாக, தன் சுயசரிதையில் அவர் பின்வருமாறு எழுதினார்: ''சுதந்திரத்திற்கான போராட்டம் என்பது ஏகாதிபத்தியம் எனும் பொது எதிரிக்கு எதிரான பொதுப் போராட்டமாகும் என்பதும், இந்த லட்சியத்திற்குக் கூட்டாக செயல்திட்டத்தை வகுப்பதும் இயன்ற வரை கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் சிறந்தது என்பதும் மேன் மேலும் தெளிவாயிற்று''.* கூட்டுச் சேராக் கொள்கையின் சாரத்தை விளக்கிய நேரு எழுதினார்: ''எந்த ஒரு இராணுவக் குழுவிலும் தான் சேரப் போவதில்லையென இந்தியா அறிவித்தால்... இதற்கும் நடுநிலைமைக்கும் செயலின்மைக்கும் அல்லது இது போன்ற ஏதாவது விஷயங்களுக்கும் பொதுவானது எதுவுமேயில்லை... சுதந்திரமும் நியாயமும் அச்சுறுத்தப்பட்டால், ஆக்கிரமிப்பு நடந்தால் எங்களால் நடுநிலையிலிருக்க முடியாது, இருக்கவும் மாட்டோம்.''**

நேரு அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கை மேலைய வல்லரசுகளிடம் அதிருப்தி

---

* Nehru J., *An Autobiography*, New Delhi, 1982, p. 161.

** *Jawaharlal Nehru's Speeches*, Volume One. September 1946—May 1949. Delhi, 1958, pp. 202—203.

யைத் தோற்றுவித்தது. இந்தியாவின் மீதான ஏகாதிபத்தியத்தின் நிர்ப்பந்தம் அதிகமாகியது. அந்தக் கடினமான சூழ்நிலைகளில் கூட்டுச் சேராக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருந்த இந்திய வெளிவிவகாரக் கொள்கையை நேரு தொடர்ந்து காத்து நின்று காப்பாற்றினர் என்பதில்தான் அவருடைய அரிய சேவை அடங்கியுள்ளது.

பெல்கிரேதில் முதல் கூட்டுச்சேரா மகாநாட்டைக் கூட்டியதற்கும் இதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்களுக்கும் வெற்றிக்கும் முக்கியக் காரணம் இந்தியாவின் தீவிர நடவடிக்கைகளும் முதலாவதாக நேருவின் படைப்பாற்றல் மிக்க ஸ்தாபன அமைப்பு முயற்சிகளும் ஆகும். நேருவின் மறைவிற்குப் பின் (1964) இவரையடுத்து வந்த லால் பகதூர் சாஸ்திரியும் குறிப்பாக இந்திரா காந்தியும்* கூட்டுச் சேரா நாடுகளின் மகாநாடுகளிலும் சந்திப்புகளிலும் தீவிரப் பங்கேற்று நேரு உருவாக்கிய வெளிவிவகாரக் கொள்கையை முற்றிலுமாகப் பின்பற்றினர்கள். இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், இதன் ஏகாதிபத்திய எதிர்ப்பு, போர் எதிர்ப்பு, காலனியாதிக்க எதிர்ப்பு, நிறவெறி எதிர்ப்புப் போக்கு ஆகியவற்றைக் காத்து

---

* இந்தியாவின் பிரதமரும், கூட்டுச் சேரா இயக்கத்தின் பிரபல தலைவருமான திருமதி இந்திரா காந்தி 1984ஆம் ஆண்டு அக்டோபர் 31 தேதி சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தக் கொடும்பாதகச் செயல் மனித குலம் முழுவதையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.—ப-ர்.

நிற்கவும் இயக்கத்திலுள்ள அணிகளின் ஒற்றுமைக்காகவும் நடைபெறும் போராட்டத்தில் இந்திரா காந்தியின் பங்கு மகத்தானது. கூட்டுச் சேரா நாடுகளின் ஏழாவது மகாநாட்டிற்கான தயாரிப்புகளைச் செய்து அதை வெற்றிகரமாக நடத்தியதில் இந்திரா காந்தி மிகப் பெரும் பங்காற்றினர்.

ஏகாதிபத்தியத்தின் நேரடியான நிர்பந்தத்தை அனுபவித்த யுகோஸ்லாவியாவின் முன், அரசியல், வர்த்தக, பொருளாதாரத் தொடர்புகளைப் பன்முகப்படுத்தி விரிவாக்கவும் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் அரசியல் ஆதரவைப் பெறவும் வகை செய்ய வல்ல வெளிவிவகாரக் கொள்கையை உருவாக்கும் அவசியம் தோன்றிய போது, 50க்களில் அந்த நாட்டில் கூட்டுச் சேராக் கொள்கை உருவெடுக்கத் துவங்கியது. உதாரணமாக, இ.பி. டிட்டோவின் இந்திய விஜயத்தின் முடிவில் (1954, டிசம்பர் 22) ஏற்கப்பட்ட இறுதி அறிக்கை யுகோஸ்லாவியா கூட்டுச் சேராக் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டதற்கு எடுத்துக்காட்டாக இருக்கக் கூடும். இதில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''தமது அரசாங்கங்கள் ஏற்று கடைபிடிக்கும் கூட்டுச் சேராக் கொள்கை என்பது ''நடுநிலைமையோ'' அல்லது ''அக்கறையின்மையோ'' அல்ல என்றும் எனவே சில நேரங்களில் கூறப்படுவதைப் போல் செயலின்மையல்ல என்றும் மாருக எதன் அடிப்படையில் மட்டுமே கூட்டுப் பாதுகாப்பு சாத்தியமோ அந்தக் கூட்டு சமாதானத்தை நாடும் தீவிர நேர்படியான, ஆக்க

பூர்வமான கொள்கை என்றும் யுகோஸ்லாவியக் குடியரசின் ஜனுதிபதியும் இந்தியப் பிரதமரும் அறிவிக்கின்றனர்''.*

கூட்டுச் சேரா இயக்கத்தின் பூகோள வரம்பு களே விரிவுபடுத்தும் முன்மொழிவை டிட்டோ முன்வைத்தார். 1959ஆம் ஆண்டின் இறுதியில் அவர் இந்தோனேசியா, பர்மா, இந்தியா, இலங் கை (இன்றைய ஸ்ரீலங்கா), எத்தியோப்பியா, சூடான், எகிப்து, சிரியா ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார். இந்நாடுகளில் நடந்த பேச்சு வார்த்தைகளின் போது எல்லா கூட்டுச் சேரா நாடுகளின் அரசு மற்றும் அரசாங்கத் தலேவர்களின் மகாநாட்டைக் கூட்டும் பிரச்சினே விவாதிக்கப்பட்டது.

எகிப்தைப் பொறுத்தமட்டில் கூட்டுச் சேரா இயக்கத்தை நோக்கிய இதன் பாதை சிக்கலான தாயிருந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும். இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் சம்பிரதாய ரீதியாக சுதந்திர அரசாக இருந்த எகிப்து உண் மையில் முன்னர் ஆதிக்கம் செலுத்திய கிரேட் பிரிட்டனின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. 1952ஆம் ஆண்டு ஜுலேயில்தான் நாட்டுப்பற்று உணர்வுள்ள எகிப்து இராணுவ அதிகாரிகள் கமால் அப்துல் நாசரின் தலேமையில் பரூக் அரசனின் ஆளுகையை முறியடித்து ஆட்சியைக் கைப்பற்றினர், எகிப்து (ஜுலே) புரட்சியின் துவக் கத்திற்கு வழி கோலினர். எகிப்தில் நிலச் சீர் திருத்தம் நிறைவேற்றப்படத் துவங்கியது; 1954

---

* போர்பா, டிசம்பர் 25, 1954.

அக்டோபரில் பிரிட்டன், சூயஸ் கால்வாய் பிர தேசத்திலிருந்து தன் படைகளை மீட்டழைக்கும் உடன்படிக்கையில் கையெழுத்திடும் கட்டாயத் திற்குள்ளானது. 1956 ஜூனில் ''சோஷலிச மற்றும் கூட்டுறவு சமுதாயத்தின்'' கட்டுமானத் தைப் பிரகடனப்படுத்திய புதிய அரசியலமைப்புச் சட்டம் ஏற்கப்பட்டது. ஆயினும் இந்நாட்டில் பிரிட்டனின் நிலை பெரிதும் உறுதியானதாயிருந் தது. நாசர் அரசாங்கம், பல்லாண்டு பிரிட்டிஷ் காலனி ஆட்சியின் கொடும் விளைவுகளை அகற்றி தேசிய பொருளாதாரத்தை வளர்ப்பதிலும் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்து வதிலும் ஈடுபட்டபோது, எகிப்து மேலைய நாடு களைச் சார்ந்திருப்பதை அப்படியே வைத்திருக் கும் பொருட்டு சர்வதேச ஏகாதிபத்தியம் சில நடவடிக்கைகளை மேற்கொண்டது.

நாசர் அரசாங்கம் மேலைய நாடுகளின் கோரிக்கைகளை நிராகரித்தது. பிரிட்டனையும் பிரான்சையும் பங்குதாரர்களாகக் கொண்டிருந்த சூயஸ் கால்வாயைத் தேசியமயமாக்குவதென எகிப்து அரசாங்கம் செய்த முடிவு அதன் முக்கிய வெளிவிவகாரக் கொள்கை நடவடிக்கையாக அமைந்தது. நாசர் அரசாங்கத்தின் நியாயமான நடவடிக்கைகளுக்குப் பதில் தரும் முகமாக இந்த இரு ஏகாதிபத்திய வல்லரசுகளும் அமெரிக்க ஐக்கிய நாடும் எகிப்தின் மீது நிர்ப்பந்தம் செலுத்தும் பல நடவடிக்கைகளை மேற்கொண் டன. இதில் வெற்றி கிட்டாததால் பிரிட்டனும் பிரான்சும் இஸ்ரேலுடன் சேர்ந்து சதி ஒப்பந் தம் செய்து கொண்டு 1956ஆம் ஆண்டு அக்

டோபர் இறுதியில் — நவம்பர் துவக்கத்தில் எகிப்திற்கு எதிராக ஆக்கிரமிப்பில் இறங்கினர்.

சோவியத் யூனியனும் எல்லா சமாதான சக்திகளும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகக் குரலெழுப்பி எகிப்தை ஆதரித்தன. எகிப்திய மக்களின் போராட்டமும் சோவியத் யூனியனின் உறுதியான அரசியல் ஆதரவும் ஆக்கிரமிப்பாளரைத் தற்காலிகமாகப் பின்வாங்குமாறு நிர்ப்பந்தித்தாலும் நாசர் அரசாங்கத்தின் ஜனநாயக நாட்டங்களுக்கு இடையூறு விளைவிக்கும் தன் முயற்சிகளை எதிரி கைவிடவில்லை.

ஆக்கிரமிப்பு நோக்குடைய ஏகாதிபத்தியக் கூட்டுகளில் இல்லாத எல்லா நாடுகளுடனும் உறவுகளை ஏற்படுத்தி வளர்க்கும் முயற்சிகள், நாட்டை ஏகாதிபத்திய சூழ்ச்சிகளிலிருந்து பாதுகாத்து அதன் அரசியல் மற்றும் பொருளாதார சுதந்திரத்தை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட எகிப்திய அரசாங்க வெளிவிவகாரக் கொள்கையின் ஒரு அங்கமாகத் திகழ்ந்தன. 50க்களின் இறுதியிலும் 60க்களின் துவக்கத்திலும் எகிப்து வட ஆப்பிரிக்காவிலும் மொத்தமாக அரபு பிரதேசத்திலும் தேசிய விடுதலை இயக்கத்தின் முக்கிய மையமாக இருந்தது. அந்த காலத்திய எகிப்தின் கொள்கையில் காலனியாதிக்க எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, எல்லா நாடுகளிலுமுள்ள முற்போக்கு, சமாதான சக்திகளுடன் ஒன்ருகச் சேர்ந்து சுதந்திரப் போக்கை பின்பற்றும் நாட்டம் ஆகியன திட்டவட்டமாகத் தென்பட்டன. கூட்டுச் சேரா இயக்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராயும் இதன் பிரபல தத்துவ

கர்த்தாவாகவும் நடைமுறையாளராகவும் நாசரை உரிமையோடு கருதுகின்றனர்.

கூட்டுச் சேரா இயக்கம் உருவாகி வந்த ஆரம்பக் கட்டத்தில் கணிசமான பங்கு இந்தோனேசியாவையும் சாரும். சுகர்னோ காலத்து இந்தோனேசியா காலனியாதிக்க எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு பதாகையின் கீழ் சர்வதேச அரங்கிற்கு வந்தது. இந்நாட்டில்தான் பாண்டுங் மகாநாடு நடந்தது. பெல்கிரேதில் நடைபெற்ற அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்களின் முதல் மகாநாட்டிற்கு ஏற்பாடு செய்து அதை நடத்தியதில் ஜனதிபதி சுகர்னோ தீவிரப் பங்கேற்றார். ஆனால் அப்போதே இந்தோனேசிய, இந்திய நிலைகளில் கணிசமான வேறுபாடுகள் தென்பட்டன. 1962இல் சீன-இந்திய சச்சரவு மூண்டபோது இந்தோனேசியா நடுநிலையை மேற்கொண்டது. கூட்டுச் சேரா நாடுகளின் இரண்டாவது மகாநாட்டைக் கூட்ட வேண்டும் என்ற டிட்டோ, நாசரின் முன்முயற்சிகளை ஜனதிபதி சுகர்னோ ஆதரிக்கவில்லை. மாருக பாண்டுங் மகாநாட்டைப் போன்றதொன்றை, அதாவது ஆசிய, ஆப்பிரிக்கப் பிரதேசங்களிலுள்ள நாடுகளை மட்டும் உள்ளடக்கிய, கூட்டுச் சேராமையின் அளவைகளைக் கணக்கில் கொள்ளாத ஒரு மகாநாட்டைக் கூட்ட வேண்டுமென இவர் விடாப்பிடியாக முயன்றார்.

இறுதியாக கானு குடியரசின் (கோல்ட் கோஸ்ட்) பங்கைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். அந்நிய (பிரிட்டிஷ்) காலனியாதிக்கத்திலிருந்து விடுதலையடைந்த முதல் ஆப்பிரிக்க நாடுகளில் கானு ஒரு நாடாகும். 1957இல் சுதந்திரம் பிர

கடனம் செய்யப்பட்டு 1960இல் குடியரசு உருவான பின் கானுவின் முதல் ஜனுதிபதி க்வாமே நுக்ருமாவும் இவரது தலைமையிலான மக்கள் கன்வென்ட் கட்சியும் காலனியாதிக்க விளைவுகளை அகற்றி நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி நவீனமயமாக்கும் கொள்கையை மேற்கொண்டனர். பொருளாதாரத்தில் அரசுத் துறையை வளர்க்கத் திட்டமிடப்பட்டது; வெளி விவகாரத் துறையில் நுக்ருமா சோவியத் யூனியனுடனும் மற்ற சோஷலிச நாடுகளுடனும் பன்முகத் தொடர்புகளை வளர்க்க வேண்டியதன் அவசியத்தைப் பிரகடனப்படுத்தினுர். பெல்கிரேதில் நடைபெற்ற கூட்டுச் சேரா இயக்கத்தின் முதல் மகாநாட்டிற்கான தயாரிப்புக்களிலும் இதை நடத்துவதிலும் கானு தீவிரப் பங்கேற்றது. இதில் நுக்ருமா திட்டவட்டமான ஏகாதிபத்திய எதிர்ப்பு, காலனியாதிக்க எதிர்ப்பு நிலைகளிலிருந்து உரையாற்றினுர்.

ஆப்பிரிக்காவின் மற்ற காலனி, அரைக் காலனி நாடுகளுக்கு சுதந்திரத்திற்கான போராட்டத்தில் ஆண்மை மற்றும் உறுதிக்கு எடுத்துக்காட்டாய் திகழ்ந்த இளம் குடியரசின் முற்போக்கு கொள்கை ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கும் உள்நாட்டிலிருந்த பிற்போக்கிற்கும் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. 1966 பிப்ரவரியில் போலீசில் இருந்த உயர் அதிகாரிகளின் ஆதரவோடு வலதுசாரி இராணுவ அதிகாரிகளால் எதிர்ப்புரட்சிக் கவிழ்ப்பு நடத்தப்பட்டது, நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் ரத்து செய்யப்பட்டது, நாடாளுமன்றம் கலைக்கப்

பட்டது. 1967இல் கானவில் முற்போக்கு இராணுவ அதிகாரிகள் சிலர் பிற்போக்கு ஆட்சியைக் கவிழ்க்க செய்த முயற்சி பயனளிக்கவில்லை, பிறகு 1972இல் கர்னல் அச்சியாம்போங்கின் தலைமையில் ஆட்சிக் கவிழ்ப்பு நடைபெற்றது. ஆனால் அச்சியாம்போங்கின் அரசாங்கமும் நீண்ட காலம் நிலைத்திருக்கவில்லை. 1978இல் அவர் ராஜினமா செய்தார். 1979இல் இளம் இராணுவ அதிகாரிகள் சிலர் புதிய ஆட்சிக் கவிழ்ப்பை நிறைவேற்றினர். அரசு மாற்றங்களும் உள்விவகார, வெளிவிவகார கொள்கைகளும் ஒன்றையடுத்து ஒன்று மாறி வரும் சிக்கலான சூழ்நிலைகளினல் நுக்ருமா காலத்திய கானு கூட்டுச் சேரா இயக்கத்தில் ஆற்றிய பங்கு மறைந்து போனது.

கூட்டுச் சேரா நாடுகளின் முதல் மகாநாட்டைக் கூட்டும் நடைமுறைப் பணிகள் 1960ஆம் ஆண்டு செப்டெம்பரில் ஐ.நா. சங்கப் பொது சபையின் 15ஆவது அமர்வின் போது துவங்கின என்று தோன்றுகிறது. அப்போது நேரு, நாசர், டிட்டோ, சுகர்னோ, நுக்ருமா ஆகியோரின் சந்திப்பு நடைபெற்றது. இவர்கள், கூட்டுச் சேராக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் எல்லா நாடுகளின் மகாநாட்டைக் கூட்டுவதென முடிவு செய்தார்கள். நிகழ்ச்சி நிரலை உருவாக்கவும் எந்த அடிப்படையில் மகாநாட்டிற்கு அழைப்பு விடுப்பது என்பதை முடிவு செய்யவும் கெய்ரோவில் 1961 ஜூன் 5 முதல் 12 வரை பூர்வாங்க சந்திப்பு நடைபெற்றது. இதில் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா கண்டங்களைச் சேர்ந்த 21 அரசுகளின் பிரதிநிதிகள் கலந்து

கொண்டனர். விவாதத்திற்குப் பின் சந்திப்பில் கலந்து கொண்டவர்கள், நடைபெறவிருக்கும் மகாநாடு சர்வதேச அமைதியை வலுப்படுத்தவும் சர்வதேச ஒத்துழைப்பை வளர்க்கவும் சுதந்திரத்தின் பாலும் சிறப்பான வாழ்க்கையின் பாலும் கோடிக்கணக்கான மக்களுக்கு உள்ள நம்பிக்கைகளை நிறைவேற்றவும் செயல் பூர்வமாகத் துணைபுரியும் என்று கருத்துரைத்தனர். எதன் அடிப்படையில் மகாநாட்டிற்கு அழைப்பது எனும் பிரச்சினையை விவாதிக்கும் போது, கூட்டுச் சேராக் கொள்கையின் சாராம்சமாக விளங்கும் முக்கியக் கோட்பாடுகள் இதில் பிரதிபலிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அக் கோட்பாடுகளாவன:

1. வேறுபட்ட அரசியல் மற்றும் சமூக அமைப்புக்களையுடைய அரசுகளின் சமாதான சக வாழ்வு எனும் கோட்பாட்டின் அடிப்படையிலான சுதந்திரக் கொள்கையைப் பின்பற்றுதல், கூட்டுச் சேராக் கொள்கையைக் கடைப்பிடித்தல் அல்லது இத்தகையக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் நாட்டத்தை வெளிப்படுத்துதல்.

2. தேசிய விடுதலை இயக்கங்களைத் தொடர்ச்சியாக ஆதரித்தல்.

3. பெரும் வல்லரசுகளுக்கு இடையிலான பகைமைச் சூழலில் உருவான பல்தரப்பு இராணுவக் கூட்டுகளில் சேராமலிருப்பது.

4. ஒரு அரசு ஏதாவதொரு பெரும் வல்லரசுடன் இருதரப்பு இராணுவ உடன்படிக்கையைச் செய்து கொண்டிருந்தாலோ அல்லது பிரதேசப் பாதுகாப்புக் கூட்டின் உறுப்பினராக இருந்

தாலோ இந்த உடன்படிக்கையோ அல்லது கூட்டோ பெரும் வல்லரசுகளுக்கு இடையிலான பகைமையின் காரணமாக மட்டுமே உருவாகி யிருக்கக் கூடாது.

5. ஒரு நாடு அயல்நாட்டு இராணுவத் தளம் அமைக்கப்பட்ட ஒப்புதல் அளித்திருந்தால் இந்தச் சலுகை பெரும் வல்லரசுகளுக்கு இடையிலான பகைமைச் சூழ்நிலையில் அளிக்கப்பட்டிருக்கக் கூடாது.

அழைப்பு அடிப்படைகள் டெல்லியில் நடை பெற்ற 7வது மகாநாட்டிற்குப் பின்னும் மாற்ற மின்றி அப்படியே உள்ளன என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

## 3. முதல் உயர் மட்ட மகாநாடு

1961ஆம் ஆண்டு செப்டெம்பர் முதல் தேதி யன்று பெல்கிரேதில் விழாக் கோலத்தில் கூட்டுச் சேரா நாடுகளின் அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்களின் முதல் மகாநாடு துவங்கியது. இதில் 25 உறுப்பினர்களும் 3 பார்வையாளர் களும் (பொலிவியா, பிரேசில், ஈக்வடோர்) கலந்து கொண்டனர். நேரு, டிட்டோ, நாசர், ஸ்ரீமாவோ பண்டாரநாயகே, சுகர்னோ, நுக்ருமா, உநூ, டோர்த்திகோஸ், மக்கரியோஸ், மொடிபோ கேய்த்தா ஆகியோர் இதில் பங்கேற்றவர்களில் சிலர்.

கூட்டுச்சேரா நாடுகளின் பிரதிநிதிகள், ''மக் களினங்களுக்கும் அரசுகளுக்கும் இடையிலான

உறவுகள் எப்படிப்பட்டவையாக இருக்க வேண்டும், உலகம் பூராவும் நிலவும் சமாதானத்தையும் மக்களினங்களுக்கு இடையிலான ஆக்கபூர்வமான ஒத்துழைப்பையும் வலுப்படுத்தும் முகமாக விவாதத்திற்குரிய பிரச்சினைகளை சமாதான வழியில் தீர்க்கும் பாதைகளை எப்படிக் கண்டுபிடிப்பது என்ற கேள்விகளுக்கு மிக வெளிப்படையாகவும் முழுமையாகவும் தமது கண்ணோட்டத்தைத் தெரிவிக்க வல்ல''* ஒரு மேடையாக இது விளங்குகிறது என்று மகாநாட்டைத் திறந்து வைக்குங் காலை டிட்டோ கோடிட்டுக் காட்டினார்.

முழுச் சபையின் கூட்டங்களின் போது மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள், சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் வலுப்படுத்துதல், காலனியாதிக்கம், நவீன காலனியாதிக்கம், நிறவெறி, இனவெறி ஆகியவற்றை ஒழித்துக் கட்டுதல், ஆயுதக் களைப்பு, அணு ஆயுத சோதனைகளைத் தடை செய்தல், ''சர்வதேச சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றை வலுப்படுத்தவும் மற்றும் மக்களுக்கிடையேயான சமாதான ஒத்துழைப்பிற்கும் துணை கோலுவதற்காக'' பொருளாதார வளர்ச்சியை அடைதல் போன்ற பல முக்கியப் பிரச்சினைகளைப் பற்றிக் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். மகாநாட்டில்''கூட்டுச் சேரா நாடுகளின் அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்களின் பிரகடனம்'' மற்றும் ''யுத்த அபாயத்தைப் பற்றிய அறிக்கையும் சமா

---

* சோஷலிச சிந்தனையும் நடைமுறையும், பெல்கிரேத், 1979, எண் 9, பக்கம் 9 (ருஷ்ய மொழியில்).

தானத்திற்கான அறைகூவலும்'' எனும் முக்கிய ஆவணங்கள் ஏற்கப்பட்டன. ''காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம் மற்றும் நவீன காலனியாதிக்கத்தின் எல்லா வெளிப்பாடுகளும் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டால்தான் உறுதியான அமைதி நிலை நாட்டப்படும்'' என்று பிரகடனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.*

இம்மகாநாடு சிக்கலானதொரு சர்வதேச சூழ்நிலையில், ''கெடுபிடி யுத்தத்தின்'' உச்ச கட்டத்தில் நடைபெற்றது. சமாதானத்தைப் பாதுகாத்து புதிய உலக யுத்த அபாயத்தை அகற்றுவதன் மீது மகாநாட்டினர் விசேஷக் கவனம் செலுத்தினர். மக்களுக்கு இடையிலான யுத்தம் காலத்திற்கு ஒவ்வாதது மட்டுமல்ல, மனிதகுலத்திற்கு எதிரான குற்றமும் கூட என்று கோடிட்டுக் காட்டப்பட்டது. யுத்தம் தவிர்க்க இயலாதது என்ற கருத்தை முற்றிலுமாக நிராகரித்த அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்கள் ''கடந்த காலத்திற்கு இட்டுச் செல்லும் சாதனங்களை நாடாமல், 'கெடுபிடி யுத்தத்திற்கும்' சாத்தியமான சர்வ பொது அணு ஆயுதப் பேரழிவிற்கும் மாற்றாக விளங்கும் சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளின் அடிப்படையில் சர்வதேச சமுதாயத்தால் தமது வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்ள முடியும்''** என்று உறுதியான நம்பிக்கையைத் தெரிவித்தனர்.

சமாதானத்தைப் பாதுகாக்கவும் யுத்த

---

* *Two Decades of Non-Alignment*, Delhi, 1983, p. 5.

** *Ibid.*, pp. 5—6.

அபாயத்தை அகற்றவும் நடத்தும் போராட்டத்தோடு கூட மகாநாட்டினர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கான பின்வரும் கடமைகளையும் முன்வைத்தனர்:

—காலனியாதிக்கம், நவீன காலனியாதிக்கம், நிறவெறி மற்றும் இனவெறிக்கு எதிரான போராட்டம்; தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கான ஆதரவு;

—வெளியார் பிரதேசங்களிலுள்ள அந்நிய இராணுவத் தளங்களை அகற்றும் போராட்டத்திற்கான ஆதரவு;

—கண்டிப்பான சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் சர்வபொது மற்றும் முழு ஆயுதக் கலைப்புக் கருத்தைத் தீவிரமாக ஆதரிப்பது; அணு ஆயுதங்களின் சோதனைகளைத் தடை செய்வது;

—பொருளாதார சமமின்மையை ஒழித்துக் கட்டி வளர்ச்சியுறும் நாடுகளுடனான வர்த்தகத் துறையில் நியாயமான உறவுகளை நிலைநாட்டுவதற்கான போராட்டம்;

—வளர்ச்சியுறும் நாடுகளுக்கு இடையிலான பொருளாதாரத்திலும் வர்த்தகத்திலும் பயன்மிகு ஒத்துழைப்பிற்கு ஏற்பாடு செய்தல்.

யுத்த அபாயத்தைப் பற்றிய அறிக்கையும் சமாதானத்திற்கான அறைகூவலும் எனும் ஆவணத்தில் இம்மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள், கண்டிப்பாகப் பெரும் சேதங்களை ஏற்படுத்த வல்ல ஒரு உலக யுத்தத்தை மூட்டி விடக் கூடிய ஒரு பதட்ட நிலை உலகில் நிலவுவதைக் குறிப்பிட்டு, நிலவும் கருத்து வேறுபாடுகளை சமாதான வழியில் தீர்க்கும் பேச்சுவார்த்தைகளைத் திரும்பத் துவக்கு

மாறு சோவியத் யூனியனுக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் அறைகூவல் விடுத்தனர். இதன் தொடர்பாக மகாநாட்டினர் சோவியத் யூனியன் மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசாங்கங் களின் தலைவர்களுக்கு விசேஷச் செய்திகளை அனுப்பினர்.

''கூட்டுச் சேரா நாடுகளின் அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்களின் பிரகடனத்தில்'' அன்று முன் நின்ற சில திட்டவட்டமான சர்வ தேசப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் அடங்கி யுள்ளன. தமது விடுதலை, சுயநிர்ணய உரிமை மற்றும் சுதந்திரத்திற்காகப் போராடிய அல்ஜீரிய நாட்டு மக்களின் போராட்டத்துடனை ஒருமைப் பாடு; பாலஸ்தீன அரபு மக்களின் உரிமைகளைப் புனர்நாட்டும் கோரிக்கை; அங்கோலாவில் போர்த்துகீசிய காலனியாதிக்க ஆட்சியாளரின் ஒடுக்குமுறைகளைக் கண்டித்தல்; பிரெஞ்சுப் படை களைத் துனீசியாவிலிருந்து வெளியேற்றும் கோரிக்கை; மத்தியக் கிழக்கில் ஏகாதிபத் தியக் கொள்கையையும் தென்னுப்பிரிக்கக் குடி யரசில் இனவெறிக் கொள்கையையும் கண்டித் தல்; குவான்தனுமோவில் உள்ள அமெரிக்க இராணுவத் தளத்தை அகற்ற வேண்டு மென்ற கியூபாவின் கோரிக்கைகளுக்கு ஆதரவு ஆகியன இவற்றில் அடங்கும். சோவியத் யூனி யனின் முன்மொழிவால் ஐ.நா. சங்கப் பொது சபையின் 15வது அமர்வில் ஏற்கப்பட்ட காலனி நாடுகளுக்கும் மக்களினங்களுக்கும் சுதந்திரம் வழங்குவதைப் பற்றிய பிரகடனத்தை மகா நாடு வரவேற்றது.

பிரகடனத்தின் பொருளாதாரப் பகுதி, திட்டவட்டமான தீர்மானங்களின் நோக்கிலிருந்து பார்க்கும் போது வர்த்தகத் துறையில் நியாயத்தை நிலைநாட்டுதல், பொருளாதார உறவுகளில் சமமின்மையை அகற்றுதல், இளம் அரசுகளின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு விஞ்ஞானத் தொழில்நுட்பப் புரட்சியின் சாதனைகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றிற்கான அறைகூவல்களை உள்ளடக்கி பெரும்பாலும் இன்னமும் பெயரளவிலான பிரகடனமாக மட்டுமே இருந்தது.

கூட்டுச்சேரா நாடுகளின் அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்களின் முதல் மகாநாடு பெரும் வரலாற்று முக்கியத்துவத்தை உடையதாயிருந்தது. உண்மையிலேயே இது நான்கு கண்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளின் முதல் மகாநாடாய் இருந்தது (பாண்டுங்கில் நடந்த மகாநாடு பிரதேச மகாநாடாகும், அதில் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் மட்டுமே பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டிருந்தன); அதுவும் கெய்ரோவில் நடைபெற்ற பூர்வாங்கச் சந்திப்பில் உருவாக்கப்பட்ட அளவைகளுக்கு ஏற்றதாக உள்ள கொள்கையைக் கடைப்பிடித்த நாடுகளின் பிரதிநிதிகள் மட்டுமே இதில் கலந்து கொண்டனர். இம்மகாநாடு, கூட்டுச் சேரா இயக்கத்தில் உறுப்பினராக இருப்பதற்கான நிபந்தனைகளை ஊர்ஜிதப்படுத்தி கூட்டுச் சேரா அரசுகளின் நடவடிக்கையின் முக்கியப் போக்குகளைச் சுட்டிக்காட்டிய முதல் மகாநாடாக அமைந்தது. இறுதியாக இது, சமாதானத்திற்கு ஆதர

வாயும் ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், நிற வெறி ஆகியவற்றிற்கு எதிராயும் நடைபெறும் போராட்டத்தில் அரசுகளின் முயற்சிகளைத் தன்னிச்சையாக ஒன்றிணைப்பதற்கு வழி கோலும் முதல் மகாநாடுமாகும்.

இயக்கத்தை அரசுகளின் கூட்டாக வடிவமைத்து மாற்ற கூட்டுச் சேரா நாடுகள் மறுத்து விட்டன. ''மகாநாட்டில் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டுள்ள கூட்டுச் சேரா நாடுகள் புதியதொரு கூட்டை ஏற்படுத்த விரும்பவில்லை, இவை ஒரு புதிய கூட்டாக இருக்கவும் முடியாது. நம்பிக்கையையும் உலகம் முழுவதிலும் சமாதானத்தையும் வலுப்படுத்த உதவ முயலும் எந்த ஒரு அரசாங்கத்துடனும் மனதார ஒத்துழைக்க இந் நாடுகள் தயார்''* என்று பிரகடனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பெல்கிரேத் மகாநாட்டில் உரையாற்றுங்காலை நேரு பின்வருமாறு கூறினார்: ''கூட்டுச் சேராமை என்பது யுத்தம், இராணுவக் கூட்டுகள், இராணுவ ஐக்கியங்கள் போன்றவற்றை எதிர்த்துப் போராடுவது என்று பொருள். சமாதான லட்சியத்திற்கு நாம் எமது பங்கைச் செலுத்த விரும்புகின்றோம்.''**

பெல்கிரேத் மகாநாட்டின் கருத்துகள்—சமாதானம் மற்றும் ஆயுதக் களைப்பிற்கான தீவிர அறைகூவல், நவீன காலனியாதிக்கத்திற்கான எதிர்ப்பு, அரசுகளின் சுதந்திரம் மற்றும் அரசுரிமை, பொருளாதார, சமூக, கலாச்சார

---

* *Two Decades of Non-Alignment*, p. 6.

** Malaviya H.-D., *Non-Alignment onward March*, Delhi, 1981, p. 5.

வளர்ச்சிப் பாதையை சுதந்திரமாகத் தேர்ந் தெடுக்கும் உரிமை ஆகியவற்றை மதிக்கும் அறை கூவல்—காலனியாதிக்கச் சார்புநிலையிலிருந்தும் அந்நிய ஆதிக்கத்திலிருந்தும் விடுதலையடைந்த நாடுகளின் ஆதரவை படிப்படியாக மேன்மேலும் அதிகமாகப் பெற்றன.

# அத்தியாயம் இரண்டு

# முக்கிய மைல் கற்கள்

## 1. இரண்டாவது—ஆறுவது உயர்மட்ட மகாநாடுகளின் முடிவுகள்

பெல்கிரேத் மகாநாட்டிற்குப் பிந்தைய கால கட்டத்தில் உலகில் ஏற்பட்ட நல்ல மாற்றங்கள் கூட்டுச் சேரா இயக்கம் மேற்கொண்டு வளர்வதன் மீது கணிசமான செல்வாக்கைச் செலுத்தின. 60க்களின் துவக்கத்தில் காலனியாதிக்கப் பேரரசுகள் தகர்ந்து வீழ்ந்தன: 1961-64ஆம் ஆண்டுகளில் உலகப் படத்தில் இன்னமும் 30 சுதந்திர அரசுகள், பெரும்பாலும் ஆப்பிரிக்காவில், உதித்தன; லத்தீன் அமெரிக்காவிலிருந்து, குறிப்பாகக் கரிபியக் கடலோரத்திலிருந்து இயக்கத்தில் சேர்ந்த நாடுகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தது.

இந்த சுதந்திர அரசுகளைக் கொண்டு கூட்டுச் சேரா இயக்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்ததானது,ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் இயக்கத்தின் நிலை பலமடைவதற்கும் பெரும் சர்வதேச மேடைகளில் இளம் அரசுகளின் பங்கும் செல்வாக்கும் அதிகரிப்பதற்கும் இட்டுச் சென்றது.

**கூட்டுச் சேரா நாடுகளின்**
**அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்களின்**
**மகாநாடுகளில் கலந்து கொண்ட நாடுகள்,**
**தேசிய விடுதலை இயக்கங்களின் எண்ணிக்கை***

*பிரதிநிதித்துவ நிலை*

| மகாநாடு | உறுப்பினர்கள் | | பார்வையாளர்கள் | | விருந்தினர்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | நாடுகள் | தேசிய விடுதலை இயக்கங்கள் | நாடுகள் | தேசிய விடுதலை இயக்கங்கள் | நாடுகள் | தேசிய விடுதலை இயக்கங்கள் |
| முதல் மகாநாடு, பெல்கிரேத், 1—6.9.61 | 25 | — | 3 | — | — | — |
| இரண்டாவது மகாநாடு, கெய்ரோ, 5—10.10.64 | 46** | — | 10 | — | — | — |
| மூன்றாவது மகாநாடு, லுஸாக்கா, 8—10.9.70 | 54 | — | 9 | — | — | 8 |
| நான்காவது மகாநாடு, அல்ஜீரியா, 5—9.9.73 | 75 | — | 8 | 12 | 3 | — |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஐந்தாவது மகாநாடு, கொழும்பு, *16—19.8.76* | 84*** | 1 | 8 | 8 | 7 | — |
| ஆறுவது மகாநாடு, ஹவானு, *3—9.9.79* | 89*** | 3 | 12 | 5 | 8 | 1 |
| ஏழாவது மகாநாடு, டெல்லி, *7—11.3.83* | 97**** | 2 | 10 | 1 | 10 | — |

**குறிப்பு:**

* இப்பட்டியல் மகாநாடுகளின் இறுதி ஆவணங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. விருந்தினர்கள், பார்வையாளர்கள் எண்ணிக்கையில் ஐ. நா. சங்கம், பிரதேச, மற்ற ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் சேர்க்கப்படவில்லே.

** அயல் நாட்டிலிருந்த புரட்சிகர அங்கோல அரசாங்கப் பிரதிநிதியைச் சேர்க்காது.

*** விசேஷ அந்தஸ்துடைய பெலிசை சேர்க்காமல்.

**** கம்பூச்சிய மக்கள் குடியரசு மற்றும் செயின்ட் லூசியின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவில்லே.

உதாரணமாக, ஹவானுவில் 6வது மகாநாடு (1979) துவங்கிய போது, கூட்டுச்சேரா இயக்கத்தில் உறுப்பினராயிருந்த நாடுகளின் மொத்த

மக்கள் தொகை 1·698 மில்லியனுக்கும் கூடுதலாகும். இதில் 418.295 மில்லியன் ஆப்பிரிக்க நாட்டினர், 1189.391 மில்லியன் ஆசியர்கள், 67.516 மில்லியன் லத்தீன் அமெரிக்க நாட்டினர், 22.918 மில்லியன் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். 20 ஆண்டுகளில் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை நான்கு மடங்கு—25 இலிருந்து 101 ஆக—அதிகரித்துள்ளது. கூட்டுச் சேரா நாடுகளின் அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்களின் 7வது மகாநாட்டில் கிட்டத் தட்ட எல்லா ஆப்பிரிக்க நாடுகளும் 27 ஆசிய நாடுகளும் 1/4 பங்கு லத்தீன் அமெரிக்க நாடுகளும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருந்தன.

கூட்டுச் சேரா அரசுகளின் 2வது—6வது மகாநாடுகளின் முடிவுகளைச் சுருக்கமாகக் கூறப்புகும் முன், இறுதி பத்திரங்களின் பகுப்பாய்வில், சமாதானத்திற்கான போராட்டம், சர்வதேசப் பொருளாதார உறவுகளை மாற்றியமைத்தல், காலனியாதிக்கம் மற்றும் நிறவெறியின் மிச்ச சொச்சங்களுக்கு எதிரான போராட்டம் போன்றவற்றைப் பற்றிய தீர்மானங்களின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்துவதன் மீது முக்கியக் கவனம் செலுத்தப்படும் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

ஒரு சில முடிவுகள் பல்வேறு காரணங்களால் நிறைவேற்றப்படாமலிருப்பதால்தான் இவை இந்த மகாநாடுகளில் திரும்பத் திரும்பக் கூறப்படுகின்றன.

1964ஆம் ஆண்டு அக்டோபர் 5 முதல் 10 வரை கெய்ரோவில் நடைபெற்ற கூட்டுச் சேரா

இயக்கத்தின் இரண்டாவது மகாநாட்டில், முதல் மகாநாட்டின் பிரகடனத்தில் கூறப்பட்டிருந்த இயக்கக் கோட்பாடுகள் மற்றும் லட்சியங்களுக்கான ஒப்புதலை ஊர்ஜிதப்படுத்தி மகாநாட்டினர் ''சமாதானம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புச் செயல்திட்டம்'' எனும் முக்கிய ஆவணத்தை ஏற்றனர்.

பெல்கிரேத் மகாநாட்டு பிரகடனத்தின் சூத்திரத்திற்கு விளக்கமளித்து ஐ.நா. சங்கத் தீர்மானங்களை மேற்கோள் காட்டிய பிரதிநிதிகள், சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கான ஒரே சாத்தியமான வழி, கீழ்காணும் முக்கியக் கோட்பாடுகளின் அடிப்படையில் வேறுபட்ட சமூக, அரசியல் அமைப்புக்களையுடைய அரசுகளுக்கு இடையிலான சமாதான சகவாழ்வே என்று நிர்ணயித்தனர். அந்தக் கோட்பாடுகளாவன:

1. முழு சுதந்திரத்திற்காக எல்லா மக்களினங்களுக்கும் உள்ள உரிமை உடனடியாக, நிபந்தனையின்றி ஒப்புக்கொள்ளப்பட்டு எல்லா அரசுகளாலும் நிறைவேற்றப்பட வேண்டும்.

2. எல்லா மக்களினங்களின் பிரிக்க இயலா உரிமையாக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்; இதன் அடிப்படையில் எல்லா நாடுகளும் மக்களினங்களும் தமது அரசியல் அந்தஸ்தைப் பற்றிய முடிவுகளை எடுக்கலாம், பொருளாதார, சமூக, கலாச்சார வளர்ச்சிப் பாதைகளைச் சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கலாம்.

3. வேறுபட்ட சமூக, அரசியல் முறைகளையுடைய அரசுகளுக்கு இடையிலான சமாதான சகவாழ்வுச் சாத்தியமானது, அவசியமானது, நிலை

யான சமாதானத்துக்கும் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டலிலிருந்து விடுபட்ட மனிதகுலத்தின் நல் வாழ்விற்கும் வகை செய்யும் நோக்கங்களுடன் அரசுகளுக்கிடையே நல்லண்டை உறவுகளை நிலை நாட்ட இது உதவுகிறது.

4. அரசுகளின் அரசுரிமை சமத்துவம் அங்கீ கரிக்கப்பட்டு பிறழாது கடைபிடிக்கப்பட வேண் டும். தமது இயற்கைச் செல்வங்களைச் சுதந்திர மாகப் பயன்படுத்த எல்லா மக்களினங்களுக்கும் உள்ள உரிமை இதில் அடங்கும்.

5. மற்ற அரசுகளின் பிரதேச முழுமை மற்றும் அரசியல் சுதந்திரத்திற்கு எதிராக அரசு கள் எவ்விதத்திலும் அச்சுறுத்தக் கூடாது, எவ்வித பலத்தையும் பிரயோகிக்கக் கூடாது; அச்சுறுத்தல் அல்லது பலத்தைப் பயன்படுத்திய தால் தோற்றுவிக்கப்படும் எந்த ஒரு நிலவரமும் ஒப்புக் கொள்ளப்படக் கூடாது; அரசுகளுக் கிடையே நிலைநாட்டப்பட்ட எல்லைகள் மீறப்படக் கூடாது; இந்த அடிப்படையில் எந்த ஒரு அரசும் மற்ற அரசுகளின் உள்விவகாரங்களில் வெளிப் படையாகவோ மறைமுகமாகவோ தலையிடக் கூடாது, சீர்குலைவு நடவடிக்கைகள், பல்வேறு வித அரசியல், பொருளாதார, இராணுவ நிர்ப் பந்தங்களில் இறங்கக் கூடாது; எல்லைத் தகராறு கள் சமாதான வழியில் தீர்க்கப்பட வேண்டும்.

6. எல்லா அரசுகளும் முக்கிய தனிமனித உரிமைகள், சுதந்திரங்களையும் எல்லா தேசிய இனங்கள் மற்றும் எல்லா நிறத்தவரின் சமத்து வத்தையும் மதிக்க வேண்டும்.

7. எல்லா சர்வதேச சச்சரவுகளும் பரஸ்பர

நம்பிக்கையின் மனப்பாங்கில், சமத்துவம் மற்றும் அரசுரிமையை மதிப்பதன் அடிப்படையில், சட்ட பூர்வமான உரிமைகளுக்குப் பங்கம் ஏற்படுத்தாத வகையில் சமாதான வழிகளில் தீர்க்கப்பட வேண்டும்; சர்வதேசப் பதட்ட நிலையைத் தணித்து சர்வபொது, முழு ஆயுதக் கலைப்பை நிறைவேற்றும் நோக்கங்களுக்காக எல்லா அரசுகளும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், இவற்றை ஆதரிக்க வேண்டும்.

8. உலகின், குறிப்பாக வளர்ச்சியுறும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணைபுரியும் நோக்கத்தோடு எல்லா அரசுகளும் ஒத்துழைக்க வேண்டும். இப்போது வளர்ச்சியுறும் நாடுகளிலும் வளர்ந்த நாடுகளிலும் உள்ள வாழ்க்கை நிலைகளுக்கு இடையில் நிலவும் பிளவின் வளர்ச்சியைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த ஒத்துழைப்பு நிலையான சமாதானத்தைப் பாதுகாப்பதற்கான அவசிய நிபந்தனையாகும்.

9. ஐ.நா. சங்கக் கோட்பாடுகளுக்கும் லட்சியங்களுக்கும் ஏற்ப அரசுகள் தாமாகவே முன் வந்து தமது சர்வதேசக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.*

இந்தக் கோட்பாடுகள் கூட்டுச் சேரா அரசுகளின் மேற்கொண்ட நடவடிக்கை முழுவதற்கும் அடிப்படையாக விளங்கி வருவதால்தான் பிரகடனத்திலிருந்து இந்த இடம் குறிப்பாக விவரமாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

கெய்ரோவில் இயக்கத்தின் ஏகாதிபத்திய

---

* *Two Decades of Non-Alignment*, p. 21.

எதிர்ப்புப் போக்கு ஆழமாயும் கூர்மையாயும் வரையறுக்கப்பட்டது, சமாதானத்தைப் பாது காப்பதற்கான திட்டவட்டமான முன்மொழிவு களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தது. தகராறுகளைச் சமாதான வழிகளில் தீர்ப்பது, சர்வபொது முழு ஆயுதக்களைப்பை அடைவது, அணு ஆயுதங்களைப் பரப்புவதையும் சோதிப் பதையும் தடுத்து, பிறகு எல்லா வகையான அணு ஆயுதங்களையும் ஒழிப்பது, சமாதான நோக்கங் களுக்காக மட்டுமே அணுசக்தியைப் பயன்படுத்து வது ஆகியன இம்முன்மொழிவுகளில் அடங்கும்.

காலனியாதிக்க மிச்ச சொச்சங்களை ஒழித்துக் கட்டி, மக்களினங்களை அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கும் பிரச்சினைகளின் பால் கூட்டுச் சேரா நாடுகளின் உறவு, முதல் மகாநாட்டை விட கெய்ரோ மகாநாட்டில் அதிகத் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டது. ''சுயநிர்ணயத்திற்கும் சுதந்திரத்திற்கும் தமக்குள்ள உரிமையை நிறை வேற்றும் மக்களினங்களின் நாட்டத்திற்குக் காலனியாதிக்க வல்லரசுகள் உறுதியோடு எதிராக நின்றால், தேசிய நலன்களைப் பாதுகாக்கும் முக மாக ஆயுதமேந்திப் போராட காலனி மக்களினங் களுக்கு எல்லா சட்ட பூர்வமான உரிமைகளும் உண்டு''* என்று மகாநாட்டில் கலந்து கொண்ட வர்கள் முடிவு செய்தனர். ஆயுதமேந்தியப் போராட்டத்திற்குத் தேசிய விடுதலை இயக்கங் களுக்கு உள்ள உரிமையைக் குறிப்பிட்ட கூட்டுச் சேரா நாடுகள், இந்த இயக்கங்களை மக்களினங்

---

* *Ibid.*, p. 18.

களின் ஒரே பிரதிநிதிகளாக அங்கீகரித்து அவற் றிற்குக் கூட்டுச் சேரா இயக்கத்தில் பங்கேற்கும் வாய்ப்பை அளித்தன.

உலக சமுத்திரத்தின் பகுதிகளை, உதாரண மாக இந்து மகா சமுத்திரத்தை, அணு ஆயுதங் கள் இல்லாத அமைதி மண்டலமாக அறிவிக்கும் ஆலோசனை முதன்முதலாக கெய்ரோ மகாநாட் டில் முன்மொழியப்பட்டது. ஏனெனில் 40க்களின் இறுதியிலிருந்தே இந்து மகா சமுத்திரத்தில் அமெரிக்க இராணுவ நடவடிக்கை கணிசமாகக் கூடியது, 60க்களின் துவக்கத்தில் பெரும் அமெ ரிக்க கப்பற்படைத் தொகுதிகள் மேன்மேலும் அடிக்கடி இந்து மகா சமுத்திரத்திற்கு வர ஆரம் பித்தன. 1962இல் வங்காள விரிகுடாவில் அமெ ரிக்க கப்பற்படையின் 7வது தொகுதியின் கப் பல்கள் இருந்தன, 1963இல் அரபிக் கடலில் சென்டோவின் கப்பற்படை ஒத்திகைகள் நடந் தன, இந்த ஒத்திகைகளில் அமெரிக்க விமானந் தாங்கி கப்பல், நீர்மூழ்கிக் கப்பல்கள், சாதாரண கப்பல்கள் பங்கேற்றன. 1963ஆம் ஆண்டு இறுதி யில் இந்து மகா சமுத்திரப் பிரதேசத்திற்காக அமெரிக்க இராணுவத்தின் விசேஷத் தலைமை உருவாக்கப்பட்டது. 1964இல் இந்து மகா சமுத் திரத்தில் அமெரிக்க கப்பற்படைத் தொகுதி ஏற் கெனவே இருந்தது. பொது அணு ஆயுத யுத்தத் திற்குக் கீழான மட்டத்தில் உள்ள நெருக்கடி நிலைமைகளுக்கு அமெரிக்கப் படைகள் விரை வாகப் பதிலளிக்கத் தயாராக வல்ல, மற்றும் கடலோர நாடுகளின், குறிப்பாக சுதந்திரமான வளர்ச்சியைத் தேர்ந்தெடுத்த, இராணுவக் கூட்டு

களில் சேராத நாடுகளின் உள்விவகாரங்களில் இராணுவ ரீதியாக நேரடியாகத் தலையிடக் கூடிய ஒரு மண்டலமாக இந்து மகா சமுத்திரம் மாற்றப் பட்டது. இத்தகைய திட்டங்கள் எவ்வளவு உண் மையானவை என்பதற்கு கிரினடாவில் அமெரிக்க ஆக்கிரமிப்பு சான்று பகர்கிறது. இந்து மகா சமுத்திரத்திலும் பாரசீக வளைகுடா பகுதியிலும் பிரிட்டனின் இராணுவத்தை முற்றிலும் மாற்றீடு செய்யும் திட்டங்களின் தொடர்பில் அமெரிக்க ஐக்கிய நாடு பாரசீக வளைகுடா நாடுகளின் பங் கேற்போடு ''வெற்றிடத்தை நிரப்பும்'' பிரச் சினையை முன்வைக்கிறது. வளைகுடா நாடுகள் இத்திட்டங்களை நிராகரித்தாலும் அமெரிக்க ஐக்கிய நாடு 1983ஆம் ஆண்டு **செண்ட்கோம்**[8] எனும் தனித் தலைமையைத் தோற்றுவித்து (இதைப் பற்றி பின்னால் பார்ப்போம்) இந்து மகா சமுத்திரத்தில் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து பெருக்கியது.

தேசிய விடுதலை இயக்கங்களின் போராட்டப் பிரச்சினைகள் மகாநாட்டு முடிவுகளில் பெரும் இடத்தை வகித்தன. உதாரணமாக ''சமாதானம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புச் செயல்திட்டத் தின்'' முதல் பகுதியில் மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் சகலவித காலனியாதிக்க, நவீன காலனியாதிக்க, ஏகாதிபத்தியக் கொள்கைகளை யும் வன்மையாகக் கண்டித்து, காங்கோவில் சமா தானத்தை அடைவதை நோக்கமாகக் கொண்ட ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டு ஸ்தாபனத்தின்[9] நடவடிக்கையை ஆதரித்தனர்; போர்த்துகலின் காலனியாதிக்கக் கொள்கையைக் **கண்டனம்**

செய்து இதனுடன் இராஜதந்திர உறவுகளை முறித்துக் கொள்ளுமாறும், காலனிகளைக் கலைப் பது பற்றிய ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் தீர்மானங்களை நிறைவேற்றுமாறு இதைக் கட் டாயப்படுத்துவதற்காகப் போர்த்துகல் விஷயத் தில் வர்த்தக, பொருளாதார முற்றுகையைக் கடைப்பிடிக்குமாறும் கோரினர். ரோடீசியாவில் நிறவெறிச் சிறுபான்மையின் கொள்கை கண்டிக் கப்பட்டது, தென்மேற்கு ஆப்பிரிக்க மக்களின் சுயநிர்ணய உரிமையும் சுதந்திர உரிமையும் ஊர் ஜிதப்படுத்தப்பட்டன. தமது தாய்நாட்டிற்கான பாலஸ்தீன மக்களின் உரிமையை ஊர்ஜிதப்படுத் திய மகாநாடு இவர்களின் விடுதலைப் போராட் டத்திற்கான சர்வபொது ஆதரவை அறிவித்தது.

தென்னுப்பிரிக்கக் குடியரசிற்கு எதிரான தடை நடவடிக்கைகள் பற்றிய ஐ.நா. சங்கத் தீர்மா னங்களுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்த மகா நாட்டினர், தென்னுப்பிரிக்க நிறவெறியர்களுடன் சகலவித ராஜதந்திர, கான்ஸல், மற்ற உறவுகளை முறித்துக் கொள்ளுமாறு முதன்முதலாக எல்லா நாடுகளுக்கும் அறைகூவல் விடுத்தனர்.

இறுதி ஆவணங்களின் பொருளாதாரப் பிரி வில், புதிய, நியாயமான உலகப் பொருளாதார உறவு முறையை விரைவாகத் தோற்றுவிக்க உதவி புரிய எல்லா நாடுகளும் கடமைப்பட்டுள் ளன என்று மகாநாட்டினர் குறிப்பிட்டனர். பெல் கிரேத் மகாநாட்டின் முன்மொழிவுகள் வர்த்தகம் மற்றும் வளர்ச்சி சம்பந்தமான ஐ.நா. சங்க மகாநாட்டுப் பத்திரங்களில் (1964, ஜூன்) பிரதி பலிப்பது குறித்து இவர்கள் திருப்தி தெரிவித்த

னர்; இந்த மகாநாட்டில் ஏற்கப்பட்ட ''77-குழுவின்''* கூட்டுப் பிரகடனத்தை ஆதரித்தனர்; மகாநாட்டின் சிபாரிசுகளை, உதாரணமாக வர்த்தகம், பொருளாதார வளர்ச்சியோடு தொடர்புடைய பிரச்சினைகள் பயன்மிகு முறையிலும் விரைவாகவும் தீர்க்கப்படுவதற்காகப் புதிய சர்வதேச ஸ்தாபனங்களைத் தோற்றுவிப்பது சம்பந்தமான சிபாரிசுகளை உடனடியாக நிறைவேற்றுமாறு எல்லா நாடுகளையும் கோரினர். இறுதிப் பத்திரத்தில், இளம் அரசுகளின் வளர்ச்சி வேகங்களை மறுபரிசீலனை செய்வது, அவற்றின் அந்நியச் செலாவணி வருகையை அதிகரிக்கும் நோக்கத்தோடு செயல்திட்டத்தை உருவாக்குவது, இந்நாடுகளின் பொருளாதார இணைப்பை ஒழுங்குபடுத்துதல், வளர்ச்சியுறும் நாடுகளுக்கான வெளிநிதிகளின் வருகையை அதிகரித்தல் மற்றும் அரசியல் உறுதிமொழிகளைத் திணிப்பதைத் தவிர்த்து இவற்றை அளிக்கும் நிலைமைகளை மேம்படுத்துதல் ஆகியவை சம்பந்தமான சிபாரிசுகள் அடங்கியுள்ளன.**

லுஸாக்காவில் (ஜாம்பியா) நடைபெற்ற

---

* வெளிநாட்டுப் பொருளாதாரப் பிரச்சினைகளில் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க வளர்ச்சியுறும் நாடுகளின் ஒத்திசைவான நிலைகளை உருவாக்கும் பொருட்டு ''77-குழு'' 1964 ஆம் ஆண்டு மார்ச் 23 முதல் ஜூன் 16 வரை ஜினீவாவில் நடைபெற்ற வர்த்தகம் மற்றும் வளர்ச்சி சம்பந்தமான ஐ.நா. மகாநாட்டில் உருவாக்கப்பட்டது. தற்போது இக்குழுவில் 120க்கு அதிகமான அரசுகள் உள்ளன.

** *Two Decades of Non-Alignment*, p. 25.

கூட்டுச் சேரா நாடுகளின் மூன்ருவது மகாநாடு (1970, செப்டெம்பர் 8—10) ஐரோப்பாவில் சர்வதேசப் பதட்டநிலை ஓரளவு குறைந்து இந்தோசீனுவிலும் அரபியக் கிழக்கிலும் நிலவரம் கூர்மையடைந்த ஒரு சூழ்நிலையில் நிகழ்ந்தது.

லுஸாக்கா மகாநாட்டில் முதன் முதலாகத் தேசிய விடுதலை இயக்கங்களின்—மொசாம்பிக் விடுதலை முன்னணி, அங்கோலாவின் விடுதலைக்கான மக்கள் இயக்கம், ஜிம்பாபுவே ஆப்பிரிக்க மக்கள் கூட்டு, ஜிம்பாபுவே ஆப்பிரிக்க தேசியக் கூட்டு, ஆப்பிரிக்க தேசியக் காங்கிரஸ், கோமோர் தீவுகளின் தேசிய விடுதலை இயக்கம், பிரெஞ்சு சோமாலியின் விடுதலை இயக்கம், பாலஸ்தீன விடுதலை முன்னணி ஆகியவற்றின்—பிரதிநிதிகள் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆக்கிரமிப்பிற்கு எதிராக இந்தோசீன மக்கள் நடத்தும் போராட்டத்திற்கு லுஸாக்கா மகாநாட்டில் முழு ஆதரவு தெரிவிக்கப்பட்டது. இங்குதான் கூட்டுச் சேரா நாடுகள் முதன்முதலாக, தென்னுப்பிரிக்கக் குடியரசுடன் அரசியல், பொருளாதார, இராணுவ ஒத்துழைப்பைக் கடைப்பிடிப்பதற்காக—இந்த ஒத்துழைப்பு இனவெறிக் கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றுமாறு நிறவெறி ஆட்சியினரை ஊக்குவிக்கிறது—அமெரிக்க ஐக்கிய நாடு, பிரான்ஸ், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளை வெளிப்படையாகக் கண்டித்தன.

''சமாதானம், சுதந்திரம், வளர்ச்சி, ஒத்துழைப்பு, சர்வதேச உறவுகளை ஜனநாயகமயப்

படுத்துவது பற்றிய பிரகடனத்தில்'', கூட்டுச் சேரா நாடுகளின் உள்விவகாரங்களில் மற்ற அரசு களின் தலையீடுகள் அச்சமேற்படுத்தும் வகையில் அதிகரித்து வருவதன் மீதும் வளர்ந்த நாடுகளுக் கும் வளர்ச்சியுறும் நாடுகளுக்கும் இடையில் பொருளாதார வளர்ச்சியில் பிளவு அப்படியே இருந்து, ஏன் அதிகரித்து வருவதன் மீதும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது; முதல் மகாநாட்டில் குறிப்பிடப்பட்ட கூட்டுச் சேராக் கோட்பாடுகள் ஊர்ஜிதப்படுத்தப்பட்டன, இயக்கத்தின் லட்சி யங்கள் திட்டவட்டமாக்கப்பட்டன. அந்த லட்சி யங்களாவன:

—எந்த ஒரு நாட்டின் விடுதலை, சுதந்திரம், அரசுரிமை, பிரதேச முழுமை ஆகியவற்றின் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், பலத்தைக் கொண்டு அச்சுறுத்துவது அல்லது பலத்தைப் பிரயோகிப்பதாக அச்சுறுத்துவது ஆகியவற்றின் சகல வடிவங்களையும் எதிர்த்து நிற்கும் பிரச் சினைகளில் ஐ.நா. சங்கம் அதிக செயலாண்மை மிக்கதாக மாறுவதற்காக இச்சங்கத்தில் கூட்டுச் சேரா அரசுகளின் நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்துவதன் மூலம் சர்வதேச சமாதானத்திற்கும் சமாதான சகவாழ்விற்கும் வகை செய்தல்;

—காலனியாதிக்கம் மற்றும் நிறவெறிக்கு எதிரான போராட்டம்;

—தகராறுகளைச் சமாதான வழியில் தீர்த்தல்;

—ஆயுதப் போட்டியைத் தடுத்து நிறுத்தி, அதையடுத்து சர்வபொது ஆயுதக் கலைப்பிற்குச் செல்லுதல்;

—பெரும் வல்லரசுகளுக்கு இடையிலான

பகைமைச் சூழ்நிலையிலும் காலனியாதிக்க, நிற வெறி நலன்களுக்காகவும் மற்ற நாடுகளின் பிரதேசங்களில் பெரும் வல்லரசுகள் இராணுவத் தளங்களை ஏற்படுத்துவதற்கும் அந்நியப் படைகள் இருப்பதற்கும் எதிர்ப்பு தெரிவித்தல்;

—ஐ.நா. சங்கத்தின் சர்வப்பொது தன்மைக்கு வகை செய்து இதன் செயலாண்மையை வலுப்படுத்துவது;

—பொருளாதார சுதந்திரத்திற்கான போராட்டம், சமத்துவம் மற்றும் பரஸ்பர அனுகூலத்தின் அடிப்படையில் பரஸ்பர ஒத்துழைப்பு.*

அப்பிரகடனத்தில் 70க்கள் ஆயுதக் களைப்பு பத்தாண்டுகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டன, அணு ஆயுதத்தையும் சாதாரண ஆயுதத்தையும் குறைத்தல், பரஸ்பர நம்பிக்கைச் சூழ்நிலையை ஏற்படுத்துதல், அணு சக்தியைச் சமாதானத்திற்குப் பயன்படுத்துதல், விண்வெளிப் பரப்பை ஆராய்ந்து பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கான விரிவான சிபாரிசுகள் முன்மொழியப்பட்டன. ஆயுதக் களைப்பிற்கான அனைத்துலக மகாநாட்டைக் கூட்டுமாறு மகாநாட்டினர் முன்மொழிந்தனர்.

லுஸாக்காவில் கூட்டுச் சேராமை மற்றும் பொருளாதார முன்னேற்றம் பற்றிய பிரகடனம் ஏற்கப்பட்டது. பொருளாதார வளர்ச்சித் தரங்களில் இளம் அரசுகளுக்கும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து அதிகரித்து வரும் இடைவெளியும், உலகப் பொருளாதாரம் மற்றும் உலக ஏற்றுமதி வர்த்தகத்தில் வளர்ச்சி

* *Two Decades of Non-Alignment*, pp. 46—47,

யுறும் நாடுகளின் பங்கு குறைந்ததும், வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து நிதி வருகை குறைந்து கடன்களைத் திருப்பித் தருவது உட்பட வளர்ச்சியுறும் நாடுகளிலிருந்து வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு வரும் மூலதனத்தின் அதிகரிப்பும் அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. வளர்ச்சியுறும் நாடுகளுக்கு அனுகூலமற்ற வகையில் உருவாகி வரும் நிலவரத்தைக் கணக்கில் கொண்ட மகாநாட்டினர் பரஸ்பர ஒத்துழைப்பை ஊக்குவிக்கவும், தமது மூலாதாரங்களிலும் தேவைகளிலும் உள்ள பரஸ்பரம் இட்டு நிரப்பும் அம்சங்களைச் செயலாண்மையோடு பயன்படுத்துவதன் மூலம் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்குத் துணை புரியவும், உள் பிரதேச மட்டத்திலும் பிரதேசங்களுக்கு இடையேயும் வளர்ச்சியுறும் நாடுகளின் மத்தியில் ஒத்துழைப்பிற்கும் இணைப்பிற்குமான இயக்கத்தைத் தீவிரப்படுத்தி விரிவாக்கவும், மேலும், இணைப்பின் அனுகூலங்கள் அந்நியக் கம்பெனிகளுக்குச் செல்லாமல் வளர்ச்சியுறும் நாடுகளின் மக்களுக்குச் செல்லுமாறு செய்ய அவசியமான நடவடிக்கைகளை எடுக்கவும் முடிவு செய்தனர். முன்வைக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக விரிவான செயல்திட்டம் உருவாக்கப்பட்டது. இதில் வர்த்தகம், ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றைத் திட்டமிடல், தொழிற்துறைப் பொருட்கள், மற்ற பொருட்களின் உற்பத்தி, உள்ளமைப்பு வளர்ச்சி, விஞ்ஞான, தொழில்நுட்ப சாதனைகளைப் பயன்படுத்துதல் முதலியவை சம்பந்தமான பிரச்சினைகள் அடங்கியிருந்தன.

கூட்டுச் சேராமை மற்றும் பொருளாதார முன்னேற்றம் பற்றிய பிரகடனத்தில் அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்கள், ஐ.நா. சங்கத்தின் அடுத்த அமர்வில் நீண்டகால வளர்ச்சித் திட்டத்தைப் பற்றிய பிரகடனத்தை ஏற்கும் பிரச்சினையை முன்வைக்கும் தமது உறுதியைக் குறிப்பிட்டனர். இப்பிரகடனத்தில் வளர்ச்சியின் லட்சியங்கள் மற்றும் கடமைகளும் வெற்றியை அடைவதற்கான கொள்கையும் வழிமுறைகளும் குறிப்பிடப்பட்டிருக்கும். உதாரணமாக, மூலப் பொருளை அதிகபட்சம் பயன்படுத்தும் முறை, அந்தந்த இடத்திலேயே இதைப் பதப்படுத்த ஏற்பாடு செய்தல், தயாரான பொருட்களை இளம் அரசுகள் முதலாளித்துவ நாடுகளின் சந்தைகளுக்கு எடுத்துச் செல்லும் சூழ்நிலைகளை மேம்படுத்தும் முறை ஆகியன உருவாக்கப்பட வேண்டும். மேலும் தயாரான பொருட்கள், பாதி தயாரான பொருட்கள்ஆகியவற்றின் சர்வதேச வர்த்தகத்தில் வளர்ச்சியுறும் நாடுகளுக்கு மேன்மேலும் கூடுதலான பங்கை அளிக்கவல்ல நடவடிக்கைகளை நிறைவேற்றவும் சிபாரிசு செய்யப்பட்டது.

பொருளாதார வளர்ச்சி பற்றிய முன்மொழிவுகளோடு கூட சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்தும் பிரகடனம், காலனி நாடுகளுக்கும் மக்களினங்களுக்கும் சுதந்திரம் வழங்குவதைப் பற்றிய பிரகடனத்தை விரைவாகவும் முழுமையாகவும் நிறைவேற்றும் நோக்கமுடைய செயல்திட்டம் ஆகியவற்றை ஏற்பது பற்றிய முன்மொழிவுகளையும் பத்தாண்டு ஆயுதக்களைப்பு செயல்திட்டம் மற்றும் சமுத்திரப்

பரப்பை சமாதான நோக்கங்களுக்காகப் பயன் படுத்தும் கோட்பாடுகளின் பிரகடனத்தை ஏற்பது பற்றிய முன்மொழிவுகளையும் நடைபெற விருக்கும் ஐ.நா. சங்க அமர்வில் வைப்பதென கூட்டுச் சேரா நாடுகளின் அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்கள் முடிவு செய்தனர். கூட்டுச் சேராமை மற்றும் பொருளாதார முன்னேற்றம் பற்றிய பிரகடனம் ஏற்கப்பட்டதானது ஒரு மரபை ஏற்படுத்தியது; இதற்குப் பிந்தைய மகாநாடுகளில்இரு முக்கிய ஆவணங்கள் ஏற்கப்படலாயின: ஒரு ஆவணம் அரசியல் பிரச்சினைகளை உள்ளடக்கி நின்று அரசியல் பிரகடனம் எனும் பெயரைப் பெற்றது, மற்றது பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றிய தீர்மானங்களை உள்ளடக்கி பொருளாதாரப் பிரகடனம் என்று அழைக்கப்பட்டது.

இறுதியாக, இந்து மகா சமுத்திரத்தை அமைதி மண்டலமாக அறிவிக்கும் பிரச்சினையை ஐ.நா. சங்கத்தில் விவாதத்திற்கு முன்வைக்கும் முடிவு முதன் முதலாக லுஸாக்காவில் எடுக்கப் பட்டது.

அடுத்து நடந்த கூட்டுச் சேரா அரசுகளின் மகாநாடுகள் பொருளாதாரப் பிரச்சினைகளின் மீது அதிகக் கவனம் செலுத்த ஆரம்பித்தது முற்றிலும் இயற்கையானது, நியதியானது. ஏனெனில் பெரும்பான்மையான வளர்ச்சியுறும் அரசுகளுக்கு அரசியல் சுதந்திரம் உறுதியடைந்து வருகையில் பொருளாதார சுதந்திரத்தை வெல்லும் பிரச்சினைகள் மேன்மேலும் கடுமையாக இவற்றின் முன்நிற்கத் துவங்கின. கூட்டுச்சேரா நாடுகளுக்கு இடையில் நிரந்தரத் தொடர்புகளுக்கு வகை

செய்யவும் மகாநாடுகளின் தீர்மானங்களை நிறைவேற்றவும் ஸ்தாபன இயந்திரத்தைத் தோற்றுவிக்க லுஸாக்கா மகாநாட்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. விவாதங்களின் பயனாய் இயக்கத் தலைவருக்கு (அதாவது எந்த நாட்டில் மகாநாடு நடைபெற்றதோ அந்நாட்டின் ஜனாதிபதி அல்லது பிரதம மந்திரி), ''உறுப்பு அரசுகளுக்கு இடையே தொடர்புகளை வைத்துக்கொள்ளவும் இயக்கத்தில் ஒரு தொடர்ச்சிக்கு வழிகோலவும் தீர்மானங்கள், பிரேரணைகள், கட்டளைகளை நிறைவேற்ற வகை செய்யவும்''* அதிகாரம் அளிக்கப்பட்டது. ஐ.நா. சங்கத்திலும் மற்ற சர்வதேச உறுப்புகளிலும் உள்ள கூட்டுச் சேரா நாடுகளின் பிரதிநிதிகள், தீர்மானங்கள், பிரேரணைகள், கட்டளைகளை நிறைவேற்றும் முகமாகத் தமது முயற்சிகளை ஒன்றிணைத்து ஒத்திசைந்து செயல்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

**கூட்டுச் சேரா நாடுகளின் நான்காவது மகாநாடு** (அல்ஜீரியா, 1973, செப்டெம்பர் 5—9) தனது இறுதிப் பத்திரங்களில் (அரசியல் பிரகடனம், பொருளாதாரப் பிரகடனம், பொருளாதார ஒத்துழைப்பு பற்றிய செயல்திட்டம், தனிப்பட்ட அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளின் மீதான தீர்மானங்கள் ஆகியவற்றில்) கூட்டுச் சேராக் கொள்கையின் அரசியல், பொருளாதார அம்சங்களை மிக முழுமையாக வெளிப்படுத்தியது.

அரசியல் பிரகடனத்தில் மகாநாட்டினர், சர்வதேச நிலவரத்தில் உருவாகியுள்ள ஒரு சில

---

* *Two Decades of Non-Alignment*, pp. 57—58.

அனுகூலமான அம்சங்களையும் சமாதானம், சுதந்திரம் மற்றும் முன்னேற்றச் சக்திகள் கணிசமாக வலுவடைந்துள்ளதையும் குறிப்பிட்டனர். அதே நேரத்தில் அவர்கள், ''கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையிலான உறவுகளில் பதட்டநிலைத் தணிவு கணிசமான வெற்றிகளை அடைந்திருந்தாலும், காலனியாதிக்கம், நவீன காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம், ஜியோனிசம், அந்நிய ஆதிக்கம், அந்நிய ஆக்கிரமிப்பு ஆகியன நமது சகாப்தத்தின் யதார்த்தங்களாக அப்படியே இருக்கின்றன''* என்று குறிப்பிட்டனர்.

அல்ஜீரியா மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் கூட்டுச் சேராக் கொள்கை சம்பந்தமாக முன்னர் உருவாக்கப்பட்ட லட்சியங்களையும் கோட்பாடுகளையும் ஊர்ஜிதப்படுத்தி முதன் முதலாக அரசியல் பிரகடனத்தில் பின்வருமாறு எழுதினார்கள்: ''சர்வதேச உறவு நிலைக்கான பொறுப்பை முழுமையாகப் பகிர்ந்து கொள்ளவும் மனித குலத்தின் எதிர்காலம் எந்தப் பிரச்சினைகளைச் சார்ந்துள்ளதோ அவற்றின் தீர்விற்குப் பங்காற்றவும் கூட்டுச் சேரா நாடுகள் முன்போன்றே முன்னேற்றத்தை ஆதரிக்கும் எல்லா சக்திகளுடனும் சேர்ந்து சர்வதேச உறவுகளை ஜனநாயக மனப்பாங்கில், எல்லா அரசுகளுக்குமிடையான சமத்துவ மனப்பாங்கில் மாற்றுவதற்குப் பாடுபட வேண்டும்.''**

அரசியல் பிரகடனத்தில் சர்வதேசப் பதட்ட

---

* *Two Decades of Non-Alignment*, p. 94.

** *Ibid.*

நிலைத் தணிவிற்கான அணுகுமுறையில் புதிய அம்சங்கள் குறிப்பிடப்பட்டன: இதை உலகின் எல்லா பிரதேசங்களுக்கும் எடுத்துச் செல்ல வேண்டுமென்றும் ஆப்பிரிக்காவிலும் தென் கிழக்கு ஆசியாவிலும் (கம்பூச்சியாவில்) மத்தியக் கிழக்கிலும் (இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு) தொடரும் யுத்தங்களை நிறுத்த வேண்டுமென்றும் மகாநாட்டினர் அறிவித்தனர். மகாநாட்டின் தீர்மானங்களில் முதன் முதலாக நிறவெறியின் ஒரு வடிவமாக ஜியோனிசத்தின் மீதான நேரடியான கண்டனம் அடங்கியுள்ளது. தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய பிரகடனத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: ''எல்லா சமாதான வழிகளும் தீர்ந்து போய், காலனியாதிக்க வல்லரசுகளின் விடாப்பிடியையும் நேட்டோ நாடுகள் உள்ளிட்ட (அமெரிக்க ஐக்கிய நாடு, பிரான்ஸ், கிரேட் பிரிட்டன், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு) இவற்றின் பாதுகாவலர்களின் ஆதரவையும் சந்திக்க நேரிடும் போது, சுயநிர்ணயத்திற்கும் விடுதலைக்கும் உள்ள தமது உரிமையை மதிக்குமாறு செய்ய ஒடுக்கப்பட்ட மக்களினங்களுக்கு ஆயுதப் போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லை.''*

கூட்டுச் சேரா நாடுகள், விடுதலை இயக்கங்களுக்கான தமது இராணுவ, பொருளாயத, அரசியல், தார்மீக உதவியை அதிகரிக்க உறுதி பூண்டு, உதவி மற்றும் ஒருமைப்பாட்டு நிதியை ஏற்படுத்த முடிவு செய்தன, இதற்கு ஆதரவு

---

* *Ibid.*, p. 109.

நல்குமாறு எல்லா அரசுகளுக்கும் அறைகூவல் விடுத்தன. முன்னர் ஏற்கப்பட்டத் தீர்மானங்களுடன் சேர்த்து காலனியாதிக்க, நிறவெறி ஆட்சிக் கும்பல்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளைப் பற்றிய தீர்மானம் ஆமோதிக்கப் பட்டது:போர்த்துகல்,தென்னுப்பிரிக்கக் குடியரசு, ரோடீசியா, இஸ்ரேலுடன் சகலவித உறவுகளையும் முறித்துக் கொள்வது, தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் அல்லது முடக்குதல்; பல்வேறு சர்வதேச மேடைகளில் இந்த ஆட்சியினரை அம்பலப் படுத்துதல்; காலனியாதிக்கத்திற்கும் தென்னுப் பிரிக்கக் குடியரசு, ரோடீசியா, இஸ்ரேல் ஆட்சியினருக்கும் ஆதரவளித்து வரும் மேலைய நாட்டு அரசாங்கங்களின் கொள்கையை அம்பலப் படுத்துதல்.

பொருளாதாரப் பிரச்சினைகளைப் பொறுத்த மட்டில் அல்ஜீரியா மகாநாட்டினர் மிக முக்கிய ஆவணங்களை — பொருளாதாரப் பிரகடனம், பொருளாதார ஒத்துழைப்பு பற்றிய செயல்திட்டம்,பிரகடனம் மற்றும் செயல்திட்டத்தின் கருத்து நிலைகளைத் திட்டவட்டமாக்கும் பல தனிப்பட்ட தீர்மானங்கள் ஆகியவற்றை—ஏற்றனர். மூன்ருவது மகாநாட்டில் ஏற்கப்பட்ட கூட்டுச்சேராமை மற்றும் பொருளாதார முன்னேற்றம் பற்றிய பிரகடனத்தில் ஒத்துழைக்கவும் கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கோரும் அறைகூவலும் சர்வதேசப் பொருளாதார உறவுமுறைகளை மாற்றியமைக்கும் கடமையை ஐ.நா. சங்கத்தின் முன் வைக்கக் கோரும் அறைகூவலும் மட்டுமே அடங்கியிருந்தன என்ருல், நான்காவது மகாநாட்

டில் கூட்டுச் சேரா இயக்கத்தின் உறுப்பு நாடுகளா கிய வளர்ச்சியுறும் நாடுகளுக்கான சிபாரிசுகள் ஆமோதிக்கப்பட்டன: எண்ணெய் ஏற்றுமதி செய் யும் நாடுகளின் ஸ்தாபனம்,[10] தாமிரம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அரசாங்க கவுன்சில்[11] போன்ற கூட்டமைப்புக்களின் மாதிரியில் மூலப்பொருட் களை உற்பத்தி செய்யும் நாடுகளின் நலன்களைப் பாதுகாப்பதற்கான ஒருமைப்பாட்டு ஸ்தாபனங் கள் தோற்றுவிக்கப்பட வேண்டும். இவை சொந்த நலன்களுக்காக இயற்கை மூலாதாரங்களைப் பயன் படுத்துவதை எளிதாக்க வல்லவை. இவை ஏற்று மதியால் கிடைக்கும் வருமானத்தையும் உண்மை வருமானங்களையும் கணிசமாக அதிகப்படுத்தவும் மேலும் இந்த மூலாதாரங்களை நாட்டின் பொரு ளாதார வளர்ச்சியை அதிகப்படுத்தி மக்கள் அனைவரின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் நோக் கங்களுக்காகப் பயன்படுத்தவும் வாய்ப்புக்களை அளிக்கின்றன.''*

வளர்ச்சியுறும் நாடுகளின் விடுதலை மற்றும் முன்னேற்றப் பாதையில் ஏகாதிபத்தியம்தான் இன்னமும் மிகப் பெரும் தடையாக இருக்கிறது என்றும் இது அவற்றின் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கு எதிராக நிற்பதோடன்றி, யாரெல்லாம் தன் திட்டங்களை எதிர்க்கின்றார் களோ அவர்கள் விஷயத்தில் ஆக்கிரமிப்பு நிலையை மேற்கொள்கிறது என்றும் பொருளாதாரப் பிர கடனத்தில் மகாநாட்டினர் குறிப்பிட்டனர். அந்நிய ஆதிக்கம், சார்பு நிலை மற்றும் நவீன

---

* *Two Decades of Non-Alignment*, p. 102.

காலனியாதிக்கத்திற்கு அனுகூலமான அரசியல், சமூக, பொருளாதார அமைப்புகளை இந்நாடுகளின் மீது திணிக்க ஏகாதிபத்தியம் முயலுகிறது.*

வளர்ச்சியுறும் நாடுகளில் பன்னாட்டுக் கார்ப்பரேஷன்களின்[12] நடவடிக்கை வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. ''வளர்ச்சியுறும் நாடுகளின் அரசுரிமையைத் தாக்கி, தலையிடாமைக் கோட்பாடுகளையும் மக்களினங்களின் சுயநிர்ணய உரிமையையும் மீறும் பல்தேசிய கார்ப்பரேஷன்களின் அனுமதிக்க இயலா நடவடிக்கையை அரசுத் தலைவர்கள் உலக மக்களின் முன் அம்பலப்படுத்துகின்றனர்.''**

அல்ஜீரியாவில் நடைபெற்ற கூட்டுச் சேரா நாடுகளின் 4வது மகாநாட்டில் ஏற்கப்பட்ட பொருளாதாரப் பிரகடனம், மூலப்பொருட்கள், பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகள் சம்பந்தமாக 1974ஆம் ஆண்டு வசந்த காலத்தில் நடைபெற்ற ஐ.நா. சங்கத்தின் 6வது விசேஷ பொதுச் சபை அமர்வில் இயக்க நாடுகள் முன்வைத்த ஆலோசனைகளுக்கு அடிப்படையாகத் திகழ்ந்தது.

பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றிய அல்ஜீரியா மகாநாட்டின் தீர்மானங்களை ஆதாரமாகக் கொண்டு கூட்டுச் சேரா அரசுகள் நடைமுறையில் சர்வதேசப் பொருளாதார உறவுகளின் புதியக் கோட்பாடுகளை அமுல்படுத்துவதற்காக காலனியாதிக்கத்திற்கு எதிரான கூட்டுப் போராட்ட

---

* *Ibid.*, p. 99.

** *Ibid.*, p. 102.

வடிவங்களைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தன. உதாரணத்திற்குச் சர்வதேச எண்ணெய் கார்ட்டெல் மற்றும் தனிப்பட்ட அந்நிய ஏகபோகங்களின் அசைக்க முடியாததாகத் தோன்றிய நிலைகளின் மீதான முதல் தீவிர அடிகளைக் குறிப்பிடலாம். ஐ.நா.சங்க உறுப்புகளின் மகாநாடுகளிலும் பொதுச் சபை அமர்வுகளிலும் ''77-குழு'' உறுப்பு நாடுகளின் ஒற்றுமையான நடவடிக்கைகளும் இதற்குச் சான்ருகத் திகழுகின்றன. 1974 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் விசேஷ அமர்வில் வளர்ச்சியுறும் நாடுகளின் முன்முயற்சியால் ஏற்கப்பட்ட ''புதிய சர்வதேசப் பொருளாதார முறையை நிலைநாட்டும் அறிக்கையும்'' ''செயல்திட்டமும்'', 1974 ஆம் ஆண்டு டிசம்பரில் ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் வழக்கமான அமர்வில் புதிய பொது ஆவணத்தில்—அரசுகளின் பொருளாதார உரிமைகள் மற்றும் கடமைகளின் சாசனத்தில்—சேர்க்கப்பட்டன. அது முதற்கொண்டு இது ஐ.நா. சங்க உறுப்பு நாடுகளின் பரஸ்பர பொருளாதார உறவுகளை ஒழுங்கமைக்கும் ஐ.நா. சங்க அடிப்படை ஆவணமாக விளங்கி வருகிறது.

அல்ஜீரியா மகாநாட்டின் தீர்மானங்களில், சோஷலிச நாடுகளுடன் கூட்டுச் சேரா அரசுகளுக்கு உள்ள ஒத்துழைப்புப் பிரச்சினை மீது பெரும் கவனம் செலுத்தப்பட்டது. உதாரணமாக, பொருளாதார ஒத்துழைப்புச் செயல்திட்டத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: ''சோஷலிச நாடுகளுடனை விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பை வளர்ப்பதற்கு, உதாரணமாக,

அரசுகளுக்கிடையே உடன்படிக்கைகள் செய்து கொள்வது, தேவையான கூட்டு உறுப்புகளைத் தோற்றுவிப்பது, அக்கறையுள்ள ஸ்தாபனங்கள், நிறுவனங்களுக்கு இடையேயான உறவுகளை விரிவு படுத்துவது ஆகியவற்றின் மூலம் இதைச் செய்வதற்கு ஊக்கமளிக்க கூட்டுச் சேரா நாடுகள் உறுதி பூண்டுள்ளன.''*

அல்ஜீரியா மகாநாட்டில் இணைப்பு அலுவலகம் ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது. ஏனெனில் இயக்கத்தில் பங்கேற்கும் நாடுகளின் எண்ணிக்கை அதிகமாக ஆக, நிரந்தர உறுப்பின் தேவை மேன்மேலும் அதிகமாக உணரப்பட்டது.

அடுத்த மகாநாட்டிற்கான தயாரிப்புப் பணிகள் அனைத்தையும் செய்வது, இதில் விவாதிக்கப் படும் பிரச்சினைகளைத் தயார் செய்வது, ஐ.நா. சங்கம் போன்ற இடங்களில் கூட்டுச் சேரா அரசுகளின் நடவடிக்கைகளையும் நிலைகளையும் ஒத்தியைந்து இருக்குமாறு செய்தல், முந்தைய மகாநாடுகளில் ஏற்கப்பட்ட தீர்மானங்களின் நிறைவேற்றத்திற்குத் துணை புரிதல் முதலியன இணைப்பு அலுவலகத்தின் பணிகளாகும்.

**கூட்டுச் சேரா நாடுகளின் ஐந்தாவது மகாநாடு** 1976ஆம் ஆண்டு ஆகஸ்டு 16 முதல் 19 வரை கொழும்புவில் (ஸ்ரீலங்கா) நடைபெற்றது. முதன் முதலாக ஆசியா கண்டத்தில் இத்தகையதொரு மகாநாடு நடைபெற்ற போது ஆப்பிரிக்காவிலும் தென் கிழக்கு ஆசியாவிலும் தேசிய விடுதலை இயக்கங்கள் பெரும் வெற்றிகளை அடைந்திருந்தன;

---

* *Two Decades of Non-Alignment*, p. 107.

ஐரோப்பிய பாதுகாப்பு, ஒத்துழைப்பிற்கான பொது ஐரோப்பிய மகாநாடு ஹெல்சிங்கியில் நடைபெற்றது; பதட்ட நிலைத் தணிவு சர்வதேச வளர்ச்சியின் முக்கியப் போக்காக மாறியது; ஸ்பெயினிலும் கிரீசிலும் பாசிச ஆட்சிக் கும்பல்கள் தகர்ந்து விழுந்தன; எத்தியோப்பியாவில் சர்வாதிகார ஆட்சி முறியடிக்கப்பட்டது; வியட்நாமிலும் லாவோசிலும் தேசிய ஜனநாயகப் புரட்சிகள் வெற்றி பெற்றன. கூட்டுச்சேரா சக்திகள், சோஷலிச சக்திகள், இதர சமாதான சக்திகள் மற்றும் உலக முற்போக்கு, ஜனநாயக சக்திகளின் முயற்சிகளின் பயனாய் மக்களினங்களின், மனிதனின் விடுதலையில் பெரும் வெற்றிகள் அடையப்பட்டன என்று மகாநாட்டில் உரையாற்றுங்காலை டிட்டோ குறிப்பிட்டார்.

மகாநாடு சில முக்கிய ஆவணங்களை—அரசியல் பிரகடனம், பொருளாதாரப் பிரகடனம், பொருளாதார ஒத்துழைப்பு சம்பந்தமான செயல் திட்டம், தனிப்பட்ட பிரச்சினைகள் குறித்த இன்னும் சில தீர்மானங்கள் ஆகியவற்றை— ஏற்றது.

கொழும்பு மகாநாட்டின் மிக முக்கிய சாதனைகளில் ஒன்று, பாதுகாப்பு மற்றும் ஆயுதக் களைப்பு சம்பந்தமாக இந்த மகாநாட்டில் கலந்து கொண்டவர்களால் உருவாக்கப்பட்ட பரவலான செயல் திட்டமாகும். உலகில் ஆயுதங்களுக்கான செலவுகள் இதுவரையில்லாத அளவிற்குப் பெருகி வருவதைத் தடுத்து நிறுத்தி, இதில் ஒரு பகுதியையாவது வளர்ச்சியுறும் நாடுகளுக்கு அளித்தால், அது வளர்ச்சியடைந்த நாடுகளின் வளர்ச்சி

மட்டத்திற்கும் வளர்ச்சியுறும் நாடுகளின் வளர்ச்சி மட்டத்திற்கும் இடையிலுள்ள ஆபத்தான இடைவெளியை அகற்ற உதவும் என்று மகாநாட்டினர் கோடிட்டுக் காட்டினர். ஆயுதக் கலைப்பு பிரச்சினைகள் சம்பந்தமாக 1978ஆம் ஆண்டு மே—ஜூனில் நடைபெற்ற ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் 10வது விசேஷ அமர்வில் சோஷலிச அரசுகளால் ஆதரிக்கப்பட்ட வளர்ச்சியுறும் நாடுகளின் இந்தக் கோரிக்கைகள் அமர்வில் ஏற்கப்பட்ட தீர்மானங்களில் சேர்க்கப்பட்டன.

தென்னுப்பிரிக்கா, நமீபியா ஆகியவற்றைப் பற்றிய மகாநாட்டின் தீர்மானங்களும் பன்துஸ்தான்களை[13] ஒப்புக்கொள்ளாமை, தென்னுப்பிரிக்காவிலுள்ள நிறபேதம் மற்றும் இனவெறிக் கண்டனம் (உதாரணமாய் விளையாட்டில் இனவெறி இருப்பதைப் பற்றிய கண்டனம்), மத்திய கிழக்கு நிலவரம், பாலஸ்தீனப் பிரச்சினை போன்றவற்றைப் பற்றிய தீர்மானங்களும் ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், நவீன காலனியாதிக்கம், நிறவெறி ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்தில் கணிசமான பங்காக அமைந்தன. இந்து மகா சமுத்திரம் பற்றி முன்னர் உருவாக்கப்பட்ட தீர்மானத்தை ஊர்ஜிதப்படுத்திய ஐந்தாவது மகாநாடு இதில் புதிய அம்சங்களைச் சேர்த்தது: டியகோ-கார்சியா தீவில் உள்ளதைப் போன்ற அந்நிய இராணுவத் தளங்களைத் தோற்றுவிப்பது, பராமரிப்பது, விரிவுபடுத்துவது ஆகியவற்றை மகாநாடு கண்டனம் செய்தது, இந்து மகா சமுத்திரத்தை அமைதி மண்டலமாக மாற்றும்

பிரகடனத்தின் நிறைவேற்றத்திற்கு இடையூறு விளைவிக்க வல்ல எந்த ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடாமலிருக்குமாறு பெரும் வல்லரசுகளுக்கு அறைகூவல் விடுத்தது, இராணுவ, கடற்படைத் தளங்களையும் இராணுவ அமைப்புக்களையும் கலைக்குமாறும் இப்பிரதேசத்தில் அணு ஆயுதத்தையும் மற்ற பேரழிவு ஆயுதங்களையும் வைக்காதிருக்குமாறும் அமெரிக்க ஐக்கிய நாட்டைக் கோரியது. ஐ.நா. சங்க விதிமுறைகளுக்கு முரண்பாடாக இப்பிரதேச அரசுகளின் அரசுரிமை, பிரதேச முழுமை மற்றும் பாதுகாப்பைக் குலைக்கும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படக் கூடிய அந்நியப் போர்க்கப்பல்கள், விமானங்களுக்குச் சீர்க்காப்பு பணி வசதிகளைச் செய்து தர வேண்டாமென இப்பிரதேச நாடுகளுக்குக் கூட்டுச் சேரா அரசுகள் முன்மொழிந்தன. இறுதியாக, இந்து மகா சமுத்திரம் பற்றிய மகாநாட்டை விரைவாகக் கூட்டவும் இந்து மகா சமுத்திரத்தை அமைதி மண்டலமாக்கும் பிரகடனத்தை நிறைவேற்றவும் ஒத்தியைந்து செயல்படும் உறுதியை இவை தெரிவித்தன.

மத்திய கிழக்கு நிலவரம் பற்றிய பிரச்சினையில், ஆக்கிரமிப்பிற்காக இஸ்ரேலையும் இஸ்ரேலுக்குத் தொடர்ந்து இராணுவ, பொருளாதார, அரசியல் உதவி செய்து வருவதற்காக அமெரிக்க ஐக்கிய நாட்டையும் கண்டித்த முந்தையத் தீர்மானங்களை ஊர்ஜிதப்படுத்திய மகாநாடு, இஸ்ரேலுக்கு ஆயுதம் வழங்கும் நாடுகளை வன்மையாகக் கண்டித்தது. ஐ.நா. சங்கம் மற்றும் இதன் விசேஷ ஸ்தாபனங்களின் வரம்புகளுக்குள் இஸ்

ரேல் மீது தாக்கம் செலுத்தும் நடவடிக்கைகளை —இஸ்ரேலை இந்த ஸ்தாபனங்களிலிருந்து வெளியேற்றும் வாய்ப்பு உட்பட—தேடப் போவதாக மகாநாட்டினர் அறிவித்தனர். ஐ.நா. சங்கப் பாதுகாப்புக் கவுன்சிலில் முட்டுக்கட்டை நிலையை மேற்கொண்டதற்காக அமெரிக்க ஐக்கிய நாட்டைக் கண்டனம் செய்த அவர்கள், ஐ.நா. சங்கக் கூட்டங்கள் அனைத்திலும் பாலஸ்தீன மக்களின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளுமாறு பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்துக்கு அழைப்பு விடுக்க ஐ.நா. சங்கம் செய்த முடிவை வரவேற்றனர், இன்னமும் இஸ்ரேலுடன் ராஜதந்திர, பொருளாதார உறவுகளை வைத்திருந்த கூட்டுச் சேரா நாடுகளுக்கு இவற்றை முறித்துக் கொள்ளுமாறு அறைகூவல் விடுத்தனர்.

தென்னாப்பிரிக்காவைப் பற்றிய தீர்மானமும் கூட்டுச் சேரா இயக்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்கு பலமடைந்ததற்குச் சான்றாகத் திகழுகிறது: தென்னாப்பிரிக்க மக்களுக்கு அளிக்கும் உதவியைத் தீவிரப்படுத்துமாறும் இந்நாட்டிற்குச் செல்லும் அல்லது இந்நாட்டிலிருந்து வெளிவரும் விமானங்கள், கப்பல்களுக்குச் சீர்க்காப்பு பணி வசதிகளை அளிக்க வேண்டாமென்றும் மகாநாட்டினர் எல்லா அரசுகளுக்கும் அறைகூவல் விடுத்தனர்.

பொருளாதாரப் பிரகடனத்தில் ''சர்வதேசப் பொருளாதாரக் கட்டமைவில் நிலவும் அப்பட்டமான சமமின்மை மற்றும் சீரிசைவின்மையும்'' வளர்ச்சியுறும் நாடுகளின் பண இருப்புகளின் பற்றாக்குறையின் பெரும் அதிகரிப்பும் கோடிட்டுக்

காட்டப்பட்டுள்ளன. இப்போது நிலவும் சர்வ தேசப் பொருளாதார உறவுகளில் சீர்திருத்தம் செய்யும் தமது முயற்சிகள் எவ்வளவு வீணுகப் போகின்றன என்று மகாநாட்டினர் குறிப்பிட்ட னர். தமது இயற்கைச் செல்வங்களையும் மற்ற மூலாதாரங்களையும் காலனியாதிக்கவாதிகள் சுரண்டியதற்காக முழு நஷ்ட ஈடு கேட்க வளர்ச்சி யுறும் நாடுகளுக்குள்ள உரிமையை ஊர்ஜிதப் படுத்திய மகாநாடு, ''பொருளாதார மட்டத் தில் சுதந்திரத்தையும் அரசுரிமையையும் பெறு வதற்கான தூண்டுகோலாக''* இந்நாடுகள் அரசியல் சுதந்திரத்தைப் பயன்படுத்த வேண் டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது.

அல்ஜீரியாவில் நடைபெற்ற நான்காவது மகாநாட்டின் தீர்மானங்கள், கூட்டுச் சேரா நாடுகளுக்கும் மற்ற வளர்ச்சியுறும் நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பிற்கான அடிப் படையாக மாறி, புதிய சர்வதேசப் பொருளா தார முறையைத் தோற்றுவிப்பதற்கான சர்வ தேசப் பேச்சுவார்த்தைகள் தீவிரமடையவும் இதன் விளைவாகப் புதிய சர்வதேசப் பொருளா தார முறையை நிலைநாட்டும் பிரகடனம், செயல் திட்டம் போன்ற முக்கிய ஆவணங்களை ஐ.நா. சங்கம் ஏற்குமாறுச் செய்யவும் துணை புரிந்தன என்றால், ஐந்தாவது மகாநாட்டினர் ''வளர்ச்சி யுறும் உலகின் வரம்புகளுக்குள் பரஸ்பர ஆதாயம் மற்றும் கூட்டுப் பொருளாதார முன்னேற்றத்திற் காகப் புதிய, கூடுதல் வாய்ப்புகளையும் மூலசக்தி

---

* *Two Decades of Non-Alignment*, p. 209.

களையும் பயன்படுத்தத் தேவையான முறைகளை உருவாக்குவதற்கான''* சிபாரிசுகளை உருவாக்கினர்.

கொழும்பு மகாநாடு, கூட்டுச் சேரா நாடுகளுக்கும் மற்ற வளர்ச்சியுறும் நாடுகளுக்கும் இடையே பொருளாதார ஒத்துழைப்புத் துறையில் முக்கியத் தீர்மானங்களை நிறைவேற்றியது. உதாரணமாக, மூலப்பொருள் உற்பத்தியாளர்களின் புதிய ஐக்கியங்களைத் தோற்றுவிப்பது, அவசர கால மூலப்பொருள் இருப்புக்களைத் தோற்றுவிக்க நிதியுதவி செய்யும் விசேஷ நிதியை நிறுவுதல், வர்த்தகம் மற்றும் வளர்ச்சி பற்றிய ஐ. நா. மகாநாட்டின் (UNCTAD) நடைபெறவிருக்கும் அமர்வில் ஒரே நிலையையும் சர்வதேச வர்த்தகக் கோட்பாடுகளையும் உருவாக்குதல், ஒருமைப்பாட்டு நிதி பற்றிய முடிவை அங்கீகரித்தல், பல்தரப்புத் தொழிற்துறை ஒத்துழைப்பை வளர்த்தல் போன்றவை இவற்றில் அடங்கும்.

கூட்டுச்சேரா அரசுகளின் செய்தி நிறுவனங்களின் பொது மையத்தைத் தோற்றுவிக்கும் தீர்மானம் கொழும்புவில் எடுக்கப்பட்டது, கூட்டுச் செய்தி நிறுவனத்தின் அந்தஸ்து அதற்களிக்கப்பட்டது. தகவல் தொடர்பு மற்றும் செய்தித் துறையில் காலனியாதிக்கக் காலத்திலிருந்து மேலைய வல்லரசுகள் செலுத்தி வரும் ஆதிக்கத்திற்கு எதிரான கூட்டுச் சேரா நாடுகளின் போராட்டத்தில் இந்தத் தீர்மானம் ஒரு முக்கிய நடவடிக்கையாகும். வளர்ச்சியுறும் நாடுகள் மற்றும்

---

* *Ibid.*, p. 211.

கூட்டுச் சேரா இயக்கத்தைப் பற்றிய உண்மைச் செய்திகளைப் பரவலாக, சுதந்திரமாகப் பரப்ப வகை செய்வது இந்தப் பொது மையத்தின் கடமையாகும்.

**ஆறாவது மகாநாடு** (ஹவானா, 1979, செப்டெம்பர் 3—9) சிக்கலானதொரு அரசியல் சூழ்நிலையில் நடைபெற்றது. அமெரிக்க, இஸ்ரேலிய அரசாங்கங்கள் மற்றும் எகிப்திலிருந்த சதாத் ஆட்சி ஆகியவற்றின் சதித் திட்டங்களால்[14] மத்திய கிழக்கில் நிலவரம் கடுமையாகச் சீர்கேடடைந்தது. அன்றைய சீனத் தலைமையின் குற்றத்தால் சீன-வியட்நாம் எல்லையில் நிலவரம் உக்கிரமடைந்தது. ஹவானாவில் மகாநாடு துவங்கியத் தருணத்தில் கூட்டுச் சேரா நாடுகளிடையே —துரதிர்ஷ்டவசமாக ஆயுத மோதல் உட்பட— தகராறுகள் மேன்மேலும் அடிக்கடி தோன்றின. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏகாதிபத்தியச் சக்திகள், முதலாவதாக அமெரிக்க ஐக்கிய நாடு, மகாநாட்டிற்கு இழுக்கு ஏற்படுத்தி இதைக் குலைப்பதற்கான தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டன. தெட்டத் தெளிவான ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையை உடைய கூட்டுச் சேரா கோட்பாடுகள் மற்றும் லட்சியங்களை இயக்கத்தினர் கைவிடுமாறு செய்வதற்காக அமெரிக்க ஐக்கிய நாடும் இதன் நேட்டோ கூட்டாளிகளும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டன. நடைபெறவிருந்த மகாநாட்டின் இறுதி ஆவண நகலின் பிரதியைக் கண்டுபிடித்து ராஜதந்திர, மற்ற வழிகளில் இந்த ஆவண நகலுக்கு இழுக்கேற்படுத்த அமெரிக்காவின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகள் முயன்ற

னர். மகாநாடு நடந்து கொண்டிருந்த போது இரண்டாம் பட்சமான பிரச்சினைகளை மகாநாட்டினர் விவாதிக்குமாறு செய்யவும் இன்றைய உலகின் தீவிர பிரச்சினைகள் மீது தீர்மானங்களை எடுக்கும் முடிவற்ற விவாதங்களில் இவர்கள் ''மூழ்கிப் போகுமாறு'' செய்யவும் முயன்றனர்.

ஹவானா மகாநாடு கூட்டுச் சேரா இயக்கத்தின் வளர்ச்சிப் பாதையில் ஒரு முக்கிய மைல் கல்லாக அமைந்தது. இம்மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் இயக்கத்தின் முக்கியக் கோட்பாடுகளை ஊர்ஜிதப்படுத்தியதோடு கூட இவற்றின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்கைக் கணிசமான அளவு ஆழப்படுத்தினர், வலுப்படுத்தினர். ஒரு சில உதாரணங்களைப் பார்ப்போம். சமாதான சகவாழ்வு, பதட்டநிலைத் தணிவு மற்றும் ஆயுதக்களைப்பு பிரச்சினைகள் சம்பந்தமான தீர்மானங்களில், இராணுவ மோதலுக்குப் பதிலான ஒரே மாற்று வழியாகத் தொடர்ந்து சமாதான சகவாழ்வு இருந்து வருகிறது என்று கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. சர்வதேசப் பதட்டநிலைத் தணிவைப் பலப்படுத்த வேண்டுமென்றும் இதை உலகின் மற்றப் பிரதேசங்களுக்குப் பரப்ப வேண்டுமெனவும் மகாநாட்டினர் கருத்து தெரிவித்தனர். ஐரோப்பாவில் பதட்டநிலைத் தணிவிற்கு கூட்டுச் சேரா நாடுகள் ஆதரவு தெரிவித்ததும் இதைத் தொடருமாறு கூறியதும்—இது எல்லா அரசுகளின், குறிப்பாக இராணுவக் கூட்டுகளில் இல்லாத அரசுகளின் பாதுகாப்பை அதிகப்படுத்தும்—கோட்பாட்டு ரீதியான முக்கியத்துவம் வாய்ந்தது.

மத்திய கிழக்குப் பிரச்சினைகளைப் பற்றிய மகாநாட்டின் இறுதி ஆவணங்களில், கேம்ப்-டேவிட் உடன்படிக்கைகள் ''அரபு நாடுகளின் லட்சியங்களுக்கு இழைக்கப்பட்ட முழுத் துரோகம் என்றும் அரபு பிரதேசங்களைத் தொடர்ந்து (இஸ்ரேல் — ஆசிரியர்) ஆக்கிரமித்து நிற்கும் நடவடிக்கைக்கு இது துணைபுரிகிறது என்றும் பாலஸ்தீன மக்களின் பிரிக்க இயலா உரிமைகளை மீறுகிறது''* என்றும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. மத்திய கிழக்கு பிரச்சினை மீது கூட்டுச்சேரா இயக்கம் ஏற்கனவே நிறைவேற்றிய தீர்மானங்களிலிருந்து எப்படி விலகினாலும் அது அராபிய மக்களின் போராட்டத்தைச் சீர்குலைத்து இயக்கத்தின் ஒற்றுமைக்குக் கேடுவிளைவிக்கும் என்பதை ஆதாரமாகக் கொண்ட மகாநாட்டினர், கேம்ப்-டேவிட் உடன்படிக்கைகளையும் எகிப்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான ஒப்பந்தத்தையும்[15] கண்டித்தனர்; கூட்டுச் சேரா இயக்கத்தின் கோட்பாடுகளையும் தீர்மானங்களையும் மீறியதற்காக எகிப்தின் உறுப்பினர் பதவியை ரத்து செய்ய வேண்டுமென்ற சில அரபு நாடுகளின் யோசனையை விவாதித்தனர். எகிப்து அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் விளைவாய் அரபு நாடுகளுக்கு ஏற்பட்ட இழப்பை ஆராய்ந்து கூட்டுச் சேரா அரசுகளின் வெளிவிவகாரத் துறை அமைச்சர்கள் கூட்டத்தில் அறிக்கைச் சமர்ப்பிக்குமாறு விசேஷக் கமிட்டியாக இயங்கிய இணைப்பு அலுவலகத்திற்குப் பொறுப்பு அளிப்பதெனத் தீர்மானம் செய்யப்பட்டது.

* *Two Decades of Non-Alignment*, p. 414.

மத்திய கிழக்கில் தமது இராணுவ நடவடிக்கைகளை அதிகப்படுத்தியதற்காக ஏகாதிபத்திய வல்லரசுகளை, குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாட்டை வன்மையாகக் கண்டித்த மகாநாடு, ஐ.நா. சங்க விதிமுறையின் 7வது ஷரத்திற்கு ஏற்ப ஐ.நா. சங்க பாதுகாப்புக் கவுன்சில் இஸ்ரேலுக்கு எதிராகத் தடை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்திஞல் ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் விசேஷ அமர்வு கூட்டப்பட வேண்டுமென்றும் கோரியது. தமது தேசிய உரிமைகளுக்காகவும் நலன்களுக்காகவும் போராடும் பாலஸ்தீன மக்கள் மற்றும் அரபு நாடுகளுக்கான ஆதரவை அதிகரிக்குமாறும் மகாநாடு அறைகூவல் விடுத்தது.*

---

* 1980ஆம் ஆண்டு ஜுலையில் அரபு அரசுகளின் முன்மொழிவையடுத்து பாலஸ்தீன பிரச்சினைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் 7வது அவசர விசேஷ அமர்வு கூட்டப்பட்டது. தான் ஆக்கிரமித்துள்ள பிரதேசங்கள் முழுவதிலுமிருந்து இஸ்ரேல் வெளியேருவிடில் மத்திய கிழக்கில் நியாயமான, நிலையான சமாதானத்தை நிலைநாட்ட முடியாது என்பதை பொதுச் சபை மீண்டும் ஊர்ஜிதப்படுத்தியது, தனது சொந்தமான சுதந்திர தனி அரசைத் தோற்றுவிக்கப் பாலஸ்தீன மக்களுக்கு உள்ள பிரிக்க இயலா உரிமையை உறுதிப்படுத்தியது. அமெரிக்க ஐக்கிய நாடு, இஸ்ரேல், கனடா, ஆஸ்திரேலியா, நார்வே, குவாட்டிமாலா, டொமினிகன் குடியரசு ஆகிய நாடுகள் ஐ.நா. சங்கப் பொதுச் சபைத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தன.

காலனிகளைக் கலக்கும் பிரச்சினைகள் மீது ஆப்பிரிக்க நாடுகளால் முன்மொழியப்பட்ட முக்கிய முன்மொழிவுகள் அனைத்தையும் ஹவானா மகாநாட்டுப் பிரதிநிதிகள் ஒருமனதாக ஆதரித்தனர். ஜிம்பாபுவே, நமீபியா, தென்னாப்பிரிக்க மக்களினங்களின் போராட்டத்திற்கு முழு ஆதரவு தெரிவிக்கப்பட்டது; தென்னாப்பிரிக்கக் குடியரசிற்கு எதிராகப் பொருளாதார, மற்ற தடை நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கு ஆதரவாக சர்வதேச மகாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டுமென்ற வேண்டுகோளோடு மன்ரோவியாவில் நடைபெற்ற ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டு ஸ்தாபனத்தின் அமர்வு, ஐ.நா. சங்கப் பொதுச் செயலாளருக்கும் இனவெறிக்கு எதிரான ஐ. நா. விசேஷ கமிட்டிக்கும் விடுத்த அறிக்கை ஆமோதிக்கப்பட்டது. ஆப்பிரிக்காவின் தெற்கே நடைபெறும் தேசிய விடுதலை இயக்கங்களுக்கு அளிக்கும் உதவியை அதிகப்படுத்துமாறு எல்லா அரசுகளுக்கும் மகாநாடு அறைகூவல் விடுத்தது, இப்பிரதேச மக்களினங்களின் விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பதில் கூட்டுச் சேரா நாடுகள், ஐ.நா. சங்கம், ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டு ஸ்தாபனம், சோஷலிச நாடுகள், ஸ்காண்டினேவிய நாடுகள், மற்ற ஜனநாயக, முற்போக்குச் சக்திகள் ஆகியன ஆற்றி வரும் பங்கைப் பாராட்டியது. ''போர்க்கள அரசுகளுக்கு'' (அங்கோலா, போட்சுவானா, மொசாம்பிக், டன்சானியா, ஜாம்பியா) அளிக்கப்படும் உதவியையும் இவற்றுடனான ஒருமைப்பாட்டையும் அதிகப்படுத்தும் அவசியம் வலியுறுத்தப்

பட்டது. நிறவெறி ஆட்சியினரை அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, ஜப்பான், பெல்ஜியம், இத்தாலி, கனடா, ஆஸ்திரேலியா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் ஆதரிப்பதைக் கடுமையாக எதிர்த்த ஹவானு மகாநாட்டினர் இந்நாடுகளை நிறவெறியினரின் கூட்டாளிகள் என்று சித்தரித்தனர்.

முந்தைய சந்திப்புக்களை விட அதிக விரிவாக மகாநாட்டினர் லத்தீன் அமெரிக்காவிலும் கரிபியக் கடலோரப் பகுதியிலும் நிலவும் அரசியல் நிலவரத்தைப் பற்றி விவாதித்தனர், கூட்டுச் சேரா இயக்கத்தில் இப்பிரதேச நாடுகளின் பங்கு வளர்ந்து வருவதைக் குறிப்பிட்டனர் (ஹவானு மகாநாட்டில் 11 முழு உரிமையுள்ள உறுப்பு நாடுகள் லத்தீன் அமெரிக்காவைப் பிரதிநிதித்துவப்படுத்தின, இன்னும் 11 நாடுகள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டன; பொலிவியா, கிரினடா, நிக்கராகுவா, சுரினும் ஆகிய நாடுகள் கூட்டுச் சேரா இயக்கத்தின் முழு உரிமையுள்ள உறுப்பு நாடுகளாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டன). மகாநாட்டுத் தீர்மானங்களில் தேசிய விடுதலைக்காகப் போராடும் லத்தீன் அமெரிக்க மக்களினங்களின் போராட்டத்துடன் முழு ஒருமைப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது, குறிப்பாகப் புயெர்ட்டோ-ரிக்கா மற்றும் பெலிஸ்[16] நாட்டு மக்களுடனை ஒருமைப்பாடு வலியுறுத்தப்பட்டிருந்தது. ''இறுதி ஆவணத்தில்'' கியூபாவின் பாலான அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கொள்கை மீண்டும் வன்மையாகக் கண்டிக்கப்பட்டது, கியூபா மற்றும் புயெர்ட்டோ-ரிக்கா நாடுகளின்

பிரதேசங்களில் உள்ள அமெரிக்க கப்பற்படைத் தளங்கள் அகற்றப்பட வேண்டுமென்ற இந்நாடு களின் கோரிக்கைகளுடன் முழு ஒருமைப்பாடு தெரிவிக்கப்பட்டது. ஃபால்க்லேண்ட் (மால்வின்) தீவுகள் தனக்குத் திருப்பித் தரப்பட வேண்டு மென்ற அர்ஜென்டைனாவின் நியாயமான கோரிக் கையை மகாநாடு ஆதரித்தது.

கூட்டுச் சேரா நாடுகளின் அரசு மற்றும் அர சாங்கத் தலைவர்களின் 6வது மகாநாடு, சிலி நாட்டு மக்களின் போராட்டத்தோடு இயக்க உறுப்பினர்களின் ஒருமைப்பாடு பெருகி வருவது குறித்து திருப்தி தெரிவித்தது. சமோசா சர்வாதி காரியை முறியடித்த நிக்கராகுவா நாட்டு மக்களை மகாநாடு பாராட்டியது, நிக்கராகுவா பிரச்சினை யின் நியாயமான தீர்விற்காகக் கியூபா, மெக் சிகோ, பொலிவியா, கொலம்பியா, மற்ற லத் தீன் அமெரிக்க அரசாங்கங்களின் நடவடிக்கை களை உயர்வாக மதித்தது. அதே நேரத்தில் தெற்கு அட்லாண்டிக் பிரதேசத்தில் ஏகாதிபத்தியத்தின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு தென் னாப்பிரிக்கக் குடியரசிற்கும் ஒரு சில லத்தீன் அமெரிக்க அரசுகளுக்கும், முதலாவதாகப் பார குவே, சிலியுடன் பல்வேறு விதத் தொடர்புகளை நிலைநாட்டும் ஏகாதிபத்தியச் சூழ்ச்சிகளை மகா நாடு கண்டித்தது. இஸ்ரேலுடன் குவாட்டிமாலா விற்கும் சால்வடோருக்கும் உள்ளத் தொடர்பு கள் விரிவடைந்து உறுதிப்பட்டு வருவதையும் மகாநாடு கண்டித்தது; ''நடைமுறையில் இது, இந்த ஜியோனிச அரசின் விரிவாக்க ஆக்கிரமிப்புக்

கொள்கைக்கான ஆதரவைத்தான் குறிக்கிறது''.*

தென் கிழக்கு ஆசியாவின் அரசியல் நிலவரம் விவாதிக்கப்படும் போது, மகாநாட்டில் கம்பூச்சியாவின் பிரதிநிதித்துவப் பிரச்சினை மையக் கவனத்தில் இருந்தது. உயர்மட்ட சந்திப்பிற்கு முன் ஹவானுவில் நடைபெற்ற வெளிவிவகாரத் துறை அமைச்சர்களின் கூட்டத்தில் இப்பிரச்சினையின் மீது பேசிய 32 தூதுக்குழுக்களில் 20 தூதுக்குழுக்கள், மக்களால் தூக்கியெறியப்பட்ட போல் போட்—இயெங் சாரி ஆட்சிக் கும்பலின்[17] பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாதெனக் கூறின. ஆனுல் போல் போட் பிரதிநிதிகளை மகாநாட்டிற்கு அனுமதிக்க வேண்டுமெனக் கூறிய ஒரு சில பிரதிநிதிகளின்—உதாரணமாக, **ஆசியான்**[18] நாடுகளின் (சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா) பிரதிநிதிகளின்—வற்புறுத்தலால், இப்பிரச்சினை அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்களின் மகாநாட்டின் முழுக்கூட்டத்தின் முன்வைக்கப்பட்டது. இக்கூட்டத்தில் இப்பிரச்சினை விவாதிக்கப்பட்ட போது பிரச்சினையின் பாலான அணுகுமுறையில் வேறுபாடுகள் வெளிப்பட்டன.

ஒரு சில தூதுக்குழுக்கள் அதிபயங்கர இனப் படுகொலைக்காகப் போல் போட் ஆட்சிக் கும்பலைக் கண்டித்தாலும் மகாநாட்டிற்குப் போல் போட்டின் பிரதிநிதிகளை அனுமதிக்கலாம் என்று கூறின. அதோடு இந்தத் தூதுக்குழுக்கள், கம்பூச்சியாவிற்கு அளிக்கப்படும் சர்வதேச உதவி(உதார

---

* *Two Decades of Non-Alignment*, p. 421.

ணமாக வியட்நாம் சோஷலிசக் குடியரசின் மட்டான படைத் தொகுதியைக் கம்பூச்சிய மக்கள் குடியரசிற்கு அனுப்பியது) நியாயமானது என்பதை அங்கீகரிக்க மறுத்தன, போல் போட் குண்டர்கும்பல்களை விரைவில் ஒழித்துக் கட்டுவதற்காகக் கம்பூச்சிய மக்கள் குடியரசின் சட்டபூர்வமான அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் தான் இந்த உதவி அளிக்கப்படுகின்றது என்னும் அம்சத்தைக் கவனிக்கத் தவறின.

வேறு சில நாடுகள்—கியூபா, அங்கோலா, மொசாம்பிக், மடகஸ்கார், பெனின், லிபியா, சிரியா ஆகியவை இவற்றில் சில—மக்களால் முறியடிக்கப்பட்ட போல் போட்—இயெங் சாரி ஆட்சிக் கும்பலை வன்மையாகக் கண்டனம் செய்து, கம்பூச்சிய மக்கள் குடியரசின் அரசாங்கம் மட்டுமே கம்பூச்சிய மக்களின் ஒரே சட்ட பூர்வமான பிரதிநிதியாக இருக்க முடியும், எனவே இயக்கத்தில் இடம் கம்பூச்சிய மக்கள் குடியரசிற்குத்தான் உரித்தானது என்று அறிவித்தன.

இறுதியாக, பல நாடுகள், ஒன்று இரு தரப்பாருமே மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் அல்லது இருவருமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படக் கூடாது என்று முன்மொழிந்தன. தூதுக்குழுக்களின் கண்ணோட்டங்களை நெருங்கி வரச் செய்ய முயலும் முகமாக, ஸ்ரீலங்கா, பிரச்சினையின் தீர்வை அடுத்த மகாநாடு வரை ஒத்தி வைக்கலாமென முன்மொழிந்தது. நீண்ட விவாதங்களின் முடிவில், இயக்கத்தில் கம்பூச்சியாவின் இடத்தைக் காலியாக வைத்திருப்பது என்றும் இப்பிரச்சினைச் சம்பந்தமாக ஆலோசனை கூறும்

பொறுப்பை விசேஷ கமிஷனுக்கு அளிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

1971ஆம் ஆண்டு டிசம்பர் 16ஆம் தேதி ஐ.நா.சங்கப் பொதுச்சபை அமர்வில் ஏற்கப்பட்ட பிரகடனத்தின்* நிறைவேற்றத்தின் அடிப்படையில் இந்து மகா சமுத்திரத்தை அமைதி மண்டலமாக மாற்றப் பாடுபடும் தமது உறுதியை மகாநாட்டினர் ஊர்ஜிதப்படுத்தினர்.

மத்தியதரைக் கடல் பிரதேசத்தை அமைதி மண்டலமாக்கும் தீர்மானங்களை நிறைவேற்றவும் இங்கே நிலவும் பதட்டநிலைக்கான காரணங்களை அகற்றும் நோக்கத்தோடு ஏற்கப்பட்ட எல்லா ஐ.நா. சங்கத் தீர்மானங்களையும் நிறைவேற்றவும் உதவிபுரியுமாறு மகாநாடு எல்லா அரசுகளையும் கேட்டுக் கொண்டது. தன் நிலப் பரப்பிலுள்ள அந்நிய இராணுவத் தளங்களை அகற்றுவது என்ற மால்டாவின் முடிவை மகாநாடு வரவேற்றது.

---

* இந்து மகா சமுத்திரத்தில் இராணுவ நடவடிக்கைகள் மட்டு மீறிப் போவதைத் தடுத்து நிறுத்தவும் இந்தப் பிரதேசத்திலுள்ள எல்லா அந்நிய இராணுவத் தளங்கள், இராணுவக் கட்டுமானங்கள் மற்றும் இராணுவ சப்ளை சாதனங்களையும் அகற்றவும் அணு ஆயுதமும் மற்ற பேரழிவு ஆயுதங்களும் நிறுவப்படாமலிருக்கும் பொருட்டும் பிரதேச நாடுகளுடன் உடனடியாகக் கலந்தாலோசனைகளைத் துவக்குமாறு பிரகடனம் பெரும் வல்லரசுகளுக்கு அறைகூவல் விடுத்தது. 61 தூதுக்குழுக்கள் பிரகடனத்திற்கு ஆதரவாக வாக்களித்தன, 55 தூதுக்குழுக்கள் நடுநிலை வகித்தன, யாரும் எதிராக வாக்களிக்கவில்லை.

''அரசுகளின் உள்விவகாரங்களில் தலையிடுதல்'' எனும் மகாநாட்டின் இறுதி ஆவணத்தில், ஏகாதிபத்தியச் சக்திகளின் நடவடிக்கையைப் பற்றியும் கூட்டுச் சேரா நாடுகளில் நாசவேலைகளைச் செய்து நிலைமையைச் சீர்குலைப்பதற்காக அரசியல், பொருளாதார, இராணுவ சாதனங்களையும் தகவல் ஒலிபரப்புச் சாதனங்கள், பத்திரிகைகளையும் ஏகாதிபத்தியம் பயன்படுத்துவதைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

வளர்ச்சியுறும் நாடுகளுக்கு இடையே தகராறுகளின் எண்ணிக்கை பெருகியுள்ளதைக் கணக்கில் கொண்டு, இவற்றை முற்றிலும் சமாதான வழிகளில்தான் தீர்க்க வேண்டுமென்ற உறுதி மொழியைப் பின்பற்றுமாறு மகாநாட்டினர் இந்த அரசுகளுக்கு விசேஷ உறுதியோடு அறைகூவல் விடுத்தனர்.

ஹவானா மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் தமது தீர்மானங்களில் ஐ.நா. சங்கத்தில் கூட்டுச் சேரா நாடுகளின் பங்கு அதிகரித்துள்ளதைக் குறிப்பிட்டனர், சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்குத் துணைபுரியும் பயன்மிகு சாதனமாக ஐ.நா. சங்கம் விளங்குகிறது என்று எடுத்துரைத்தனர், அரசுகளுக்கு இடையிலான தகராறுகளைத் தீர்ப்பதில் ஐ.நா. சங்கத்தைக் கணிசமாக அதிகம் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் கோடிட்டுக் காட்டினர். சென்ற உயர்மட்ட மகாநாட்டின் தீர்மானங்களுக்கேற்ப கூட்டுச் சேரா நாடுகளுக்கிடையே செய்தி மற்றும் தகவல் தொடர்புத் துறையின் ஒத்துழைப்பில் ஏற்பட்டுள்ள நல்ல வளர்ச்சியைக் குறிப்பிட்ட மகாநாடு,

செய்திப் பரிமாற்றத் துறையில் ஒத்துழைப்பை மேற்கொண்டு வளர்க்கும் பிரேரணையை நிறைவேற்றியது.

மகாநாட்டில் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குக் கணிசமான இடம் ஒதுக்கப்பட்டது. இது இயற்கையானதே. ஏனெனில் 1973ஆம் ஆண்டு அல்ஜீரியா மகாநாட்டிலிருந்து (இதில் நவீன காலனியாதிக்கத்திற்கு எதிராகக் கூட்டு ஒத்திசைவான போராட்ட வடிவங்கள் வலியுறுத்தப்பட்டன என்பதை நினைவு கூர்வோம்) இப் பிரச்சினைகளின் மீது முந்தைய மகாநாடுகளில் ஆக்கபூர்வமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ அரசுகள் கடைப்பிடித்த கொள்கையின் காரணமாய் இவற்றில் ஒரு தீர்மானம் கூட நிறைவேற்றப்படவில்லை. இதன் தொடர்பாக, முதலாளித்துவ நாடுகளின் சர்வதேசப் பொருளாதார உறவு முறை முழுவதிலும் முரண்பாடுகள் கூர்மையடைந்துள்ளது குறித்து அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்கள் கடும் கவலை தெரிவித்தனர். முதலாளித்துவ வல்லரசுகளின் கொள்கையின் விளைவாய் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் வளர்ச்சியுறும் நாடுகளுக்கும் இடையிலான பிளவு அதிகரித்தது, வளர்ச்சியுறும் நாடுகளுக்கு வர்த்தகச் சூழ்நிலைகள் மோசமடைந்தன.

மகாநாட்டின் தீர்மானங்களில், உதாரணமாக, இதன் பொருளாதாரப் பிரகடனத்திலும் பொருளாதார ஒத்துழைப்பு சம்பந்தமான செயல் திட்டத்திலும் பிற தீர்மானங்களிலும் புதிய சர்வதேசப் பொருளாதார முறையை நிலைநாட்டுவதற்

கான போராட்ட செயல்திட்டம் திட்டவட்ட மாக்கப்பட்டது. வளர்ச்சியுறும் நாடுகள் முழு மையான, செயல்முனைப்புள்ள அரசுரிமையை நிறைவேற்றுதல், தமது இயற்கைச் செல்வங்கள், மற்ற எல்லா மூலச்சக்திகள், பொருளாதார நட வடிக்கை ஆகியவற்றைக் கண்காணித்தல், மூலப் பொருட்களுக்கும் பாதி தயாரிக்கப்பட்டப் பொருட்களுக்கும் நியாயமான விலைகளை நிர்ண யித்தல், அந்நிய மூலதனத்தையும் பல்தேசியக் கார்ப்பரேஷன்களின் நடவடிக்கையையும் கண் காணித்தல் முதலியன இந்தச் செயல்திட்டத்தில் அடங்கும்.

மூலப்பொருட்கள், தொழிற்துறைமயமாக் கல், வர்த்தகம், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி, விவசாயம், உணவுப் பொருட்கள், பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஆகிய துறைகளில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப் பது சம்பந்தமான கூட்டுச் சேரா நாடுகளின் நடவடிக்கைகள் குறித்த பிரேரணைகளையும் சிபா ரிசுகளையும் மகாநாடு நிறைவேற்றியது, பல் தேசியக் கார்ப்பரேஷன்களுடனை உறவுகளை நிர்ணயித்தது, ஐ. நா. சங்க வளர்ச்சியின் இரண் டாவது பத்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய மதிப்பீட்டைத் தந்தது.

அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்கள் பொரு ளாதார ஒத்துழைப்பு சம்பந்தமாக கொழும்பு மகாநாட்டில் ஏற்கப்பட்ட செயல்திட்ட நிறை வேற்றத்தின் முடிவுகளைப் பற்றி விவாதித்தனர், இதன் நிறைவேற்றத்தில் போதுமான அளவு முன் னேற்றம் இல்லாதது குறித்து கவலை தெரிவித்

தனர், ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான பல கூடுதல் நடவடிக்கைகளைக் குறிப்பிட்டனர்.

ஹவானாவில் நடைபெற்ற கூட்டுச் சேரா நாடுகளின் 6வது மகாநாட்டின் முடிவுகளைப் பார்த்தால், இயக்கத்தின் எதிரிகள் செய்த சூழ்ச்சிகளை முறியடித்து இதன் ஏகாதிபத்திய எதிர்ப்பு, காலனியாதிக்க எதிர்ப்பு, நிறவெறி எதிர்ப்புத் தன்மையைப் பாதுகாக்க முற்போக்குச் சக்திகளால் முடிந்துள்ளது என்று கூறலாம். மொத்தத்தில் மகாநாடு, தமது பொருளாதார சுதந்திரம், சமாதானம், பதட்டநிலைத் தணிவு, ஆயுதப் போட்டியை நிறுத்துதல், ஆயுதக் கலைப்பு ஆகியவற்றிற்காக வளர்ச்சியுறும் நாடுகள் நடத்தும் போராட்டப் பதாகையின் கீழ் நடந்தது. இன்றைய உலகத்தின் முக்கிய பிரச்சினைகளின் மீதான இயக்கத்தின் நிலைகள் சோஷலிச நாடுகளின் நிலைகளோடு ஒத்தவை அல்லது இந்நாடுகளின் நிலைகளுக்கு நெருங்கியவை என்பது மகாநாட்டின் ஆவணங்களைப் பகுப்பாய்வு செய்தால் நன்கு விளங்கும்.

## 2. ஏழாவது மகாநாடு

டெல்லி மகாநாடுதான் இதுவரை கூட்டுச் சேரா இயக்கத்தின் வரலாற்றிலேயே அதிகப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட மகாநாடாயிருந்தது. சமாதானம், பாதுகாப்பு, ஆயுதப் போட்டியை நிறுத்துதல், ஆயுதக் கலைப்பு ஆகியவற்றிற்கான போராட்டப் பிரச்சினைகள் இம்மகாநாட்டின் பணியில் முதலிடம் வகித்தன. இன்றையக் காலகட்டத்தில் இயக்கத்தின் உறுப்பினராயுள்ள

அரசுகள் எத்தகையப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனவோ அவற்றின் வெற்றிகரமான தீர்வுடனை நெருங்கியத் தொடர்பில் இவை விவாதிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டுச்சேரா இயக்கத்தின் அடிப்படையாகவும் இணைப்புக் காரணியாகவும் முன்போன்றே தொடர்ந்து இருந்து வருகிறது என்பதை ஊர்ஜிதப்படுத்திய மகாநாடு தேசிய விடுதலை இயக்கத்திற்கு உறுதியான ஆதரவளித்தது, காலனியாதிக்கத்தையும் நிறவெறியையும் இறுதியாக ஒழித்துக் கட்ட வேண்டுமெனக் கோரியது.

கூட்டுச் சேரா இயக்கத்திலுள்ள உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை அதிகமாகும் போது இதன் சமூகப் பொருளாதார, அரசியல் அமைப்பு ஒரே மாதிரியாக இல்லாததன் காரணமாக இயக்கம் பலவீனம் அடையுமென்றும் பிளவுப் போக்குகள் வலுவடையுமென்றும் சச்சரவுகளின் எண்ணிக்கை அதிகமாகுமென்றும் ஏகாதிபத்திய அரசுகளை விமரிசிப்பது குறையுமென்றும் மேலைய நாட்டுப் பத்திரிகைகளில் பன்முறை எழுதப்பட்டதை இங்கே நினைவு கூறுவது தகும். டெல்லி மகாநாட்டில் முக்கியக் கவனம் இரான்—இராக் தகராறு, மேற்கு சஹாராவிலும்[19] சாத் நாட்டிலும்[20] உள்ள நிலைமை மற்றும் ஆப்கானிய[21], கம்பூச்சிய ''பிரச்சினைகள்'' ஆகியவற்றின் மீது செலுத்தப்படும் என்று மகாநாடு கூடவிருந்த தருணத்தில் மேலைய நாடுகளின் பத்திரிகைகள் குறிப்பிட்டன.

ஆனால் மேலைய நாட்டுப் பிற்போக்கு வட்

டங்களின் இந்த நம்பிக்கைகள் பொய்த்துப் போயின. உலகத்தின் எதிர்காலம் குறித்து மகா நாட்டினர் கவலை தெரிவித்தனர். பரவலான ஆயுதப் போட்டி, முக்கியமாக அணு ஆயுதப் போட்டி, ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, பசிபிக் பிரதேசம் ஆகிய இடங்களில் தீவிர இராணுவ விஸ்தரிப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட கொள்கையை ஏகாதிபத்திய அரசுகள், முதலாவதாக அமெரிக்காவின் ரீகன் அரசாங்கம் நிறைவேற்றி வருவதால் உலகை எதிர்நோக்கியுள்ள அபாயம் பெரிதும் அதிகரித்துள்ளது. ஏகாதிபத்தியச் சக்திகள், உலகின் பரவலான பிரதேசங்களைத் தனது ''ஜீவாதார நலன்களுக்கு'' முக்கிய இடங்கள் என்று அறிவித்து, கூட்டுச் சேரா இயக்கத்தின் உறுப்பு நாடுகள் (சோமாலி, கென்யா) உட்பட டஜன் கணக்கான நாடுகளின் பரப்பிலுள்ள இராணுவத் தளங்களை நவீன மயப்படுத்துகின்றன, புதிய இராணுவத் தளங்களையும் ஆதாரத் தளங்களையும் தோற்றுவிக்கின்றன.

ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கை சோஷலிச நாடுகளுக்கு எதிரானதோடு கூட வளர்ச்சியுறும் நாடுகளுக்கும் எதிரானது எனும் உண்மை மேன்மேலும் அதிகமாக உணரப்பட்டு வருவதை கூட்டுச் சேரா இயக்கத்தின்—மொத்தத்தில் வளர்ச்சியுறும் உலகின்—பரிணும வளர்ச்சியின் சிறப்பு அம்சம் என்று கூறலாம்.

மகாநாட்டின் ஆவணங்களில்—டெல்லி அறிக்கை, அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரகடனங்கள், தனிப்பட்டப் பிரச்சினைகள் சம்பந்தமான

தீர்மானங்கள் ஆகியவற்றில்—இன்றைய சர்வ தேச உறவுகளில் நிலவும் போக்குகளின் பெரும் அபாயத்தைப் பற்றிய முடிவும் உலகளாவிய அணு ஆயுதப் பேரழிவு அபாயம் பற்றிய முடிவும் தனிப் படத் தென்பட்டன. மகாநாடு முடிவடைந்த பின் கூட்டுச் சேரா இயக்கத்தின் புதிய தலைவர் இந் தியாவின் பிரதமர் இந்திரா காந்தி இக்கருத்தைப் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''சமாதான சக வாழ்வா சாவா என்பதே இன்றுள்ள நிலை.''* சகலவித அணு ஆயுதங்களையும்—போர்த்தந்திர அல்லது நடைமுறைத் தந்திர ஆயுதமாயிருந்தா லும், சாதாரண அல்லது நியூட்ரான் ஆயுதம் போன்றவையாக இருந்தாலும், எதுவாயிருந்தா லும்—உருவாக்கி சோதித்து பயன்படுத்துவதைத் தடைச் செய்யும் பிரச்சினையின் மீது அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்கள் முக்கியக் கவனம் செலுத் தினர். அரசியல் பிரகடனத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: ''அணு ஆயுதம் என்பது யுத்த ஆயுதத்தை விடப் பெரியது. இது ஒரு பேரழிவு ஆயுதம். எனவே எல்லா அரசுகளின் பாதுகாப்பும் **மனிதகுலத்தின் வாழ்வுமே** (ஆசிரியர் கோடிட்டுக் காட்டுகிறார்) அணு ஆயுதத்தை வைத்திருக் கும் ஒருசில அரசுகளின் நலன்களைச் சார்ந்திருப் பது அனுமதிக்க இயலாதது என்று அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்கள் கருதுகின்றனர்... அணு ஆயுதத்தைப் பிரயோகிப்பதுடன் தொடர்புடைய எல்லா தத்துவங்கள், கருத்துக்களையும் இவர்கள் நிராகரித்தனர்...''** அணு ஆயுதத்தைப் பயன்

* *Times of India*, March 17, 1983.

** *NAC/Conf. 7/Doc. 1/Rev. 2*, March 10, 1983, p.9—10.

படுத்துவதையும் அல்லது பயன்படுத்தும் அச்சுறுத்தலையும் தடைசெய்ய வேண்டுமென மகாநாட்டினர் கண்டிப்புடன் கோரினர். அணு ஆயுதங்களை உருவாக்கி உற்பத்தி செய்து, சேகரித்து பெருக்குவதை முடக்க வேண்டுமென்றும் அணு ஆயுத சோதனைகளைத் தடைசெய்யும் சர்வபொது ஒப்பந்தத்தை உருவாக்குவதை விரைவிலேயே முடிக்குமாறும் மகாநாடு அறைகூவல் விடுத்தது.

பொதுக் கூட்டங்களில் உரையாற்றிய பிரதிநிதிகள், சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடுகளின் சமாதான முன்மொழிவுகளுக்கு, உதாரணமாக, பரஸ்பரம் இராணுவ பலத்தைப் பயன்படுத்த வேண்டாம், சமாதான உறவுகளைப் பேணிப் பாதுகாக்கலாம் என்ற வார்சா ஒப்பந்த நாடுகளின் அரசியல் ஆலோசனைக் கமிட்டியின் முன்மொழிவுகளுக்குப் பலத்த ஆதரவளித்தனர் என்பதைக் குறிப்பிட வேண்டும். 1982ஆம் ஆண்டு, ஆயுதக் கலைப்புப் பற்றிய ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் இரண்டாவது விசேஷ அமர்வில் சோவியத் யூனியன், முதன் முதலாக அணு ஆயுதத்தைப் பிரயோகிக்காது என்று அளித்த உறுதி மொழியை இவ்விடத்தில் நினைவு கூறுவது பொருத்தமாயிருக்கும்.

மகாநாட்டினர் விடுத்த டெல்லி அறிக்கையில், சர்வதேச உறவுகளில் நிலவும் ஆபத்தான போக்குகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன, ''அணு ஆயுதப் பேரழிவை நோக்கி வழுக்கிச் செல்வதைத் தடுத்து நிறுத்த'' தாம் உறுதி பூண்டுள்ளதாக இந்நாடுகளின் சார்பில் அறிவிக்கப்பட்டது, இப்போது நிலவும் உடன்படிக்கைகளைப் பின்பற்றுமாறும்

ஆயுதங்களை மட்டுப்படுத்துவது சம்பந்தமாக அதிகத் தீவிரத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துமாறும் அணு ஆயுதங்களை வைத்திருக்கும் அரசுகளுக்கு அறைகூவல் விடுக்கப்பட்டது. சோவியத் யூனியனைப் பொறுத்த மட்டில், ஆயுதப் போட்டி, முதலாவதாக அணு ஆயுதப் போட்டி நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காகவும் அணு ஆயுதப் போர் அபாயத்தைக் குறைத்து, முற்றிலுமாக அகற்ற வேண்டும் என்பதற்காகவும், இது உறுதியாகப் போராடுகிறது. இப்பிரச்சினைகளின் மீதான சோவியத் யூனியனின் நிலை நன்கு தெரிந்ததே.

நவீன காலத்தின் உடனடியான, ஜீவாதார முக்கியத்துவமுடையப் பிரச்சினைகளிலிருந்து கூட்டுச் சேரா அரசுகள் தள்ளி நிற்கவில்லை என்று டெல்லி மகாநாடு காட்டியது. சமாதான சகவாழ்வு, நம் பூமியில் நிலையான அமைதி, எல்லா மக்களினங்களுக்கும் பாதுகாப்பு, மலர்ச்சி ஆகியவற்றிற்கு வகை செய்யும் முறையில் சர்வதேசப் பொருளாதார் உறவுகளை மாற்றியமைத்தல் எனும் இரண்டின் பாலும் உள்ள பொது நாட்டத்தால் இயக்க உறுப்பினர்கள் ஒன்றுபட்டு நிற்கின்றனர் என்பதை மகாநாடு ஊர்ஜிதப்படுத்தியது. ''அரசுகளின் பொருளாதார, சமூக முறைகள், பிரதேச அளவு, பூகோள நிலை முதலியன எப்படியிருந்தாலும் இவற்றிற்கு இடையே சமாதான சகவாழ்வு, பதட்ட நிலைத் தணிவு, ஒத்துழைப்பு ஆகியவற்றிற்கு மாற்றான வழி வேறு ஒன்றும் இல்லை''* என்று இறுதி ஆவணங்கள் ஒன்றில் வலியுறுத்தப்படுகிறது.

---

* *NAC/Conf. 7/Doc. 1/Rev.* 2, March 10, 1983, p.6.

சுயமான தேசிய அரசை உருவாக்கப் பாலஸ்தீன மக்களுக்கு உள்ள சட்ட பூர்வமான, பிரிக்க இயலா உரிமைக்கு டெல்லி மகாநாட்டினர் மீண்டும் ஆதரவு தெரிவித்தனர். லெபனுனுக்கு எதிரான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு[22] கடுமையாகக் கண்டிக்கப்பட்டது.

நமீபியாவிற்கு சுதந்திரமளிப்பது சம்பந்தமான ஐ.நா. சங்கப் பாதுகாப்புக் கவுன்சிலின் தீர்மானம் விரைவில் நிறைவேற்றப்பட வேண்டுமென மகாநாடு கருத்து தெரிவித்தது. நமீபியாவிற்கு சுதந்திரம் அளிப்பதை அங்கோலாவிலிருந்து கியூபப் படைகள் வெளியேற்றப்படுவதுடன் ''தொடர்புபடுத்தும்'' முயற்சிகளை[23] மகாநாட்டினர் முற்றிலுமாக நிராகரித்தனர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

முந்தைய மகாநாடுகளோடு ஒப்பிடும் போது டெல்லி மகாநாட்டில் லத்தீன் அமெரிக்கப் பிரச்சினைகளுக்கு அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. இது தற்செயலானதல்ல. இப்பிரதேசத்தில் அந்நிய, முக்கியமாக அமெரிக்க நிர்ப்பந்தத்திற்கு எதிரான போராட்டம் மேன்மேலும் வலுத்து வருகிறது. மத்திய அமெரிக்கா, கரிபியக் கடல் பிரதேசம் மற்றும் தெற்கு அட்லாண்டிக் பிரதேசத்தில் இன்னமும் இருந்து வரும் பதட்ட நிலை குறித்து அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்கள் ஆழ்ந்த கவலை தெரிவித்தனர். மத்திய அமெரிக்காவில் அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடி நிலை ஒன்று உருவாகியுள்ளது என்றும் இது ''பிரதேச அரசுகளின் உள்விவகாரங்களில் ஏகாதிபத்தியத் தலையீடுகள் அதிகரித்து வருவதால்

கூர்மையடைந்துள்ளது''* என்றும் இவர்கள் குறிப்பிட்டனர். மகாநாட்டின் இறுதி ஆவணங்களில், நிக்கராகுவா மக்களின் மீதான ஆக்கிரமிப்பு, சால்வடோர், சுரினும் மற்றும் பெலிஸ் நாடுகளின் உள்விவகாரங்களில் தலையீடு ஆகியவற்றிற்கு எதிரான ஒருமனதான எதிர்ப்பு அடங்கியுள்ளது, கியூபா விஷயத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு கடைப்பிடித்தப் பெருளாதார முற்றுகை கண்டிக்கப்பட்டுள்ளது, பனுமா அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை[24] நிறைவேற்ற அமெரிக்க ஐக்கிய நாடு மறுப்பதற்குக் கடுமையான கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1983ஆம் ஆண்டு அக்டோபரில் கிரிஞடாவிற்கு எதிரான அமெரிக்க ஆக்கிரமிப்பு,[25] சுயமான அரசுகளின் விவகாரங்களில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலையீடுகளைக் கண்டித்தது எவ்வளவு ஆதாரபூர்வமானது, முக்கியமானது என்பதை மீண்டும் ஒரு முறை மெய்ப்பித்தது. மால்வின் (ஃபால்க்லேன்ட்) நிகழ்ச்சிகள் லத்தீன் அமெரிக்க மக்களுக்கு ஒரு மறக்க இயலாப் பாடமாக அமைந்தன; ''பரஸ்பர உதவி பற்றிய ஒப்பந்தம்'' என்றழைக்கப்படுவதன் உறுதி மொழிகளை அலட்சியப்படுத்தி, மால்வின் (ஃபால்க்லேன்ட்) தீவுகளின் மீது அர்ஜென்டைஞவிற்கு உள்ள உரிமைகளைப் பாதுகாக்கும் முகமாக லத்தீன் அமெரிக்க நாடுகளுடன் ஒன்றிணைவதற்குப் பதிலாக பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பாளருடன் சேர்ந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உண்மையான தோற்றத்தை

* *Ibid*., p. 68.

இந்நிகழ்ச்சிகள் முன் எப்போதையும் விட நன்கு வெளிப்படுத்தின.

மகாநாடு நிறைவேற்றியத் தீர்மானங்களில், தமது சுதந்திரத்திற்காகப் போராடும் லத்தீன் அமெரிக்க மக்களினங்கள் அனைவருடனும் ஒருமைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது, இதுவரை காலனி ஆதிக்கம் மற்றும் சார்புநிலையின் கீழுள்ள மக்களினங்களுக்கு உதவுமாறு எல்லா அரசுகளுக்கும் அறைகூவல் விடப்பட்டுள்ளது. ''தமது சொந்த அரசியல், சமூக, பொருளாதார முறையை'' சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்க எந்த ஒரு அரசிற்கும் உள்ள உரிமையை மதிப்பது, சர்வதேசப் பிரச்சினைகளின் அரசியல் தீர்விற்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது மீண்டும் வலியுறுத்தப்பட்டது.* மால்வின் (ஃபால்க்லேண்ட்) தீவுகளைப் பொறுத்த மட்டில், கூட்டுச் சேரா இயக்கத்தின் கோட்பாடுகள், முடிவுகள், ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் தீர்மானங்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப பிரச்சினைக்குச் சமாதானமான, நியாயமான தீர்வினை அடையும் நோக்கத்தோடு ஐ.நா. சங்கப் பொதுச் செயலாளரின் பங்கேற்போடு பேச்சுவார்த்தைகளை மீண்டும் துவக்குமாறு அர்ஜென்டைனாவிற்கும் கிரேட் பிரிட்டனுக்கும் மகாநாடு அறைகூவல் விடுத்தது.

மத்திய அமெரிக்காவையும் கரிபியக் கடல் பிரதேசத்தையும் அமைதி மண்டலமாக அறிவிப்பதை நோக்கமாகக் கொண்ட லத்தீன் அமெரிக்க

---

* *Ibid.*, p. 35.

நாடுகளின் எல்லா முயற்சிகளையும் முன்மொழிவு களையும் மகாநாடு ஆதரித்தது.

மகாநாட்டின் பணியிலும் இறுதி ஆவணங் களிலும் இந்து மகா சமுத்திரப் பிரச்சினைக்குக் கணி சமான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்கள், இந்து மகா சமுத்திரத் தை அமைதி மண்டலமாக அறிவிக்கும் பிரகடனத் திற்கு ஒருமனதாக ஆதரவு தெரிவித்தனர்; 1965ஆம் ஆண்டு கிரேட் பிரிட்டன் மொரீஷியஸ் நாட்டிடமிருந்து பறித்த டியகோ-கார்சியா உட் பட சாகோஸ் தீவுக் கூட்டத்தின் மீது மொரீ ஷியசிற்கு உள்ள உரிமைக்கு[26] முழு ஆதரவு தெரிவித்தனர். டியகோ-கார்சியாவில் இராணுவ தளத்தை ஏற்படுத்தி நவீனப்படுத்துவதை ''மொரீஷியஸ் மற்றும் இன்ன பிற அரசுகளின் அரசுரிமை, பிரதேச முழுமை, சமாதான வளர்ச்சிக்கான அச்சுறுத்தல்''* என்று மகா நாட்டினர் மதிப்பிட்டனர்.

துரதிர்ஷ்டவசமாக மொரீஷியசின் சட்ட பூர் வமான கோரிக்கைகள் இன்று வரை பூர்த்தி செய் யப்படவில்லை. மாறாக ரீகன் ஆட்சிக் காலத்தில் இந்து மகா சமுத்திரத்தில் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகள் கணிசமாக அதிகரித்துள்ளன, இராணுவ தளங்களின் எண்ணிக்கைக் கூடி யுள்ளது. டியகோ-கார்சியாவில் உள்ள இராணுவ தளம் ''துரிதத் தாக்குதல்'' படைக்கான[27] முக்கிய ஆதாரத் தளமாகவும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் போர்த்தந்திர அணு ஆயுதத் தள

---

* *Ibid.*, p. 20.

மாகவும் மாறி வருகிறது. டியகோ-கார்சியாவில் உள்ள இராணுவ தளத்தையும் தென்னாப்பிரிக்கா, ஜிப்பூட்டி, கென்யா, இந்து மகா சமுத்திரப் பிரதேசத்தின் இதர நாடுகளிலுள்ள அமெரிக்கத் தளங்களையும் அகற்றும் பிரச்சினை, சர்வதேசப் பதட்ட நிலைத் தணிவு மற்றும் அமைதி மண்டலங்களை ஏற்படுத்துவதற்கான மிக முக்கியப் பிரச்சினைகளில் ஒன்ருகும்.

இயக்க உறுப்பு நாடுகளிடையே சச்சரவுகள், தகராறுகளின் எண்ணிக்கைக் கூடியுள்ளது பற்றி அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்கள் கவலை தெரிவித்தனர். நூற்றுக் கணக்கில், ஆயிரக் கணக்கில் மக்கள் மாண்டு போகும் இந்தத் தகராறுகள் இந்நாடுகளின் பொருளாதாரத்திற்குப் பெரும் இழப்பை ஏற்படுத்துகின்றன, சமாதானம், முன்னேற்றம் மற்றும் கூட்டுச் சேரா நாடுகளின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டை அச்சுறுத்துகின்றன.

சகலவித சச்சரவுகளும் ஐ.நா. சங்க விதிமுறையின் லட்சியங்கள், கோட்பாடுகள், கருத்து நிலைகள், கூட்டுச் சேரா இயக்கத்தின் கோட்பாடுகள், லட்சியங்களுக்கு ஏற்ப முற்றிலும் சமாதான வழிகளில் மட்டுமே தீர்க்கப்பட வேண்டுமென மகாநாடு மீண்டும் அறிவித்தது.

ஆனல் இந்த அறிக்கையை மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் ஒருமனதாக ஆமோதித்தும் கூட இரானுக்கும் இராக்கிற்கும் இடையிலான இராணுவ மோதலை இது நிறுத்தவில்லை.

ஏற்கனவே மேலே குறிப்பிட்டபடி, டெல்லி மகாநாட்டில் ''கம்பூச்சிய, ஆப்கானியப் பிரச்

சினைகள்'' போன்றவற்றின் மீதான கருத்துக் களின் மோதல் மகாநாட்டின் பணியைக் குலைக் கும் அல்லது குறைந்த பட்சம் இதன் ஏகாதிபத் திய எதிர்ப்புப் போக்கைப் பலவீனப்படுத்தும் என்று டெல்லி மகாநாடு ஆரம்பமாவதற்கு முன் பல மேலைய நாடுகளின் பத்திரிகைகளில் பல்வேறு விதமான செய்திகள் வெளியாயின. மகாநாட்டின் முடிவுகள் பிற்போக்கு வட்டங்களின் எதிர்பார்ப்பு களைத் தவிடு பொடியாக்கி பொய்ப்பித்தன. உதார ணமாக அரசியல் பிரகடனத்தில் மகாநாட்டினர், ஆப்கானிஸ்தானில் நிலவும் நிலவரம் குறித்து கவலை தெரிவித்த அதே சமயத்தில் டெல்லியில் நடந்த அயல்விவகாரத் துறை அமைச்சர் களின் மகாநாடு (1981, பிப்ரவரி) பிரச்சினையின் அரசியல் தீர்வு குறித்து எடுத்த முடிவுகளை ஊர் ஜிதப்படுத்தினர். ஐ.நா. சங்கப் பொதுச் செய லாளரின் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்த இவர்கள், பொறுமையைக் கடைப்பிடிக்குமாறும் ''பிரதேச அரசுகளுக்கு இடையே நிலையான, சீரிசைவான உறவுகளை ஏற் படுத்த அனுகூலமான''* சூழ்நிலைகளைத் தோற்று விக்க வல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எல்லா அரசுகளுக்கும் அறைகூவல் விடுத்தனர். மகாநாடு முடிந்ததும் இப்பிரச்சினை குறித்து பத்திரிகையாளர்கள் முன் பேசும் போது இந்திரா காந்தி பின்வருமாறு கூறினார்: ''ஏதாவது ஒரு நாடு ஆபத்தை உணர்ந்து வேறொரு நாட்டிடம்

* *Ibid.*, p. 31.

இராணுவ உதவி கோரினல் அது முற்றிலும் அந் நாட்டின் உள்விவகாரம் ஆகும்.''*

''கம்பூச்சியப் பிரச்சினை'' மீதான விவாதத் தின் போது கூட்டுச் சேரா இயக்கத்தில் கம்பூச் சியாவின் இடத்தை தூக்கியெறியப்பட்ட போல் போட் ஆட்சிக் கும்பலிடம் இருக்க வேண்டும் எனும் தீர்மானத்தை மகாநாட்டின் மீது சுமத்த ஒரு சில தூதுக்குழுக்கள், குறிப்பாக சிங்கப்பூர் தூதுக்குழு செய்த முயற்சிகளும் வெற்றி பெற வில்லை. மகாநாட்டிற்கு முன் நடந்த அயல்விவ காரத் துறை அமைச்சர்களின் பூர்வாங்கக் கூட் டங்களில் கலந்து கொண்ட 97 பிரதிநிதிகளில் 31 பிரதிநிதிகள் மட்டுமே கம்பூச்சியாவின் இடம் போல் போட் பிரதிநிதிக்கு அளிக்கப்பட வேண்டு மென்பதற்கு ஆதரவாகப் பேசினர்கள்.

போல் போட் ஆட்களுக்கு ஆதரவாக சிங் கப்பூர் தூதுக்குழு வாக்களித்ததன் நோக்கங்கள் குறித்து பிரபல இந்திய நிபுணர்களில் ஒருவரான கே. சுப்ரமணியம் பின்வரும் கருத்தைத் தெரிவித் தார்: ''இந்தோசீன நாடுகளின் பாலான தனது உறவுகளில் சிங்கப்பூர் தொடர்ச்சியான ஒரு நிலையைப் பின்பற்றி வருகிறது. இந்நாடு 1971ஆம் ஆண்டு சியானுக்கிற்கு எதிரான போராட்டத் தில் லோன் நோலையும் 1979ஆம் ஆண்டு ஹெங் சமரினுக்கு[28] எதிரான போராட்டத்தில் போல் போட்டையும் ஆதரித்தது; இரு சந்தர்ப்பங் களிலுமே அமெரிக்கக் கொள்கைக்கு ஏற்றபடி நடந்தது. மேலும் சிங்கப்பூருக்கு உள்ள சொந்த

---

* *Times of India*, March 16, 1983.

தேசிய நலன்களும் சிங்கப்பூரை அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு ஆதரவாகச் செயல்படும்படி நிர்ப்பந்திக்கின்றன.''*

விவாதத்தின் முடிவில் கூட்டுச் சேரா இயக்கத்தில் கம்பூச்சியாவின் இடத்தைக் காலியாக விட்டு வைப்பது என்று ஒரு சமரச தீர்மானம் அடையப்பட்டது. இதோடு கூட மகாநாட்டின் முடிவுகளில் பின்வருமாறு கோடிட்டுக் காட்டப் பட்டிருந்தது: ''அன்னியத் தலையீடு, சீர்குலைவு நடவடிக்கை, நிர்ப்பந்தம் ஏதுமின்றி தம் எதிர் காலத்தைத் தாமே முடிவு செய்து கொள்ள கம்பூச்சிய மக்களுக்கு உள்ள உரிமையை அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்கள் மீண்டும் ஊர் ஜிதப்படுத்தினர், பேச்சுவார்த்தைகள் மற்றும் பரஸ்பர பிரிவின் உதவியோடு இந்த உரிமையின் நிறைவேற்றத்திற்கான சூழ்நிலை தோற்றுவிக்கப் படுமென நம்பிக்கை தெரிவித்தனர்.''**

டெல்லி மகாநாட்டில் சர்வதேசப் பொருளாதாரப் பிரச்சினைகளின் மீது பெரும் கவனம் செலுத்தப்பட்டது. நவீனக் காலனியாதிக்கமும் ஏகாதிபத்தியமும் சமமின்மை மற்றும் சுரண்டலுக்கான முக்கியக் காரணங்களாகத் தொடர்ந்து இருந்து வருகின்றன என்று டெல்லி அறிக்கையில் நியாயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.*** சர்வதேசப் பொருளாதார உறவுகளில் நிலவும் சமமின்மை,

---

* *Times of India*, March 16, 1983.

** *NAC / Conf. 7 / Doc. 1 / Rev. 2*, p. 30.

*** *Indian and Foreign Review*, March 15—31, 1983, p. 21.

நியாயமின்மையை அகற்றுவதற்கான போராட்டமும் புதிய சர்வதேசப் பொருளாதார உறவு முறையை நிலைநாட்டுவதற்கான போராட்டமும் அரசியல் மற்றும் சமூக விடுதலைக்கான வளர்ச்சியுறும் நாடுகளில் மக்கள் நடத்தி வரும் போராட்டத்தின் பிரிக்க இயலா அங்கமாகும் என்று மகாநாட்டினர் ஊர்ஜிதப்படுத்தினர். பொருளாதாரப் பிரச்சினைகள் சம்பந்தமான ஐ.நா. சங்கத் தீர்மானங்களைச் சீர்குலைக்க வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் செய்யும் முயற்சிகளும், வர்த்தகத் தடை நடவடிக்கைக் கொள்கையும் முற்றுகையும் முதலாளித்துவ வல்லரசுகள் மேற்கொள்ளும் மற்ற கட்டாயப்படுத்தும் முறைகளும் அச்சுறுத்தலும் வன்மையாகக் கண்டிக்கப்பட்டன. ஹவானு மகாநாட்டின் முடிவுகளை, உதாரணமாக வளர்ச்சியுறும் நாடுகளுக்கும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் இடையில் நியாயமான பொருளாதார உறவுகளை நிலைநாட்டுவதற்காக உலகளாவியப் பேச்சுவார்த்தைகளை நடத்துவது பற்றிய முடிவுகளை மேற்கொண்டு செழுமைப்படுத்திய டெல்லி மகாநாட்டினர், நிலைகளைத் திட்டவட்டமாக்கி விசேஷ ஆவணம் ஒன்றை—"கூட்டுச் சேரா அரசுகள், மற்ற இளம் அரசுகளின் சுய தேவைகளுக்குக் கூட்டாக வழி செய்தல்" என்றழைக்கப்படுவதைப் பற்றியப் பிரகடனத்தை—நிறைவேற்றினர்.

அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்கள், ஹவானு மகாநாட்டின் தீர்மானங்களை நிறைவேற்றும் நோக்கத்தோடு சர்வதேசப் பொருளாதார உறவுகளை மாற்றியமைக்கும் முகமாக உலகளா

வியப் பேச்சுவார்த்தைகளை நடத்துமாறு முன் மொழிந்தனர்.

கூட்டுச்சேரா அரசுகளின் அறைகூவல்களுக்கு மேலைய நாடுகள் எப்படிப் பதிலளித்தன?

முதலாளித்துவ உலகின் முன் தோன்றியுள்ளக் கடுமையான பொருளாதாரப் பிரச்சினைகளை (பணவீக்கம், பொருளாதார வீழ்ச்சி, வேலையில்லாத் திண்டாட்டத்தின் அதிகரிப்பு) பற்றி விவாதிப்பதற்காக ஏழு பெரும் முதலாளித்துவ அரசுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்று 1983ஆம் ஆண்டு மே இறுதியில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் (வில்லியம்ஸ்பர்க்) நடந்தது. மேலைய நாடுகளில் இழுபட்டுக் கொண்டு போகும் பொருளாதார நெருக்கடி வளர்ச்சியுறும் நாடுகளுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுக்காத இக்கூட்டத்தினர், வளர்ச்சியுறும் நாடுகளுக்குச் செயல்பூர்வமான உதவியை அளிக்க வல்ல எந்த ஒரு திட்டவட்டமான நடவடிக்கையையும் முன்மொழியாமல், மாறாக, இளம் அரசுகளின் நிதிக் கடனைப் பயன்படுத்தி (1983இல் 600 பில்லியன் டாலர்கள்*) இவற்றின் மீதான நிர்ப்பந்தங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று முடிவு செய்தனர். வளர்ச்சியுறும் நாடுகளின் பண்டங்கள் மேலைய நாடுகளின் சந்தைகளுக்கு வருவதற்கு இடையூறு விளைவிக்கும் வர்த்தகத் தடைகளை அகற்றுவது அல்லது குறைந்த பட்சம் இவற்றைக் குறைப்பது பற்றிய பிரச்சினையை விவாதிக்க வளர்ச்சியடைந்த முத

---

* *Ibid.*, p. 6.

லாளித்துவ அரசுகள் மறுத்தன. நியாயமான சர்வதேசப் பொருளாதார உறவு முறையை நிலை நாட்டுவதற்காக உலகளாவியப் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டுமென்ற வளர்ச்சியுறும் அரசுகளின் முன்மொழிவுகளை முதலாளித்துவ நாடுகள் சாரம்ச ரீதியாக நிராகரித்தன, இது பற்றி கூட்டுச்சேரா அரசுகளால் டெல்லி மகாநாட்டில் உருவாக்கப்பட்ட எல்லாக் கோரிக்கைகளையும் இவை நடைமுறையில் மறுத்தன.

1983ஆம் ஆண்டு ஜுன் 6ஆம் தேதி பெல்கிரேதில் வர்த்தகம் மற்றும் வளர்ச்சி பற்றிய ஐ.நா. மகாநாட்டின் (UNCTAD) 6வது அமர்வு துவங்கியது. இதில் 160 நாடுகளின் பிரதிநிதிகளும் பல கூட்டு அரசாங்க ஸ்தாபனங்களும் அரசாங்கங்களைச் சாராத ஸ்தாபனங்களும் கலந்து கொண்டன. பொருளாதாரப் பிரச்சினைகளின் மீதான ஐ.நா. சங்கத் தீர்மானங்களுக்கு, உதாரணமாக புதிய சர்வதேசப் பொருளாதார உறவு முறையை நிலைநாட்டுவது பற்றிய முக்கியப் பிரச்சினைகள் மீது பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டுமென்று ஐ.நா. சங்கப் பொதுச் சபையால் 1979ஆம் ஆண்டிலேயே ஏற்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமெரிக்க ஐக்கிய நாட்டின் பிரதிநிதிகளும் மற்ற மேலைய நாடுகளின் பிரதிநிதிகளும் எவ்விதப் பதிலும் தரவில்லையென இம் மகாநாடு காட்டியது.

ஏழாவது மகாநாட்டில் ஏற்கப்பட்ட பொருளாதாரப் பிரகடனத்திலும் வளர்ச்சியுறும் நாடுகளில் உள்ள மோசமான நிலைமைகளை அகற்றுவதற்கான உடனடி நடவடிக்கைகள் அடங்கிய

செயல்திட்டத்திலும் கூட்டுச் சேரா இயக்க உறுப்பு நாடுகளாகிய வளர்ச்சியுறும் நாடுகளின் நிலவரங்களே மேம்படுத்துவதற்கான திட்டவட்ட மான ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் அடங்கி யுள்ளன.

கூட்டுச் சேரா இயக்கத்தை எதிர்நோக்கியுள்ள உடனடி லட்சியங்களே பி. காஸ்ட்ரோ பின்வரு மாறு வரையறுத்தார்: ''நம்மை அச்சுறுத்தும் அணு ஆயுத பேரழிவிற்கு முன், போதுமான அளவு வளர்ச்சியின்மையுடனும் சுரண்டலின் ஒடுக்கு முறையுடன் தொடர்புடைய இந்தச் சோக நாடகத்தின் முன், பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியின் முன் இணங்கிப் போவதற்கோ, சமரசத்திற்கோ இடமில்லே. போராடுவது ஒன்று தான் மனிதனுக்கு ஏற்ற ஒரே வழியாகும்.''* இதில் சோஷலிச நாடுகளும் உலகிலுள்ள முற் போக்குச் சக்திகள் அனைத்தும் கூட்டுச் சேரா நாடுகளின் தரப்பில் நிற்கின்றன.

மகாநாட்டின் முடிவுகள் உலகிலுள்ள சமா தான சக்திகள் அனைத்தாலும் உயர்வாக மதிப் பிடப்பட்டன. உலக மக்களின் நலன்களுக்கு உகந்த் வகையில் பதட்டநிலேத் தணிவை வலுப்படுத்தி உலகின் எல்லாப் பிரதேசங்களுக்கும் விஸ்தரிப்பு, சர்வதேசப் பொருளாதார உறவுகளே மாற்றி யமைப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட மகாநாட்டின் தீர்மானங்களே 1983ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெற்ற கூட்டத்தில் சோஷலிச அரசுகளேச் சேர்ந்த கம்யூனிஸ்டு மற்றும் தொழி லாளர் கட்சிகளின் பிரதிநிதிகள் வரவேற்றனர்.

---

* *New Times*, March 18, 1983.

# அத்தியாயம் மூன்று

## கூட்டுச் சேரா இயக்க ஒற்றுமையின் மீது எது, எப்படித் தாக்கம் செலுத்துகிறது

### 1. கூட்டுச் சேராமை, நடுநிலைமை, ''சம அளவில் விலகியிருத்தல்''

ஒரு சில மேலைய நாடுகளில், ஏன் சில வளர்ச்சியுறும் நாடுகளில் கூட கூட்டுச் சேரா இயக்கம் சில சமயங்களில் ஏதோ நடுநிலைமை நாடுகளின் இயக்கமாகக் கருதப்படுகிறது. எனவே நடுநிலைமை, கூட்டுச் சேராமை, ''சம அளவில் விலகியிருத்தல்'' ஆகியவற்றைச் சுருக்கமாகப் பார்ப்பது அவசியம்.

''ஆக்க பூர்வமான நடுநிலைவாதம்'' (நடுநிலைமை) என்றழைக்கப்படும் சொல் சுதந்திர இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையைச் சித்தரிப்பதற்காக முதலில் பலராலும் பயன்படுத்தப்பட்டது. ஜவஹர்லால் நேரு இக்கொள்கையை, அரசுகளின் இராணுவ அரசியல் கூட்டுக்களில் கலந்து கொள்ளாத கொள்கை என்றும் இராணுவ அரசியல் குழுக்களில் இளம் அரசுகளை இழுக்க செய்யப்படும் முயற்சிகளைத் தீவிரமாக எதிர்த்து நிற்கும் கொள்கை என்றும் சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பிற்கும் தேசிய சுதந்திரம், பொருளாதார விடுதலை ஆகியவற்றை அடைவதற்கும் நடக்கும் போராட்டம் என்றும் விளக்கினர். கூட்டுச் சேராக் கொள்கை, இரா

ணுவக் குழுக்களில் சேர மறுப்பதன் மூலம் அரசுகளின் சுதந்திரத்திற்கு வகை செய்வதை நோக்கமாகக் கொண்டது, வேறுபட்ட சமூக அமைப்புகளையுடைய அரசுகளுக்கு இடையே சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தவும் மக்களின் விடுதலை மற்றும் சுதந்திரத்திற்காகவும் தீவிரமாகப் போராடுவதை முன்னனுமானிக்கிறது.

யுத்தத்தில் பங்கேற்காதிருத்தல், சமாதான காலத்தில் இராணுவக் கூட்டுகளில் கலந்து கொள்ளாதிருப்பது என்பதுதான் நடுநிலைமையின் அடிப்படைகளாகும். நடுநிலைமை என்பது, சாதாரணமாக ஆவணங்களில் வகுக்கப்பட்ட சர்வதேச வரையளவுகளை ஆதாரமாகக் கொண்டு இயங்குகிறது. உதாரணமாக ஆஸ்திரியா, ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகள் நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றுகின்றன.

கூட்டுச் சேரா இயக்கம் என்பது, சர்வதேச நிலவரத்தை மேம்படுத்த ஆக்கப்பூர்வமான பங்கினைச் செலுத்தி, தாம் வென்று பெற்ற தேசிய அரசுரிமையைப் பலப்படுத்திப் பாதுகாக்கவும் விடுதலையடைந்த நாடுகளின் துரித கதியிலான பொருளாதார வளர்ச்சிக்கும் அனுகூலமான வெளிச்சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு கொள்கையாகும்.

60க்களில் ஸ்தாபன ரீதியாக கூட்டுச் சேரா இயக்கம் உயர் மட்ட மகாநாடுகளின் போதும் இதற்கு முன்னர் வரும் நேரடித் தயாரிப்புக் கட்டங்களின் போதும் மட்டுமே செயல்பட்டு வந்தது. ஆனல் 70க்களில், குறிப்பாக இணைப்பு

அலுவலகம் உருவாக்கப்பட்டு நியூயார்க்கில் அதிகாரப் பூர்வமற்ற நிரந்தர தலைமை அலுவலகம் தோற்றுவிக்கப்பட்டதும், வழக்கமான ஐ.நா. சங்கப் பொதுச் சபை அமர்வின் முன், இணக்கமான நிலைகளுக்கு வரவும் கூட்டுச் சேரா இயக்கத்தின் சார்பில் தீர்மான நகல்களை உருவாக்கவும் அயல்விவகாரத்துறை அமைச்சர்கள் அல்லது நிரந்தரப் பிரதிநிதிகளின் ஓரளவு முறையான கூட்டங்களைக் கூட்டுச்சேரா அரசுகள் முறையாக நடத்த ஆரம்பித்தன.

கூட்டுச்சேரா இயக்கம் தனது தீர்மானங்களில், பிரகடனங்களில் இயக்கத்தின் அரசியல் போக்கை—ஏகாதிபத்திய எதிர்ப்பு, காலனி எதிர்ப்பு, நவீன காலனி எதிர்ப்பு, இனவெறி, நிறவெறியை எதிர்த்த போராட்டம், உலக அமைதியைப் பேணிப் பாதுகாப்பதற்கான போராட்டம்—திட்டவட்டமாக வரையறுத்துரைக்கிறது.

அதே பொழுது நடுநிலைக் கொள்கையிலும் கூட்டுச் சேராக் கொள்கையிலும் ஒரு சில ஒத்த அம்சங்கள் உள்ளதைக் கவனிக்க வேண்டும். முதலாவதாக, நடுநிலை அரசுகளும் கூட்டுச் சேரா அரசுகளும் உலக அமைதியைப் பேணிப் பாதுகாப்பதிலும் ஆயுதப் போட்டியை நிறுத்துவதிலும் அக்கறை கொண்டுள்ளன. இரண்டாவதாக, இந்த இரண்டு வகையான அரசுகளுமே இராணுவக் கூட்டுகளுக்கு வெளியில் உள்ளன, இவற்றில் சேரக் கூடாது என்ற உறுதிமொழியை மேற்கொண்டுள்ளன.

நடுநிலை அரசுகள் பல விஷயங்களில் கூட்டுச் சேரா நாடுகளின் செயல்திட்டங்களை ஆதரிக்

கின்றன, கூட்டுச் சேரா நாடுகளின் அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்களின் மகாநாடுகளில் விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றன.

70க்களின் துவக்கத்தில் இளம் கூட்டுச் சேரா அரசுகளின் வெளிவிவகார செயல்திட்டங்கள் உருவாவதன் மீது ஒரு கருத்தமைவு கணிசமான செல்வாக்கு செலுத்தியது. இதன்படி உலகம் முழுவதும் மூன்று வகை நாடுகளாகப் பிரிக்கப்பட்டது.* இதன்படி ஒரு வகையில் அமெரிக்க ஐக்கிய நாடும் சோவியத் யூனியனும் (''இரண்டு சூப்பர் வல்லரசுகள்'') சேர்க்கப்பட்டன, இரண்டாவ்து வகையில் மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளும் ஜப்பானும் அடங்கியிருந்தன, ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த மற்ற எல்லா வளர்ச்சியுறும் நாடுகளும் மூன்ருவது வகையில் உட்படும். இந்தக் கருத்தமைப் பின்படி பார்த்தால், முற்றிலும் எதிரெதிரான சமூக அமைப்புக்களையுடைய நாடுகளின் கொள்கையை ஒரே மாதிரியாக அணுக வேண்டுவது அவசியம் என்ற தப்பான முடிவு பிறக்கும். அரசுகளின் வர்க்கத் தன்மையை அலட்சியப்படுத்திய

---

* 1974ஆம் ஆண்டு ஏப்ரலில் ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் 6வது விசேஷ அமர்வில் சீனப் பிரதிநிதி பின்வருமாறு அறிவித்தார்: ''அமெரிக்க ஐக்கிய நாடும் சோவியத் யூனியனும் முதல் உலகம். ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, மற்ற பிரதேசங்களைச் சேர்ந்த வளர்ச்சியுறும் நாடுகள் மூன்ருவது உலகில் அடங்கும். மேற்கூறிய உலகங்களுக்கு இடையில் உள்ளது இரண்டாவது உலகமாகும்.'' (**ஜென்மின் ஜிபாவோ**, 1974, ஏப்ரல் 11.)

தானது, கூட்டுச் சேரா இயக்கத்தின் அடிப்படை ஆவணங்களை உருவாக்கும் போது குழப்பத்தை ஏற்படுத்தியது, இளம் அரசுகளின் போராட்டத் திற்கு இருந்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக் கைப் பலவீனப்படுத்தியது, யுத்தம், பிற்போக் கிற்கு எதிராக நவீன உலகின் எல்லா சமாதான சக்திகளும் ஒற்றுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இடையூறு விளைவித்தது.

அரசுக் கூட்டுகளிலிருந்து ''சம அளவில் விலகி இருப்பது'', இயக்கத்திற்கு ''கூட்டுகளுக்கு அப்பாற்பட்ட தன்மையை'' அளிப்பது பற்றி பிரச்சினை சமீப ஆண்டுகளில் கூட்டுச் சேரா இயக் கத்தில் பன்முறை விவாதிக்கப்பட்டது, குறிப் பாக ஹவானு மகாநாட்டிற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த போதும் மகாநாட்டின் போதும் இப்பிரச்சினையின் மீது பரவலான விவா தம் நடந்தது.

அல்ஜீரியா மகாநாட்டிலேயே (1973) ''சம அளவு விலகியிருக்க வேண்டும்'' என்று கூறிய வர்களை நோக்கி பி. காஸ்ட்ரோ பின்வருமாறு கூறினார் என்பதை நினைவு கூர்வது நல்லது: கியூபாவைப் பொறுத்த மட்டில் நாங்கள் உலகை முதலாளித்துவ நாடுகள், சோஷலிச நாடுகள் என்றும், ஏகாதிபத்திய நாடுகள், காலனியாட்சி யின் கீழுள்ள நாடுகள் என்றும், பிற்போக்கு நாடு கள், முற்போக்கு நாடுகள் என்றும் பிரிக் கின்றோம். அரசாங்கங்களை நாங்கள் ஏகாதிபத்தி யம், காலனியாதிக்கம், நவீன காலனியாதிக்கம், நிறவெறி ஆகியவற்றை ஆதரிக்கும் அரசாங்கங் கள் அல்லது ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம்,

நவீன காலனியாதிக்கம், நிறவெறி ஆகியவற்றை எதிர்த்துப்போராடும் அரசாங்கங்கள் என்று பிரிக்கின்றோம். கியூபாவிற்கு இப்படிப்பட்டதொரு அணுகுமுறை கூட்டுச் சேருவதா அல்லது கூட்டுச் சேராமலிருப்பதா எனும் பிரச்சினையில் முக்கியமான ஒன்றாகும் என்று அவர் வலியுறுத்தினார். 1979ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஹவானா மகாநாட்டைத் துவக்கி வைத்து உரையாற்றும் போது பி. காஸ்ட்ரோ பின்வருமாறு குறிப்பிட்டார்: ''கியூபாவின் மீது என்ன குற்றம் சாட்ட முடியும்? இது ஒரு சோஷலிச நாடு என்றா? ஆம், எங்கள் நாடு ஒரு சோஷலிச நாடு. ஆனால் எங்கள் சித்தாந்தத்தை இயக்கத்தின் உள்ளேயோ அல்லது இயக்கத்தின் வெளியேயோ யார் மீதும் திணிக்க நாங்கள் முயலவில்லை... அல்லது, சோஷலிச முகாமுடனும் சோவியத் யூனியனுடனும் நாங்கள் சோதர உறவுகளைக் கடைபிடிக்கின்றோம் என்று எம் மீது குற்றஞ்சாட்டலாம். ஆம், நாங்கள் சோவியத் யூனியனின் நண்பர்கள். நாங்கள் சோவியத் யூனியனுக்கு மிகவும் நன்றிக்கடன் பட்டுள்ளோம் ஏனெனில், அழிந்துபோகும் அபாயம் எம்மை எதிர்நோக்கியிருந்த மிகத் தீர்மானகரமான, இன்னல் மிகு தருணத்தில் சோவியத் யூனியனின் பெருந்தன்மை மிக்க ஒத்துழைப்பு சோதனைகளைத் தாங்கி நிற்கவும் வெற்றி பெறவும் எமக்கு உதவியது. எல்லா மக்களினங்களுக்கும் நன்றி கூறியாக வேண்டும்.''*

---

* *Addresses Delivered at the Sixth Conference of Heads of State or Government of Non-Aligned Countries*, Havana, 1980, pp. 5—6.

1949ஆம் ஆண்டிலேயே நிகழ்த்திய உரை யொன்றில் ஜவஹர்லால் நேரு பின்வருமாறு கூறினர்: "...எந்த ஒரு கூட்டுடனும் நாம் நம்மை இணைத்துக் கொள்ளக் கூடாது என்று நான் கூறும் போது ஒரு சில நாடுகளுடன் உள்ளதை விட மற்ற சில நாடுகளுடன் எமது உறவுகள் நெருக்க மானவையாக இருக்கக் கூடாது என்று இதற்குப் பொருளல்ல என்பது தெளிவு. இது முற்றிலும் பல்வேறு காரணிகளை, முதலாவதாக பொருளா தார, அரசியல், விவசாய, இன்னும் பல காரணி களைப் பொறுத்தது... கூட்டுக்களிலிருந்து விலகி நிற்கும் நாம் தேவையான தருணத்தில் சமாதானத் தின் பாலான நமது நாட்டத்தைத் தெரிவிப் பதற்கான அனுகூலமான நிலையில் இருக்கின்றோம்; அதே நேரத்தில் பொருளாதாரத் துறைகளிலும் மற்றத் துறைகளிலும் எந்த நாடுகளுடன் கூட மிக நெருக்கமான உறவுகளை எளிதாக வளர்க்க முடியுமோ அவற்றுடன் நாம் மிக நெருக்கமான உறவுகளை வைத்துக் கொள்ளலாம்..." (1949, மார்ச் 22).*

இறுதியில், கூட்டுச் சேரா இயக்கத்தின் ஏழா வது மகாநாட்டுத் தலைவரும் இந்தியப் பிரதமரு மான இந்திரா காந்தி மகாநாட்டைத் துவக்கி வைக்குங்காலே, "கூட்டுச் சேரா இயக்கம் மங்கிப் போன, எதிர்மறையான அல்லது நடுநிலைமை யான ஒன்று அல்ல" எனக் கோடிட்டுக் காட்டி னர். "இராணுவக் கூட்டுக்களிலிருந்து தள்ளி

---

* *Indian and Foreign Review*, March 1—14, 1983, p. 4.

நிற்கும் இயக்கம், நிறவெறி அரசாங்கங்கள் அல்லது மற்றவர்களின் விடுதலையை அச்சுறுத்தும் அரசாங்கங்கள் தவிர மற்ற எல்லாருடனும் நட்பு கொண்டுள்ளது, இப்போதும் நட்பைப் பேணி வருகிறது.*

## 2. ஒற்றுமையைப் பாதிக்கும் பிரச்சினைகள்

கூட்டுச் சேரா இயக்கத்தில் உள்ள நாடுகளின் எண்ணிக்கை அதிகமாகி வரும் போது இயக்கத்தில் பங்கேற்கும் அரசுகளின் சமூக அரசியல் திசையமைவுகளும் பலப்பலவாயின. முடியாட்சி, நிலப்பிரபுத்துவ அமைப்புள்ள அரசுகளும் முதலாளித்துவ நாடுகளும், பல அடுக்குப் பொருளாதாரமுடைய நாடுகளும் சோஷலிசத் திசைமைவு நாடுகளும் சோஷலிச நாடுகளும் இங்குள்ளன.

60க்களில் கூட்டுச் சேரா இயக்கத்தில் இளம் அரசுகளின் சமூகத் திசையமைவுக் காரணியின் செல்வாக்கு அவ்வளவு அதிகமாகத் தென்படவில்லை, ஏனெனில் அரசியல் சுதந்திரத்தை வென்று பலப்படுத்தும் பிரச்சினைகள் முதலிடத்தில் இருந்தன. காலப் போக்கில் அரசியல் சுதந்திரம் அடையப்பட்டு, பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகள் மேன்மேலும் முக்கியத்துவம் அடைந்த போது, விடுதலைப் போராட்டத்தில் தேசிய மற்றும் சமூக அம்சங்களின் விகிதம் மேன்மேலும் தெளிவாக மாறியது, வர்க்க மோதல்கள் கூர்மையடைந்தன.

---

* *Indian and Foreign Review*, March 15—31, 1983, p. 6.

கூட்டுச் சேரா இயக்கத்தில் பங்கேற்கும் நாடுகளின் வெவ்வேருன அரசியல் மற்றும் பொருளாதாரத் திசையமைவும், இதனேடு கூட வளர்ச்சியில் சமமின்மை, மற்ற காரணங்களின் விளைவாய் மேன்மேலும் பாகுபாடு ஏற்படுவதும் வெளிவிவகாரத் துறையில் யதார்த்தமாகக் குறிப்பிட்ட வேறுபாடுகளுக்குக் கொண்டுவந்து விட்டன, ஒரு சில சர்வதேசப் பிரச்சினைகளில் கருத்து மாறுபாடுகளை ஏற்படுத்தின. உதாரணமாக, பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகள் மையக் கவனத்தில் இருக்கும் போது கருத்து மாறுபாடுகள் தெட்டத் தெளிவாகின்றன: ஒரு புறம், எல்லா வளர்ச்சியுறும் நாடுகளைப் போன்றே கூட்டுச் சேரா நாடுகள் பொருளாதாரப் பின்தங்கலை அகற்றுவதிலும் சமமில்லாத சர்வதேசப் பொருளாதார உறவுகளை மாற்றியமைப்பதிலும் ஒரே அளவு அக்கறை கொண்டுள்ளன. மறுபுறம், இந்நாடுகளின் ஆளும் வட்டங்கள் திட்டவட்டமான பொருளாதாரப் பிரச்சினைகளின் தீர்வைப் பலவிதங்களில் அணுகுகின்றன, இவை ஏகாதிபத்தியத்துடன் பல விதங்களில் மோதலல்லவை, இவற்றில் ஒரு சில ஆளும் வட்டங்களோ, ஏகாதிபத்திய வல்லரசுகளுடனும் ஏகபோகங்களுடனும் சமரசத்தை நாடும் நாட்டத்தை வெளிப்படுத்துகின்றன.

இந்தக் காரணங்களால்தான் உயர் மட்ட சந்திப்புகளின் இறுதி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுச் சேரா இயக்கக் கொள்கையின் பொதுவான கோட்பாடுகளையும் லட்சியங்களையும் ஒவ்வொரு வகையான நாடுகளும் பல நேரங்

களில் தமக்கேற்றபடி வியாக்கியானப்படுத்து கின்றன. இவ்வாறு வெவ்வேறு வித வியாக்கி யானங்களுக்கு முக்கியக் காரணம் இயக்க உறுப்பு நாடுகளின் வெவ்வேருன சமூக அரசியல் திசை யமைவும் இந்நாடுகளின் அரசியல், பொருளா தார வளர்ச்சியில் சமமின்மையுமாகும். இதைப் பற்றி விரிவாகப் பின்னுல் பார்ப்போம். ஏற் கனவே கூறியபடி மகாநாடுகளில் எல்லா ஆவணங் களும் கருத்து ஒற்றுமை முறையில் ஆமோதிக்கப் பட்டால்தான் நிறைவேற்றப்படும். ஏதாவ தொரு தீர்மானத்தின் மீது இசைவு இல்லாவிடில், இப்பிரச்சினையைப் பற்றிய தனது கருத்தை விளக்கி, அதை எழுத்து வடிவில் தெரிவிக்க ஒவ்வொரு உறுப்பு நாட்டிற்கும் உரிமையுண்டு. உதாரணமாக, ஹவாஞவில் 17 இத்தகைய விளக் கங்கள் குறிப்பிடப்பட்டன. தமது சுதந்திரத்திற் காகப் போராடும் புயெர்ட்டோ-ரிக்கா மற்றும் பெலிஸ் மக்களுக்கு ஒருமைப்பாடு தெரிவிக்கும் தீர்மானத்தைத் 16 நாடுகள் ஆதரிக்கவில்லை. இவ் வளவு அதிக எண்ணிக்கையில் விளக்கங்கள் இருந் ததால் 6வது மகாநாட்டில் விசேஷத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது (கூட்டுச் சேரா நாடுகளுக் கிடையே ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் ஒத்து ழைப்பை வலுப்படுத்தும் முறைகளைப் பற்றிய முடிவு, மூன்ரும் பகுதி, முதல் பாரா). ''விளக் கங்கள் மொத்தத்தில் கருத்தொற்றுமையைப் பலவீனப்படுத்துவதால் இயன்ற அளவு இவற் றைத் தவிர்க்குமாறு'' இத்தீர்மானத்தில் சிபா ரிசு செய்யப்பட்டுள்ளது. இந்த முறை பின்வரு மாறு விளக்கப்படுகிறது: ''எதிர் கருத்துக்கள்

உட்பட பல்வேறு கருத்துக்களைப் புரிந்து மதிப்பதை கருத்து ஒற்றுமை முன்னனுமானிக்கிறது, பரஸ்பர சமரசத்தைக் குறிக்கிறது; இதன் அடிப்படையில், கூட்டுச் சேரா இயக்கத்தின் உண்மையான மனப்பாங்கில், உறுப்பு அரசுகளின் நலன்களை உண்மையாகக் கணக்கிலெடுத்துக் கொள்ளும் ஒரு நிகழ்ச்சிப் போக்கின் விளைவாய் ஒத்திசைவான நிலையை உருவாக்கலாம். கருத்து ஒற்றுமை என்பது ஒரு நிகழ்ச்சிப் போக்கும், இறுதி சமரசமும் ஆகும்; இங்கே பூர்வாங்க ஆலோசனைகள், விவாதங்கள், பேச்சு வார்த்தைகளின் பயனாய் பொது ஒத்திசைவான நிலை உருவாக்கப்படுகிறது.''*

கூட்டுச் சேரா இயக்கத்தின் முதல் மகாநாடு நடந்து 20 ஆண்டுகளுக்கும் மேலாகி விட்டன. 60க்களின் துவக்கத்தில், இராணுவ அரசியல் கூட்டுகளுக்குள் இழுக்கப்படாமலிருந்து தமது அரசியல் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதன் மீது கூட்டுச் சேரா அரசுகள் முக்கிய அக்கறை செலுத்தின. ஆனல் 70க்களில் சர்வதேச நிலவரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், சோஷலிச நாடுகளின் செல்வாக்கும் பலமும் அதிகரித்தது, வேறுபட்ட சமூக அமைப்புக்களையுடைய அரசுகளின் சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளுக்குக் கிடைத்த சர்வபொது அங்கீகாரம் ஆகியவற்றோடு கூட இயக்கத்தில் அளவு ரீதியான மாற்றங்களும் பண்பு ரீதியான மாற்றங்களும் ஏற்படுகின்றன. இன்று கூட்டுச் சேரா இயக்கம் ஏகாதிபத்தியம்,

---

* *Two Decades of Non-Alignment*, p. 473.

நவீன காலனியாதிக்கம், ஜியோனிசம் ஆகிய வற்றிற்கு எதிரான போராட்டத்தில், உலக யுத்த அபாயத்திற்கு எதிரான போராட்டத்தில், புதிய சர்வதேசப் பொருளாதார உறவுகளை நிலைநாட்டு வதற்கான போராட்டத்தில் தீவிரப் பங்கேற் கிறது.

நவீன உலகப் பிரச்சினையைப் பற்றிய எந்த ஒரு தீர்மானமும் கூட்டுச் சேரா நாடுகளின் ஆதர வின்றி ஐ.நா. சங்கப் பொதுச் சபையால் ஏற்கப் பட முடியாது. கூட்டுச் சேரா இயக்கத்தின் மகாநாடுகளில் ஏற்கப்பட்ட தீர்மானங்களை நடை முறையில் செயல்படுத்தும் முகமாக ஐ.நா. சங் கத்திலும் மற்ற சர்வதேச ஸ்தாபனங்களிலும் இயக்கத்தின் உறுப்பு நாடுகள் ஒத்தியைந்து செயல்படுகின்றன.

ஆனால் 70க்களின் நடுவில் வளர்ச்சியுறும் நாடு களிடையே வேறுபாடுகள் தோன்றும் போக்கு மேன்மேலும் தெளிவாகத் தென்பட்டது. உதாரணமாக இயக்க நாடுகளிடையே, தேசிய வருமானம், மூலதன முதலீடு ஆகியவற்றில் மிக உயர்வான வளர்ச்சி வேகங்களையுடைய, ஒரு சில சந்தர்ப்பங்களில் அதிக உயர்வான உழைப்பு உற்பத்தித் திறனையுடைய நாடுகள் தனியாக வெளிப்பட்டன. இவற்றோடு கூட நபர் ஒருவருக் கான மிகக் குறைவான ஊதியத்தையும் மிகக் குறைந்த மூலதன முதலீட்டு வளர்ச்சியையும் பலவீனமான தொழிற்துறையையும் கொண்ட அரசுகளும் நிலவிவந்தன.

உலக முதலாளித்துவப் பொருளாதார அமைப் பில் தோன்றிய நெருக்கடிகளின் தாக்கத்தினால்

விடுதலையடைந்த நாடுகளின் பொருளாதார வேறுபாட்டுப் போக்கு கணிசமாக வலுத்தது. எரிபொருள் நெருக்கடி, செல்வம் மிகு எண்ணெய் நாடுகளை முன்கொணர்ந்தது; ஒரு சில வளர்ச்சியுறும் நாடுகளில் தொழிற்துறை மயமாக்கும் போக்குத் தீவிரமடைந்தது, பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது, நபர் ஒருவரின் வருமானம் அதிகரித்தது.

பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சியில் சமமின்மை, கூட்டுச் சேரா இயக்கத்தில் உறுப்பினர்களாயுள்ள ஒரு சில வளர்ச்சியுறும் நாடுகளில் ஏகாதிபத்தியத்தின் ஆதாரத் தளங்கள் தோன்றக் காரணமாக அமைந்தது. இவை பிரதேச, ஏன் உலகந்தழுவிய அளவுகளில் பதட்டத்தின் தோற்றுவாய்களை உருவாக்க வல்லவை. இந்நாடுகள் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்திற்குள் மட்டுமின்றி, ஏகாதிபத்தியக் கொள்கை அமைப்பினுள்ளும் மேலும் ஆழமாக இழுக்கப்பட்டன. அதே நேரத்தில் இந்நாடுகளில் உள்நாட்டு ஸ்திரமின்மை அதிகரித்து வருவது தென்பட்டது. இரானிலிருந்த ஷாக் ஆட்சிக் கும்பலும் சதாத்தின் எகிப்தும் இதற்கு எடுத்துக் காட்டுகள்.

இக்காரணிகள் அனைத்தும் கூட்டுச் சேரா இயக்கத்திலும் மொத்தமாக வளர்ச்சியுறும் உலகிலும் முரண்பாடுகளைத் தோற்றுவித்தன.

முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுத்த பெரும்பான்மையான நாடுகளுக்கு, ஒரு புறம் முதலாளித்துவ வளர்ச்சிக்கு ஆதரவாய் நிற்கும் சமூக சக்திகளுக்கும் மறுபுறம்

சகலவித சுரண்டல் வடிவங்களையும் எதிர்த்துப் போராடும் சமூக சக்திகளுக்கும் இடையிலுள்ள முரண்பாடு ஆழமடைவது குறிப்பிடத் தக்கதொரு அம்சமாகியது. இந்நாடுகள் ஒருசிலவற்றில் புதிய சமூக முரண்பாடுகள் தோன்ற முக்கியக் காரணம் பொருளாதாரத்தின் மற்றத் துறைகளைத் தனக்குக் கீழே அடக்கும் முதலாளித்துவத் துறை பரவி வருவதேயாகும். இது தவிர, பொருளாதாரப் பின்தங்குதலை அகற்றுவதிலும் எனவே இப்போது நிலவும் சமமற்ற சர்வதேசப் பொருளாதார உறவுகளை மாற்றியமைப்பதிலும் யதார்த்தமாக அக்கறை கொண்டுள்ள இந்த அரசுகளில் ஆட்சியிலுள்ள வெவ்வேறு குழுக்கள் பொருளாதாரப் பிரச்சினைகளின் திட்டவட்டமானத் தீர்வினை வெவ்வேறு விதமாக அணுகுகின்றன, இவை பழைய சர்வதேசப் பொருளாதார முறைக்கெதிராக ஒரே விதமாகப் போராட வல்லவையல்ல, இவற்றில் ஒரு சில ஏகாதிபத்தியத்துடன் சமரசமாகப் போகவும் தயார்.

கூட்டுச் சேரா இயக்கத்தின் ஒற்றுமை, தொடர்ச்சியான ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் காலனியாதிக்க எதிர்ப்பின் மீது தீய தாக்கம் செலுத்தும் காரணிகளைப் பகுத்தாய்வு செய்தால் முதலில் பின்வரும் அம்சத்தைக் கணக்கில் கொள்ள வேண்டும். பல இளம் அரசுகள் அரசியல் விடுதலை அடைந்த பின்னும் பல சந்தர்ப்பங்களில் முன்னர் ஆதிக்கம் செலுத்திய நாடுகளைப் பொருளாதார ரீதியாகச் சார்ந்துள்ளன, முன்னர் ஆதிக்கம் செலுத்திய இந்த நாடுகள் பொருளாதாரத்தின் முக்கியத் துறைகளில் தமது நிலைகளை

அப்படியேத் தக்க வைத்துள்ளன. எனவே பல சமயங்களில் இந்நாடுகளின் உள்நாட்டு, வெளி நாட்டுக் கொள்கைகள் முன்னர் ஆதிக்கம் செலுத்திய நாடுகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. சில சமயங்களில் தனிப்பட்ட சில வளர்ச்சியுறும் நாடுகளின் நிலையும் மேலைய வல்லரசுகளின் நிலையும் முழுவதுமாக ஒத்துப் போவதைக் காணலாம். நிச்சயமாக, இப்படிப்பட்ட ஒரு இணக்கம் பல சமயங்களில் முன்னர் ஆதிக்கம் செலுத்திய நாடுகளின் நிர்பந்தத்தால் அடையப்படுகிறது, இது இந்த இளம் அரசுகளின் நலன்களுக்கு இழப்பை ஏற்படுத்துகிறது.

இரண்டாவதாக, வளர்ச்சியில் சமமின்மையும் இதனோடு சேர்ந்து அதிகரிக்கும் கூட்டுச் சேரா நாடுகளின் அரசியல், பொருளாதாரக் கதம்பநிலையும் ஒன்றுபட்ட நடவடிக்கைகளின் போக்கைத் தேர்ந்தெடுப்பதிலும் கூட்டுச் சேராக் கோட்பாடுகளை நிர்ணயிப்பதிலும் அந்தந்த சர்வதேச சம்பவங்களை மதிப்பிடுவதிலும் மாறுபாடுகள் தோன்றுவதற்கு இட்டுச் செல்கின்றன. வேறுபாடுகளின் விளைவாய், கூட்டுச் சேரா இயக்கக் கொள்கை மற்றும் லட்சியங்கள் மீது கண்ணோட்டங்களில் நிலவும் மாறுபாடுகளைப் பிரதிபலிக்கும் சக்தி மையங்கள் இயக்கத்தில் தோன்றுகின்றன.

இயக்கத்தின் உள்ளே, வளர்ச்சியுறும் நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பல்வேறுவித அணுகுமுறைகள் — புரட்சிகர அணுகுமுறை, சீர்திருத்தவாத, கற்பனாவாத அணுகுமுறைகள் —ஒன்றோடொன்று மோதிக் கொண்டன, ஒன்றையொன்று எதிர்த்து நின்றன. நிச்சயமாக,

இது மிக உசிதமான தீர்மானங்களை உருவாக்கத் துணைபுரியாது, சமமான சர்வதேசப் பொருளாதார உறவுகளை நிலைநாட்டுவதற்கான சர்வ பொதுப் போராட்டத்தை இது பலவீனப்படுத்து கிறது.

நவீன காலனியாதிக்கத்தின் ஆதரவாளர் களால் திறமையாகப் பிரச்சாரம் செய்யப்படும் ''பணக்கார மற்றும் ஏழை நாடுகள்'' (''வடக்கு —தெற்கு'') எனும் கருத்தமைப்புக் கூட்டுச் சேரா நாடுகளின் ஒற்றுமைக்கும் இவை நடத்தும் போராட்டத்தின் செயல் முனைப்பிற்கும் துணை புரிவதில்லை. கூட்டுச் சேரா அரசுகளின் ஒரு சில பிரதிநிதிகள் கூட்டுச் சேரா இயக்கச் சந்திப்பு கள், ''77-குழு'', ஐ.நா. சங்கப் பொதுச் சபை அமர்வுகள் அல்லது இதன் விசேஷ உறுப்புகளில் பங்கேற்கும் போது ஏகாதிபத்திய வல்லரசுகள், முன்னர் ஆதிக்கம் செலுத்திய நாடுகளை நோக்கிக் கூறும் அதே அதிருப்திகளையும் முன்வைக்கும் கோரிக்கைகளையுமே சோவியத் யூனியன் முன்னும் வைக்கின்றனர் என்பதைப் பற்றி நாம் இங்கே குறிப்பிடுகின்றோம். பின்தங்கிய நாடுகள் காலனி யாதிக்க நாடுகளால் சுரண்டப்படுவதில் சோவியத் யூனியனுக்கு எந்தவிதப் பொறுப்பும் இல்லை எனும் உண்மை இங்கே அலட்சியப்படுத்தப்படுகிறது. சர்வதேசப் பொருளாதார உறவுகளை நியாய மானஅடிப்படையில் மாற்றியமைக்கவும் வளர்ச்சி யுறும் நாடுகளுடன் பன்முக ஒத்துழைப்பை நிலை நாட்டவும் ஆயுதக் கலைப்பின் விளைவாகக் கிடைக் கும் நிதியில் ஒரு பகுதியைக் கொண்டு வளர்ச்சி யுறும் நாடுகளுக்கு உதவியளிக்கும் பிரச்சினை

யை அடிப்படை ரீதியாகத் தீர்க்கவும் சோவியத் யூனியன் தொடர்ச்சியாகப் போராடுகிறது.

பொருளாதாரத் துறையில் ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து கொள்ள கூட்டுச் சேரா இயக்கத்தில் உள்ள குறிப்பிட்டச் சில பழமைவாத சக்திகள் கொண்டுள்ள நாட்டம் அரசியல் துறையிலும் சமரசங்களுக்குத் தவிர்க்க இயலாதவாறு இட்டுச் செல்கிறது. கூட்டுச் சேரா இயக்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்கை மாற்ற, ஏன் அழிக்க வல்ல தீர்மானங்களைக் கூட்டுச் சேரா நாடுகளின் மீது திணிக்க இச்சக்திகள் முயலுகின்றன; இச்சக்திகளின் முயற்சிகளால் தான் அவ்வப்போது, கூட்டுச் சேரா இயக்க நண்பர்களையும் எதிரிகளையும் வேறுபடுத்தாத தீர்மானங்கள் ஆமோதிக்கப்படுகின்றன. இவ்விஷயத்தில், ஆக்கிரமிப்புக் கூட்டாகிய நேட்டோவின் லட்சியங்கள், நடவடிக்கைகளைப் பாதுகாப்பு அமைப்பாகிய வார்சா ஒப்பந்தத்தின் லட்சியங்கள், நடவடிக்கைகளுடன் சமப்படுத்தவும் ''கூட்டு'' எனும் கருத்தை ''சமூகப் பொருளாதார அமைப்பு'' எனும் கருத்துடன் கலக்கவும் செய்யப்படும் முயற்சிகள் தனியாகக் குறிப்பிடப்பட வேண்டும். இது, கூட்டுச் சேரா நாடுகள் ''சம அளவில் விலகியிருக்க'' வேண்டும் என்பது பற்றிய ஆய்வுகள் தோன்றக் காரணமாயுள்ளது.

இன்றைய உலகின் திட்டவட்டமான பிரச்சினைகளின் தீர்வை அணுகுவதில் ஒரே மாதிரியான சமூக அரசியல் திசையமைவை உடைய நாடுகளிடையே தோன்றும் முரண்பாடுகளின் அதிகரிப்பும் கூட்டுச் சேரா இயக்கத்தின் ஒற்றுமை

யைப் பாதிக்கும் ஒரு அம்சமாகும். உதாரணமாக, ஒரு சில பொருளாதாரப் பிரச்சினைகளில் லத்தீன் அமெரிக்க மற்றும் கரிபியக் கடல் பிரதேச நாடுகளுக்கும் ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர உறவுகளில் இன்னல்கள் உள்ளன. வர்த்தகப் பொருளாதாரத் தொடர்புகளில் மிகக் குறைவான வளர்ச்சியடைந்த ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளுக்குச் சலுகைகளை அளிக்க பொருளாதார வளர்ச்சியில் ஒப்பீட்டளவில் உயர் மட்டத்தில் இருக்கும் லத்தீன் அமெரிக்க நாடுகள் தயாராயில்லை. 1977ஆம் ஆண்டு மார்ச்சில் கெய்ரோவில் நடைபெற்ற அராபிய-ஆப்பிரிக்க மகாநாட்டில், ஆப்பிரிக்க நாடுகளுக்கு உதவி புரிய உறுதியளித்த எண்ணெய் எடுக்கும் நாடுகள் லத்தீன் அமெரிக்க அரசுகளின் இந்தக் கோரிக்கைக்குச் செவிமடுக்கவில்லை. வளர்ச்சியுறும் உலகில் தொழிற்துறைப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் ஒரு சில நாடுகளுக்கும் மூலப்பொருளை ஏற்றுமதி செய்யும் அரசுகளுக்கும் இடையே பொருளாதார உறவுகளில் இன்னல்கள் உள்ளன: மூலப்பொருளை ஏற்றுமதி செய்யும் நாடுகள் இதன் விலைகளைக் கூட்ட வேண்டும் என்னும் நோக்கத்தோடு முன்வைக்கும் ஆலோசனைகளின் மீது தொழிற்துறைப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகள் போதுமான அக்கறை காட்டுவதில்லை.

கூட்டுச் சேரா அரசுகளுக்கு இடையிலான கருத்து மாறுபாடுகள் ஐ.நா.சங்கத்திலும் வெளிப்படுகின்றன. உதாரணமாக, அங்கோலாவிற்கு கியூபா அளிக்கும் சர்வதேசிய உதவி குறித்து

ஆரம்பத்தில் ஆப்பிரிக்க நாடுகளிடையே கருத்து வேற்றுமைகள் நிலவின. கூட்டுச் சேரா இயக்க உறுப்பு நாடுகளில் ஒரு சில கம்பூச்சியா மற்றும் ஜனநாயக ஆப்கானிஸ்தானின் மக்களின் பால் நட்பு பாராட்டாத நிலையை மேற்கொண்டனர்.

சில நேரங்களில் பிரதேச ஸ்தாபனங்களிலும் — உதாரணமாக ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டு ஸ்தாபனத்தில் — கூட்டுச் சேரா அரசுகளுக்கு இடையே கடுமையான முரண்பாடுகள் நிலவுகின்றன. 1963இல் தோற்றுவிக்கப்பட்ட ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டு ஸ்தாபனம் காலனியாதிக்கத்தை இறுதியாக ஒழித்துக் கட்டுவதற்கான போராட்டம் வலுவடையத் துணை புரிகிறது; இது சர்வதேச அரங்கில் ஆப்பிரிக்க நாடுகளின் செல்வாக்கை உயர்த்தியுள்ளது; ஆப்பிரிக்க நாடுகளிடையே அரசியல், பொருளாதார, கலாச்சார ஒத்துழைப்பை ஒழுங்குபடுத்தி வளர்ப்பதில் கணிசமான பங்காற்றியுள்ளது. ஆனுல் சோமாலிய-எத்தியோப்பியத் தகராறு,[29] மேற்கு சஹாரா பிரச்சினை, சாத் நாட்டில் நடைபெறும் ஆயுத மோதல் போன்ற கடுமையான பிரச்சினைகளின் மீது உருப்படியான தீர்மானங்களை ஏற்க ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டு ஸ்தாபனத்தால் முடியவில்லை.

கூட்டுச் சேரா இயக்க உறுப்பு நாடுகளிடையே அரசியல், பொருளாதார, சித்தாந்தப் பிரச்சினைகளில் நிலவும் பல்வேறு விதமான முரண்பாடுகள் இயக்க ஒற்றுமையைப் பெரிதும் பலவீனப்படுத்துகின்றன; இந்த முரண்பாடுகள் அடிக்கடி இவற்றின் இடையேயான நேரடி மோதல்களுக்குக்

காரணமாக அமைகின்றன. முக்கியமாக இன, மத, சமூக, பொருளாதார முரண்பாடுகளை வேண்டுமென்றே உருவாக்கி தக்க வைத்த மேலைய வல்லரசுகளின் முந்தைய காலனியாதிக்க கொள்கைதான் இந்த மோதல்களைத் தோற்றுவிக்கிறது. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் 120க்கும் கூடுதலான ஆயுத மோதல்கள் நடைபெற்றுள்ளன. இத்தகையச் சச்சரவுச் சூழ்நிலைகள் வளர்ச்சியுறும் நாடுகளின் ஒற்றுமையைக் குலைத்தன, பல்வேறு பிரதேசங்களில் நிலவரத்தின் ஸ்திரமின்மையை அதிகப்படுத்தின, வளர்ச்சியுறும் உலகில் ஆயுதப் போட்டிக்கான சாக்காக அமைந்தன.

பகுப்பாய்வு காட்டும்படி ஆயுத மோதல்களில் கணிசமான பகுதி அரசுகளின் பிரதேச எல்லைத் தகராறுகளால் தோன்றியது. இந்த எல்லைகள் பூகோள, இன, மற்றக் காரணிகளைக் கணக்கில் கொள்ளாமல் முன்னர் ஆதிக்கம் செலுத்திய நாடுகளால் தன்னிச்சையாக நிலைநாட்டப்பட்டன என்பது அனைவருக்கும் தெரிந்ததே. இக்காரணத்தினுல்தான் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் உள்ள பல சுய அரசுகளுக்கிடையே மோதல்கள் ஏற்படுகின்றன. பிரதேச, பொருளாதார, மத வேறுபாடுகளின் ஒட்டுமொத்தமும் அதே சமயத்தில் மோதலுக்கான காரணமாக இருக்கலாம் (இரானுக்கும் இராக்கிற்கும் இடையிலான ஆயுத மோதல் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு).

ஒரு சில நாடுகளின் பிரதிநிதிகள் நடந்து

கொள்ளும் முறைகளில் தொடர்ச்சியின்மையும் கூட்டுச் சேரா இயக்கத்தைப் பலவீனப்படுத்துகிறது. உதாரணமாய் கூட்டுச் சேரா இயக்கச் சந்திப்புகளிலும் ஐ.நா. சங்கப் பொதுச் சபை அமர்வுகள் உட்பட பல்வேறு சர்வதேச சந்திப்புகளிலும் இவர்கள் வெவ்வேறு நிலைகளை வகிக்கின்றனர்.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக் கொள்கையைக் கண்டித்த, ஜியோனிசத்தை நிறவெறியின் ஒரு வடிவமாகச் சித்தரித்துக் கண்டித்த தீர்மானங்களைத் தயாரித்து நிறைவேற்றியதில் கூட்டுச் சேரா இயக்கத்தின் பங்கை உயர்வாக மதிப்பிடும் அதே நேரத்தில், ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் 35வது அமர்வில் (1980), ஜியோனிசத்தை நிறவெறியின் ஒரு வடிவமாகக் கண்டிக்கும் தீர்மானத்திற்கு எதிராக 35 அரசுகள் வாக்களித்தன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, ஐவரி கோஸ்ட், லைபீரியா, மலாவி, ஒரு சில லத்தீன் அமெரிக்க நாடுகள் இவற்றில் அடங்கும். ஜாயிர், கென்யா, தோகோ, அப்பர் வோல்டா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், இன்னும் சில அரசுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

கேம்ப்-டேவிட் உடன்படிக்கையையும் எகிப்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான ஒப்பந்தத்தையும் கண்டிக்கும் பிரகடனம் கூட்டுச் சேரா அரசுகளின் ஹவானா மகாநாட்டில் ஒருமனதாக (எகிப்தைத் தவிர) ஏற்கப்பட்டது. ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் 34வது அமர்வில் பாலஸ்தீனப் பிரச்சினை குறித்த தீர்மானம்

வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது — இதில் கேம்ப்-டேவிட் உடன்படிக்கை செல்லாதது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது (29.11.79, தீர்மானம் 34/65)—எகிப்தைத் தவிர தோகோ மற்றும் ஜாயிர் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தன, ஐவரி கோஸ்ட், காமெரூன், மலாவி, சிங்கப்பூர், இன்னும் ஒரு சில நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

கூட்டுச் சேரா அரசுகளின் உயர் மட்ட மகா நாடுகளில் ஏற்கப்பட்ட பல திட்டவட்டமான தீர்மானங்கள் பல சந்தர்ப்பங்களில் ஆவணங் களில் திரும்பத் திரும்பக் கூறப்படுகின்றனவே தவிர, நடைமுறையில் நிறைவேற்றப்படவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். உதாரணமாக, இஸ்ரேலுக்கு எதிரான அரசியல் மற்றும் பொரு ளாதாரத் தடை நடவடிக்கைகள், தென்னாப்பி ரிக்க குடியரசின் முற்றுகை மற்றும் இதனுடன் இராஜதந்திர உறவுகளைத் துண்டித்து கொள்ளு தல், இந்து மகா சமுத்திரம் பற்றிய ஐ.நா. சங்கப் பிரகடனத்தை நிறைவேற்றுதல், நமீபியா ஆகிய வை சம்பந்தமான தீர்மானங்கள் ''என்றென்றும் ஏற்கப்படும்'' தீர்மானங்களாகவே உள்ளன. தீர் மானங்கள் திரும்பத் திரும்ப நிறைவேற்றப்படு வதானது, இயக்கத்தின் முடிவுகளில் தொடர்ச்சி யின்மையைக் காட்டவில்லை, மாறாக கூட்டுச் சேரா நாடுகள், மற்ற வளர்ச்சியுறும் நாடுகளின் உடனடிக் கோரிக்கைகளுக்கு ஏகாதிபத்தியம் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருவதற்குத் தான் இது சான்றாக உள்ளது என்பதைக் கூற வேண்டும்.

இறுதியாக, கூட்டுச் சேரா நாடுகளின், ஏன், பொதுவாக வளர்ச்சியுறும் நாடுகளின் ஒற்றுமையைப் பாதிக்கும் இன்னுமொரு புலப்பாட்டைப் பற்றி — தேசிய ஆயுதந்தரித்தலுக்காக மேன்மேலும் அதிகம் செலவிடப்படுவது குறித்து— குறிப்பிட வேண்டும். தேசிய சுதந்திரத்தை வலுப்படுத்தவும் சமூக, பொருளாதார, கலாச்சார வளர்ச்சிக்கும் மிக அவசியமான பொருளாயத, நிதி இருப்புகளின் பற்றாக்குறையில் இந்தப் புலப்பாடு வளர்ச்சியுறும் நாடுகளின் நிலைமையைக் கடுமையாகப் பாதிக்கிறது. 27 நாடுகளைச் சேர்ந்த அரசாங்க நிபுணர்கள் தரும் விவரங்களின்படி, உலக இராணுவச் செலவீனங்களில் வளர்ச்சியுறும் நாடுகளின் பங்கு 1955இல் 3.3 சதவிகிதத்திலிருந்து 1970இல் 7.2 சதவிகிதம் வரையும், 1980இல் 16.1 சதவிகிதம் வரையும் கூடியுள்ளது. குறிப்பாக இந்தச் செலவீடுகள் மத்தியக் கிழக்கு நாடுகளிலும்(1955இல் 0.6 சதவிகிதம், 1980 இல் 7.8 சதவிகிதம்), ஆப்பிரிக்க நாடுகளிலும் (1955இல் 0.1 சதவிகிதம், 1980இல் 1.7 சதவிகிதம்) விரைவாக அதிகரித்தன; 25 வளர்ச்சியுறும் நாடுகளில் அயல்நாட்டு லைசென்சுகளுக்கேற்ப தரைப்படை, மற்ற வகை ஆயுதங்களை உற்பத்தி செய்யும் இராணுவத் தொழிற்சாலைகள் கட்டப்பட்டுள்ளன. இந்தோனேசியா, நைஜீரியா, பாகிஸ்தான், இரான் ஆகிய நாடுகள் இவற்றில் குறிப்பிடத் தக்கவை.* பாகிஸ்தானில் பூமி

---

* யுனெஸ்கோ செய்தி, 1982, ஏப்ரல், பக்கங்கள் 25, 35 (ருஷ்ய மொழியில்).

யிலிருந்து பூமி நோக்கியும் வானிலிருந்து வான் நோக்கியும் செல்லும் ராக்கெட்டுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடும்படி, சாதாரணமாக, முற்போக்கு சமூக மாற்றப் பாதைகளுக்கு வந்துள்ள நாடுகளில் ஸ்திர நிலையைக் குலைக்க முற்படும் கூட்டுச்சேரா நாடுகளுக்குதான் (உதாரணமாக பாகிஸ்தான், சவூதி அரேபியா) ஆயுதப் போட்டி உரித்தானது. இவ்வாறு விரைவாக ஆயுதந்தரித்து வரும் நாடுகளின் சுதந்திரத்திற்கு முக்கிய அபாயம், யார் ஆயுதங்களையும் நிபுணர்களையும் ஆலோசகர்களையும் பயிற்சியாளர்களையும் இந்நாடுகளுக்கு அளிக்கின்றார்களோ அவர்களிடமிருந்து, அதாவது, கூட்டுச் சேரா இயக்கத்தைப் பலங்குன்ற வைத்து, இளம் அரசுகளைத் தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திலிருந்து விலக வைத்து, மற்ற வளர்ச்சியுறும் அரசுகளுடன் மோதச் செய்வது யாருக்கு ஆதாயமானதோ அவர்களிடமிருந்துதான் வருகிறது என்பது குறிப்பாகக் கவனிக்கப்பட வேண்டும்.

ஆனால் கூட்டுச் சேரா இயக்கம் தனது அடிப்படைக் கோட்பாடுகளை அப்படியே வைத்துள்ளது. விடுதலையடைந்த நாடுகளின் தேசிய அரசியல் மற்றும் பொருளாதார நலன்களுக்குப் பங்கமேற்படுத்தும் சக்திகளுக்கு எதிராகத் தொடர்ந்து தீவிரமாகப் போராடி வருகிறது, நம் சகாப்தத்தில் பலம் மிகு ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தியாக விளங்குகிறது என்பதை இயக்கத்தின் வரலாறு நிரூபிக்கிறது. மேலும் 70க்களின் இறுதியில் 80க்களின் துவக்கத்தில் சமாதானம், அணு

ஆயுதக் கலைப்பு ஆகியவற்றிற்கான போராட்டக் கடமைகளுக்கும் வளர்ச்சியுறும் நாடுகளின்—இவற்றில் மிகப் பெரும்பான்மையானவை கூட்டுச் சேரா இயக்கத்தில் பங்கேற்கின்றன—தேசிய, சமூக விடுதலைக் கடமைகளுக்கும் இடையிலான நெருக்கமான தொடர்பு மேன்மேலும் தெளிவாக வெளிப்பட்டது.

# அத்தியாயம் நான்கு

# எதிரிகளும் கூட்டாளிகளும்

## 1. அமெரிக்க ஐக்கிய நாட்டின் நிலை

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின், தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதும் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் முதலாளித்துவ வல்லரசுகளைச் சார்ந்திருப்பதை அப்படியே தக்க வைப்பதும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையின் முக்கியக் கடமைகளில் ஒன்றாக ஆகியது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இக் கடமை, திட்டவட்டமான சூழ்நிலைகளுக்கேற்ப, எதிரெதிரான இரண்டு சமூக அரசியல் அமைப்புகளின்—ஏகாதிபத்தியம் மற்றும் சோஷலிசத்தின்—சக்திகளின் சமன் நிலை மாறி வருவதற்கு ஏற்ப ''நவீனமயப்படுத்தப்பட்டது''. ஆனால் பல்வேறு வித (அரசியல், பொருளாதார, சித்தாந்த) நிர்ப்பந்தங்களைப் பயன்படுத்தி மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள், நாடுகளின் உள்விவகாரங்களில் நேரடியாகத் தலையிடுவது ஆகியவற்றின் உதவியால் இளம் அரசுகளை எப்படியாவது ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருக்குமாறு வைக்கும் நாட்டம் மட்டும் பொதுவான நீண்ட கால திட்டத்தின் மாற்றமில்லா அங்கமாக விளங்கியது. இராணுவ போர்த்தந்திரத் துறையில், மிக அதிக

அளவு இளம் அரசுகளை உட்படுத்தி, குறிப்பாக சோவியத் யூனியனுடனும் மற்ற சோஷலிச நாடுகளுடனும் பொது எல்லைகளை உடைய அல்லது இந்நாடுகளுக்கு வெகு அருகிலுள்ள அரசுகளை உட்படுத்தி இராணுவக் கூட்டுகளைத் தோற்றுவிப்பதன் மீது முக்கியக் கவனம் செலுத்தப்பட்டது. எனவே ஆக்கிரமிப்பு இராணுவக் கூட்டுகளில் விடுதலையடைந்த நாடுகள் சேர மறுத்ததை ஏகாதிபத்தியம் எச்சரிக்கையோடு மட்டுமின்றி பகைமையோடு எதிர்கொண்டது. ஆக்கிரமிப்புக் கூட்டுகளில் சேர மறுத்த அரசுகளின் பால் பல்வேறு வித நிர்ப்பந்தங்கள், அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் பயன்படுத்தப்பட்டன. 50க்களின் துவக்கத்தில் இந்தியா, பர்மா, இலங்கை, இந்தோனேசியா மீது, அதாவது கூட்டுச் சேரா இயக்க முன்னோடிகளாக இருந்து இதை உருவாக்குவதில் தீவிரப் பங்கேற்று பாண்டுங் மகாநாட்டையும் பின் முதல் (பெல்கிரேத்) மகாநாட்டையும் ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடத்திய நாடுகளுக்கு எதிராக ஏகாதிபத்திய வல்லரசுகள் இத்தகைய நிர்ப்பந்தத்தைப் பயன்படுத்தின.

50க்களில் சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடுகளுக்கு எதிராக அமெரிக்க ஐக்கிய நாடும் மேலைய நாடுகளும் ''கெடுபிடி யுத்தத்தைக்'' கட்டவிழ்த்து விட்ட போது ஒரு சில இளம் அரசுகள் ஏகாதிபத்திய செல்வாக்கு வட்டத்தினுள் இழுக்கப்பட்டன. இது மற்ற வளர்ச்சியுறும் நாடுகளின் பாதுகாப்பிற்கும் அரசுரிமைக்கும் பெரும் அபாயத்தை ஏற்படுத்தியது. கூட்டுச் சேராக் கொள்கை ஆதாரமற்றது, இதற்கு எதிர்

காலம் கிடையாது என்று அப்போது அமெரிக்க அரசுச் செயலராக இருந்த டால்லஸ் உருவாக்கிய ஆய்வுரை இந்த இளம் அரசுகளின் தலைமையைச் சித்தாந்த ரீதியாக மாற்றியமைப்பதில் கணிச மான பங்காற்றியது. பின்னால் இவர் கூட்டுச் சேராமை எனும் கருத்தமைப்பைப் பழைமை யாகிப் போன ஒன்று எனவும் ஒரு சில கருத்து நிலைகள் தவிர எஞ்சியவற்றை ஒழுக்கக் கேடான வை, குறுகிய பார்வையை உடையவை என்றும் கூட அறிவித்தார்.

கூட்டுச் சேரா இயக்கம் வளர்ந்து, உறுப்பு நாடுகளின் எண்ணிக்கைப் பெருகி, சர்வதேச அரங்கில் இயக்கத்தின் கௌரவமும் செல் வாக்கும் அதிகரித்த போது, வளர்ச்சியுறும் நாடு களின் மீது வெளிப்படையான நிர்ப்பந்தம் செலுத் தும் முந்தைய நடைமுறை உத்தி எடுபடாது என்பதை அமெரிக்கா உணர்ந்தது. 60க்களின் துவக்கத்தில் அமெரிக்கர்கள் கூட்டுச் சேரா இயக் கத்திற்கு வெளிப்படையாக விரோதமான அறிக் கைகளைக் கைவிட்டு புதிய நடைமுறை உத்திக்கு வந்தனர். 50க்களின் இறுதியிலேயே அமெரிக்க ஐக்கிய நாட்டில் பல்வேறு அரசாங்க மற்றும் தனிப்பட்ட ஆராய்ச்சி உறுப்புகள் ஆசிய, ஆப்பி ரிக்க நாடுகளில் முதலாளித்துவத்தின் நிலைகளைத் தக்க வைக்கும் பிரச்சினைகள் குறித்து ஆழ்ந்த ஆராய்ச்சிகளை நடத்தின, ஒரு காலத்திய அமெ ரிக்க அரசுச் செயலர் கிஸின்ஜெரின் சொற்படி இந்நாடுகளில் ''கம்யூனிசத்தின் கவர்ந்திழுக்கும் சக்திக்கும் நிர்ப்பந்தத்திற்கும்'' எதிர்ப்பு தெரி விக்க வல்ல நடவடிக்கைகளை உருவாக்கின. ஜனதி

பதி கென்னடி 1962ஆம் ஆண்டு தனது வேலைத் திட்ட சொற்பொழிவில் ''புதிய நிலைகள்'' மேற் கொண்டு, ''உலகைப் பற்றிப் பழமையாகிப் போன சில கருத்துக்களை'' மறுபரிசீலனை செய்ய வேண்டியதன் அவசியத்தைப் பற்றி அறிவித் தார்.

புதிய சூழ்நிலைகளில் பலத்தை அடிப்படை யாகக் கொண்ட கொள்கையின் வெற்றி மீது ஏகாதிபத்திய வல்லரசுகளால் நம்பிக்கை கொள்ள இயலவில்லை. ஆனால் ஏகாதிபத்தியம் தனது முந் தைய நோக்கங்களைக் கைவிட்டு விட்டது என்று இதற்குப் பொருள் அல்ல. விடுதலையடைந்த நாடு களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை முத லாளித்துவ பாதையில் செலுத்தும் கருத்து ''நவீன மயமாக்கப்பட்ட'' ஏகாதிபத்தியக் கொள்கை யின் அடிப்படையாக விளங்கியது. மற்ற முத லாளித்துவ வல்லரசுகளின் சக்திகள் மற்றும் சாத னங்களை ஈடுபடுத்தி, இந்த வல்லரசுகளை இளம் அரசுகள் சார்ந்திருப்பதைத் தக்க வைக்கவும் முடிந்தால் இச்சார்பு நிலையை அதிகப்படுத்தவும், செல்வாக்கு மண்டலங்களை மறுபகிர்வு செய்ய வும் முந்தையக் காலனியாதிக்க வல்லரசுகளின் நிலைகளைக் கொண்டு அமெரிக்காவின் நிலைகளைப் பலப்படுத்தவும் அமெரிக்க ஐக்கிய நாடு முன் போன்றே திட்டமிட்டு வந்தது. அமெரிக்க ஆத ரவுக் கொள்கையைக் கடைபிடிக்கும் பிற்போக்கு, சர்வாதிகார ஆட்சிக் கும்பல்களை வளர்ச்சியுறும் நாடுகளில் தோற்றுவிக்கவும் இவற்றிற்கு இன்னும் தீவிர ஆதரவளிக்கவும் திட்டமிடப்பட்டது. கூட்டுச் சேராக் கொள்கையைப் பொறுத்த மட்

டில் அமெரிக்க ஐக்கிய நாடு தன் நிலையை மாற்றிக் கொண்டது: கூட்டுச் சேராக் கொள்கையைத் தேர்ந்தெடுத்த நாடுகளின் நடுநிலைமையை அமெரிக்கா ''மதிக்கும்'' என்றும் சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாக்க வல்ல ஸ்திரமான, வலிமையான சமுதாயங்களை இந்நாடுகளில் தோற்றுவிக்க உதவும் என்றும் அன்றைய அமெரிக்க உதவி அரசுத் துறைச் செயலர் பௌல்ஸ் 1961ஆம் ஆண்டு ஏப்ரலில் அறிவித்தார். 1961ஆம் ஆண்டு 20 முதலாளித்துவ அரசுகள் வளர்ச்சிக்கு உதவி புரியும் கமிட்டி என்றழைக்கப்படும் ஒரு அமைப்பைத் தோற்றுவித்தன. மாறிய சூழ்நிலைகளில் இந்த ஸ்தாபனத்தின் உதவியால், தொழிற்துறை ரீதியாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளை விடுதலையடைந்த அரசுகள் சார்ந்திருப்பதைத் தக்க வைக்கவும் வாய்ப்பேற்படும் போது இச்சார்பு நிலையை அதிகப்படுத்தவும் நவீன காலனியாதிக்கக் கொள்கையை இன்னமும் மறைவாகப் பின்பற்றவும் இந்நாடுகள் திட்டமிட்டன.

இந்நடவடிக்கைகள் அனைத்தும் ஏகாதிபத்தியத்தின் உண்மை நோக்கங்களை மூடிமறைப்பதை நோக்கமாகக் கொண்டவை. கூட்டுச் சேராக் கொள்கையை உள்ளிருந்தே குலைத்து அதன் ஏகாதிபத்திய எதிர்ப்பு சாரத்தை அகற்றி, சோஷலிச நாடுகளுடன் கூட்டுச் சேரா அரசுகளுக்கு உள்ளத் தொடர்புகளைப் பலவீனப்படுத்த உதவும் சகலவித முறைகளையும் பயன்படுத்தி 60க்களிலேயே வளர்ச்சியுறும் நாடுகள் மீது பெரும் நிர்ப்பந்தம் செலுத்தப்பட்டது.

சோஷலிசத்திற்கு எதிரான சித்தாந்தப்

போராட்டத்தின் மீது ஏகாதிபத்தியம் பெரும் கவனம் செலுத்தத் துவங்கியது. முதலாளித்துவ உலகின் ''மேம்பாடுகளைப்'' பற்றிய விளம்பரம் அதிகமாயிற்று. முதலாளித்துவத்தின்''நாகரிகக்'' கடமையைப் பற்றியும் விடுதலையடைந்த நாடுகளில் ஏதோ துரிதரீதியிலான பொருளாதார வளர்ச்சிக்கு முதலாளித்துவத்தைப் புகுத்துவதன் அவசியம் மற்றும் விவேகத் தன்மையைப் பற்றியுமான கருத்து வலியுறுத்தப்படுகிறது.

நவீன காலனியாதிக்கத்தின் இம்முறைகளையும் வழிகளையும் அமெரிக்க ஐக்கிய நாடு அடிக்கடி நேரடி இராணுவ ஆக்கிரமிப்பால் மாற்றீடு செய்தது என்பதைக் குறிப்பிட வேண்டும். வளர்ச்சியுறும் நாடுகளின் விஷயத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் நீண்டகாலத் திட்டத்தில் பயங்கர நடவடிக்கைகள், இந்நாடுகளில் உள்ள முற்போக்கு ஆட்சிகளின் ஸ்திர நிலையைக் குலைத்தல் மற்றும் கூட்டுச் சேரா இயக்கத்தில் பிளவேற்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட கொள்கை அப்படியே உள்ளது என்பதை இது ஊர்ஜிதப் படுத்தியது. 1964ஆம் ஆண்டு ஆகஸ்டில் வியட்நாம் ஜனநாயகக் குடியரசை அமெரிக்கா தாக்கியது, கம்போடியாவிற்கு எதிரான ஆயுத நடவடிக்கைகளை அதிகப்படுத்தியது. ஆப்பிரிக்காவிலிருந்த போர்த்துகலின் காலனிகளில் தேசிய விடுதலை இயக்கங்களை ஒடுக்குவதற்காக அமெரிக்கா போர்த்துகலுக்குப் பேருதவி செய்தது. 1965ஆம் ஆண்டு ஏப்ரலில் டொமினிகன் குடியரசிற்கு எதிராக அமெரிக்கா ஆயுத ஆக்கிரமிப்பில் ஈடுபட்டது. 1966ஆம் ஆண்டின் மத்தியில் அமெரிக்க

நிர்வாகம் ''ஜான்சன் ஆசிய கோட்பாட்டைப்'' பிரகடனம் செய்தது. ஆசியாவில் தேசிய விடுதலை இயக்கத்தை ஒடுக்குவதே இதன் உண்மை நோக்கம். அமெரிக்க ஐக்கிய நாட்டின் மத்திய ஒற்றுடல் ஸ்தாபனம் (சி.ஐ.ஏ.) வளர்ச்சியுறும் நாடுகளின் உள்விவகாரங்களில் தலையீட்டை அதிகப்படுத்தியது.

அமெரிக்க நீண்டகாலத் திட்டங்களின் படி, வியட்நாம் யுத்தம் இளம் அரசுகளுக்குப் பாடம் கற்பித்தாக வேண்டும், அமெரிக்காவிடம் புகலிடம் கோருவதைத் தவிர வேறு ஒரு வழி வளர்ச்சியுறும் நாடுகளுக்கு இல்லையென்று இவை உணரும்படி கட்டாயப்படுத்த வேண்டும், இந்நாடுகள் ஏகாதிபத்திய கொள்கையைப் பின்பற்றி நடக்குமாறு செய்ய வேண்டும். ஆனால் அமெரிக்காவின் பெரும் இராணுவ மற்றும் பொருளாதார உதவி, ஆட்சியில் நிலைத்திருக்க பிற்போக்கு சைகோன் பொம்மை ஆட்சிக் கும்பலுக்கு உதவவில்லை. பரவலான வெகுஜன மக்கள் திரளினரின் ஆதரவு இருந்து, சோஷலிச நாடுகள் பன்முக உதவி நல்கினால் விடுதலை மற்றும் சுதந்திரத்திற்கான போராட்டத்தில் முற்போக்குச் சக்திகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தைக் கூட முறியடித்து வெற்றி வாகை சூட வல்லவை என்பதை வியட்நாம் யுத்தம் காட்டியது.

கூட்டுச் சேரா இயக்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பு, காலனியாதிக்க எதிர்ப்புச் சாரத்தை மழுங்கடிப்பதை ஒரு நோக்கமாகக் கொண்ட நவீன காலனியாதிக்கத்தின் நீண்ட காலத் திட்டத்தில் முன் போன்றே பொருளாதார அம்சங்களின்

மீது பெரும் கவனம் செலுத்தப்பட்டது. பொரு ளாதார சுதந்திரத்தை அடைய கூட்டுச் சேரா நாடுகள் கொண்டுள்ள நாட்டத்திற்கு வெளிப் படையாக எதிர்ப்பு தெரிவிப்பது பிரயோஜனப்ப டாது என்பதைப் புரிந்து கொண்ட நவீன காலனி யாதிக்கவாதிகள், இந்நாடுகளை வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் வாலாக வைத்திருப் பது எனும் தமது முக்கிய நோக்கத்தை நிறை வேற்றுவதற்காக சுற்று வழிகளைத் தேட ஆரம் பித்தனர்.

உதாரணமாக, எகிப்திற்கு அமெரிக்கா அளித்த பொருளாதார உதவி, இந்நாடு அமெரிக் காவைச் சார்ந்திருக்குமாறு செய்வதை முற்றிலும் வெளிப்படையான நோக்கமாகக் கொண்டிருந் தது; 1963ஆம் ஆண்டு பிப்ரவரியில் இலங்கை நாட்டிலிருந்த அமெரிக்க எண்ணெய் கம்பெனி களாகிய ''கால்டெக்ஸ்'', ''எஸ்ஸோ'' மற்றும் பிரிட்டிஷ்-ஹாலந்து கார்ப்பரேஷனுகிய ''ஷெல்'' ஆகியவற்றை தேசிய உடமையாக்குவது என்ற அரசாங்கத்தின் முடிவிற்குப் பதிலளிக்கும் முக மாக, அமெரிக்க கம்பெனிகளுக்கு நஷ்ட ஈடு தருமாறு அமெரிக்க ஐக்கிய நாடு கெடு அளித்து கோரிக்கை விடுத்தது. பல வளர்ச்சியுறும் நாடு களில் மேலைய ஏகபோகங்கள் நீண்டகாலமாக இயங்கி வந்த போது இவற்றின் உழைப்பையும் இயற்கைச் செல்வங்களையும் ஈவிரக்கமின்றிச் சுரண்டி ஏராளமான லாபத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளன என்பதைக் காரணங்காட்டி இந்த ஏகபோகங்களின் சொத்துக்களை எவ்வித நஷ்ட ஈடுமின்றி தேசிய உடமையாக்க இந்த வளர்ச்சி

யுறும் நாடுகள் விரும்பின என்பது தெரிந்ததே.

60க்களின் இறுதியில் வியட்நாமில் அமெரிக்காவின் தோல்வி தெட்டத் தெளிவான போது உலகில் நிலவரம் மாறியுள்ள ஒரு சூழ்நிலையில், சோஷலிச நாடுகளுடன், முதலாவதாக சோவியத் யூனியனுடனுன உறவுகள் உட்பட தனது வெளி நாட்டுக் கொள்கையின் சகல அம்சங்களையும் மறு பரிசீலனை செய்யும் ஒரு அவசியம், மேற்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஜப்பானுடன் உள்ள ''கூட்டுப் பங்கான்மையின்'' நிபந்தனைகளை மறு பரிசீலனை செய்யும் ஒரு அவசியம், நிச்சயமாக, கூட்டுச் சேரா அரசுகளுடன் புதிய உறவு முறைகளை உருவாக்கும் அவசியம் அமெரிக்க ஐக்கிய நாட்டு நிர்வாகத்தின் முன் தோன்றியது. அப்போது நிக்ஸன் தலைமையிலிருந்த அமெரிக்க நிர்வாகம் வளர்ச்சியுறும் நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிலைகளைத் தக்க வைத்து வலுப்படுத்தும் பொருட்டு, முற்றிலும் பிரச்சார நோக்கங்களுக்காக, ''உலகத் தகராறுகளில்அமெரிக்கா ஈடுபடுவதைத் தவிர்க்கும்'' தமது சித்தத்தை வெளிப்படுத்தியது. வளர்ச்சியுறும் நாடுகளின் பாலான இந்தப் ''புதிய அணுகுமுறை'' ''நிக்ஸன் கோட்பாடு''[30] என்றழைக்கப்படுவதில் மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கிறது. இது ''கூட்டுப் பங்கான்மைக்'' கோட்பாட்டையும் ''சொந்தச் சக்திகளின் மீதான ஆதாரங்கள்'' எனும் கோட்பாட்டையும் அமெரிக்க ஐக்கிய நாட்டு வெளி விவகாரக் கொள்கையின் அடிப்படையாக ஆரவாரமாகப் பிரகடனம் செய்தது.*

---

* *United States Foreign Policy for the 1970's. Buil-*

''கூட்டுப் பங்காண்மை'' என்றால் முதலாவதாக, தமது சொந்த சக்திகள், சாதனங்களைக் கொண்டு வளர்ச்சியுறும் நாடுகள் அமெரிக்க ஆதரவுக் கொள்கையைக் கடைபிடிக்குமாறு செய்வதற்காக இந்நாடுகளின் மீதான பொருளாதார, அரசியல், இராணுவ நிர்பந்தத்தை அதிகரிக்கும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்று பொருள்.

''நிக்ஸன் கோட்பாட்டிற்கு'' ஏற்ப, இந்தப் பிரதேசங்களிலிருந்து வெளியேற அமெரிக்க ஐக்கிய நாடு தயார் என்று அமெரிக்காவின் இந்த நடைமுறை உத்திக்குப் பொருள் இல்லை. அரசியல் ரீதியாக, குறிப்பாகப் பொருளாதார ரீதியாகச் சார்பான ஆட்சிகளைப் பயன்படுத்தியும் வளர்ச்சியுறும் நாடுகளை ஏகாதிபத்திய வல்லரசுகளோடு ''கட்டிப்போடுவதன்'' மூலமும் இன்னும் இது போன்ற பிற வழிகளிலும் உலக நிலவரத்தைத் தனக்குச் சாதகமாக மாற்ற அமெரிக்கா திட்டமிட்டது. அமெரிக்காவின் இந்த நடைமுறை உத்தி, கூட்டுச் சேரா இயக்கத்திலிருந்த ஒரு சில நாடுகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. இயக்க சந்திப்புகளில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளை சில இளம் அரசுகளின் நிலைகளில் தெளிவாகப் பார்க்கலாம்.

70க்களின் இறுதியில் உலக நிலவரம் கடுமை

---

*ding for Peace. A Report by President Nixon to the Congress, February 25, 1971*, Washington, 1971, pp. 5, 6.

யாகச் சீர்கேடடைந்தது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவச் செலவுகள் இதுவரையில்லா அளவுகளை எட்டின, ''மட்டான'', ''இழுபறி'', மற்ற வகை அணு ஆயுத யுத்தங்களை நடத்தும் வாய்ப்புகளை நியாயப்படுத்த முயன்ற அமெரிக்க நிர்வாகம் சோஷலிச முகாமை விட இராணுவ மேன்மையை அடையப் பாடுபட முடிவெடுத்தது. வளர்ச்சியுறும் நாடுகளின் விஷயத்தில் தம் கொள்கையைப் பெரிதும் கடுமையாக்கியதும் பதட்ட நிலை மற்றும் வளர்ச்சியுறும் நாடுகளிடையே சச்சரவுகளை மூட்டி விடுவதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியதும் சர்வதேச அரங்கில் அமெரிக்க நீண்டகாலத் திட்டங்களின் அங்கமாக ஆயின. வாஷிங்டனிற்கு ஏற்பில்லாத ஆட்சிகளைக் கவிழ்த்தல், அமெரிக்காவிலிருந்து வெகு தொலைவில் இராணுவ நடமாட்டத்தை அதிகப்படுத்தல், அமெரிக்க ''துரிதத் தாக்குதல்'' படைகளை உருவாக்குதல், அவற்றை வளர்ச்சியுறும் நாடுகளில் கொண்டு போய் வைத்தல், இந்நாடுகளில் இராணுவத் தளங்களை உருவாக்கி விரிவுபடுத்துதல்—இவை யாவும் கூட்டுச் சேரா நாடுகளுக்கும் மொத்தத்தில் உலக நாடுகளுக்கும் பெரும் அபாயத்தை ஏற்படுத்தும் நடைமுறை நடவடிக்கைகளில் ஒரு சில ஆகும்.

அமெரிக்க ஐக்கிய நாடு மொத்தமாக வளர்ச்சியுறும் நாடுகள் மீது, குறிப்பாகக் கூட்டுச் சேரா நாடுகள் மீது தாக்குதல் தொடுத்து வருகிறது. அரசியல் துறையை எடுத்துக் கொண்டால், சச்சரவு மண்டலங்களில் தலையிட்டு இங்கே தமது

இராணுவ நடமாட்டத்தை அதிகப்படுத்தவும் தேசிய விடுதலை இயக்கங்களை ஒடுக்கவும் முற்போக்கு சமூகப் பொருளாதார மாற்றங்களைச் சீர்குலைக்கவும் பிரதேச மற்றும் இருதரப்பு சச்சரவுகளை மூட்டிவிடும் நடைமுறை உத்தி தீவிரமாகக் கடைபிடிக்கப்படுகிறது. கூட்டுச் சேரா நாடுகள் ஆயுதப் போட்டியில் இழுக்கப்படுவது இந்நாடுகளின் பட்ஜெட் மீது தாங்க இயலா சுமையாக விழுகிறது. மேலும் இது அண்டை நாடுகளிடையே சந்தேகங்களை ஏற்படுத்துவதால் அவையும் இறுதியாக ஆயுதப் போட்டிக்குள் விழுகின்றன, ஆயுத உற்பத்தியாளர்களை — மேலைய ஏகாதிபத்திய வல்லரசுகளை, முதலாவதாக அமெரிக்க ஐக்கிய நாட்டைப் பொருளாதார ரீதியாக, எனவே அரசியல் ரீதியாகச் சார்ந்திருக்க நிச்சயமாகத் துவங்குகின்றன.

அமெரிக்கா உலகின் பல பிரதேசங்களிலும் தனது இராணுவ போர்த்தந்திர மையங்களை விரிவுபடுத்துகிறது, கூட்டுச் சேரா நாடுகள் சிலவற்றின் (சோமாலி, ஓமான், மொரோக்கோ, எகிப்து, கென்யா) இராணுவத் தளங்களை அமெரிக்க இராணுவம் பயன்படுத்த அனுமதிக்குமாறு இவற்றின் அரசாங்கங்களைக் கோரி வருகிறது.

1983ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதி தோற்றுவிக்கப்பட்ட ''மத்தியப் படைத் தலைமையகம்'' **(சென்ட்கோம்)** என்றழைக்கப்படுவது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் புதிய இராணுவவெறி நடவடிக்கையாக அமைந்தது. இந்தப் புதிய அமைப்பின் செல்வாக்கு வட்டம் ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் உள்ள 19 கூட்டுச் சேரா நாடுகள்,

இந்து மகா சமுத்திரத்தின் கணிசமான பகுதி, பாரசீக வளைகுடா ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. ''துரிதத் தாக்குதல் படைகளும்'' டியகோ-கார்சியா தீவு, ஓமான், சோமாலி, கென்யா, மற்ற சில அரசுகளில் உள்ள இராணுவத் தளங்களும் இந்த ''மத்தியப் படைத் தலைமையகத்தின்'' பொறுப்பில் விடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் படைத் தலைமையகத்தின் சக்திகள் இப்பிரதேசத்தில் உள்ள அரசுகளுக்கு எதிராக எந்தத் தருணத்திலும் இராணுவ நடவடிக்கைகளைத் துவக்கத் தயார்.

ஒரு சில கூட்டுச் சேரா நாடுகளில் ஆட்சியில் உள்ள பழமைவாத ஆட்சிக் கும்பல்களின் மூலம், ஆறுவது, ஏழாவது மகாநாடுகளின் தயாரிப்புப் பணிகளின் போதும் மகாநாடுகளிலும் கியூபா, வியட்நாம் மற்றும் கூட்டுச் சேரா இயக்கத்தில் உள்ள இன்னும் சில சோஷலிச நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கைக்கு இழுக்கேற்படுத்த அமெரிக்க ஏகாதிப்த்தியம் முயன்றது.

ஏழாவது மகாநாடு காலவரையின்றி ஒத்திப் போடப்படவில்லையென்று — இதை பாக்தாதில் நடத்துவதென முன்னர் முடிவு செய்யப்பட்டிருந்தது—மேலைய வல்லரசுகள் அதிருப்தி அடைந்தன. பின்னர் மகாநாட்டிற்கான தயாரிப்புப் பணிகளின் போது மகாநாடு இரண்டாம் பட்சப் பிரச்சினைகளின் விவாதத்தில் ''சிக்குமாறு'' செய்து இதன் மூலம் இயக்கத்தை உள்ளிருந்தே சீர்குலைக்கவும் இதன் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையைப் பலவீனப்படுத்தவும் ஏகாதிபத்தியவாதிகள் முயன்றனர்.

ஏகாதிபத்திய அரசுகளின் சூழ்ச்சிகளை முறியடித்து ஹவாஞ மற்றும் டெல்லி மகாநாடுகள் வெற்றிகரமாக நடந்தன; சமாதானம் மற்றும் மக்களின் பாதுகாப்பு, ஆயுதப் போட்டியைத் தடுத்து நிறுத்துதல், ஆயுதக் கலைப்பிற்கு மாறிச் செல்லுதல், நியாயமான, ஜனநாயக அடிப்படைகளில் சர்வதேசப் பொருளாதார உறவுகளை மாற்றியமைத்தல், முழு, சர்வபொது காலனி தன்மையை அகற்றுதல் ஆகியவற்றிற்காகப் போராட வளர்ச்சியுறும் அரசுகள் கொண்டுள்ள நாட்டத்தை இவை வெளிப்படுத்தின.

இஸ்ரேலுக்கு அமெரிக்கா அளிக்கும் ஆதரவும் உதவியும்தான் அரபு மக்களுக்கு எதிராக இஸ்ரேல் தனது விஸ்தரிப்புத் திட்டங்களை நிறைவேற்றவும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடவும் குற்றங்களைப் புரியவும் வாய்ப்பளிக்கிறது என்று டெல்லி மகாநாட்டினர் நியாயமாகக் குறிப்பிட்டனர். தென்னுப்பிரிக்கக் குடியரசின் நிறவெறி ஆட்சிக் கும்பலுக்கு அமெரிக்கா அளிக்கும் ஆதரவு வன்மையாகக் கண்டிக்கப்பட்டது.

மத்திய அமெரிக்காவில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவத் தலையீட்டு அபாயம் பற்றி டெல்லி மகாநாட்டில் லத்தீன் அமெரிக்க அரசுகளின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். கியூபா மற்றும் நிக்கராகுவாவிற்கு எதிரான வாஷிங்டனின் சீர்குலைவு நடவடிக்கைகள், பிற்போக்குச் சர்வாதிகார ஆட்சிக் கும்பலுக்கு எதிராகப் போராடி வரும் சால்வடோரின் உள்விவகாரங்களில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் முறைகேடான

தலையீடு ஆகியவற்றிற்கான மறுக்க இயலா நிரூபணங்களை இவர்கள் முன்வைத்தனர்.

மேலைய நாடுகளுடன் கூட்டுச் சேரா நாடுகளுக்கு உள்ள பொருளாதார உறவுகள் பற்றியப் பிரச்சினைகளை விவாதித்த மகாநாட்டினர், முன் போன்றே, ஆனால் முன்னை விட அதிகக் கடுமையோடு, அரசியல் நிர்ப்பந்தம் மற்றும் சுயமான அரசுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கான வழிகளாக முதலாளித்துவ வல்லரசுகள் கடைபிடிக்கும் வர்த்தகத் தடை நடவடிக்கைகள், முற்றுகை, மற்ற கட்டாய நடவடிக்கைகள், அச்சுறுத்தல் ஆகியவற்றைக் கண்டித்தனர். மூலப்பொருள், எரிசக்தி, வர்த்தகம், பொருளாதார வளர்ச்சி, நிதி ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய சர்வதேசப் பொருளாதார முறையின் அடிப்படைப் பிரச்சினைகள் சம்பந்தமான உலகளாவியப் பேச்சுவார்த்தைகளை நடத்துவது குறித்த ஐ.நா. சங்கத் தீர்மானங்களைச் சீர்குலைக்க மேலைய நாடுகள், முதலாவதாக அமெரிக்கா செய்யும் முயற்சிகளை டெல்லி மகாநாடு கண்டித்தது.

டெல்லி மகாநாட்டில் உரையாற்றுங்காலை பி. காஸ்ட்ரோ பின்வருமாறு கூறினார்: இயக்க உறுப்பு நாடுகளின் 1979ஆம் ஆண்டு சந்திப்பின் போதே நிலவிய யுத்த அபாயம், சோவியத் யூனியனை விட அமெரிக்க ஐக்கிய நாடும், வார்சா ஒப்பந்த ஸ்தாபனத்தை விட நேட்டோவும் இராணுவ மேன்மை பெற வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ரீகன் முடிவு செய்த போது பெரிதும் அதிகரித்தது (1980இல் அமெரிக்க

இராணுவச் செலவுகள் 142.7 பில்லியன் டாலர்களாக இருந்தன என்ருல் 1984இல் இவை 280 பில்லியன் டாலர்களாக உயர்ந்தன). காஸ்ட்ரோவின் கருத்துப்படி இப்படிப்பட்டதொரு பெரும் ஆயுதப் போட்டி நேரடியாக வளர்ச்சியுறும் நாடுகளின் பாதுகாப்பிற்கு எதிரானது.

ஆப்பிரிக்காவின் தெற்கில் உள்ள நிலவரத்தின் மீது மகாநாட்டில் பெரும் கவனம் செலுத்தப் பட்டது. உதாரணமாக, அங்கோல மக்கள் குடியரசின் ஜனுதிபதி ஜோசே எட்வார்டு துஷ் சான் துஷ், தொடர்புக் குழு[31] என்றழைக்கப்படும் குழுவின் ஒரு சில உறுப்பு நாடுகள், 1979ஆம் ஆண்டிலேயே அங்கோலாவிற்குள் நுழைந்த தென்னுப்பிரிக்கப் படைகளை உடனடியாக, நிபந்தனையின்றி வெளியேற்றத் துணைபுரிவதற்குப் பதிலாக பேச்சுவார்த்தைகளில் இழுபறிக் கொள்கையைக் கடைபிடித்தும் ராஜதந்திர நடவடிக்கைகள் மற்றும் நிர்ப்பந்தத்தின் மூலமும் இப்பிரச்சினையின் தீர்விலிருந்து உலகப் பொதுமக்களின் கவனத்தைத் திருப்ப முயலுகின்றன என்று அறிவித்தார். நமீபியாவிற்கு சுதந்திரம் அளிப்பதை, தம் சர்வதேசக் கடமையை நிறைவேற்றிக் கொண்டிருந்த கியூபா நாட்டுப் படைகள் அங்கோலாவிலிருந்து வெளியேறுவதுடன் தொடர்புபடுத்தி இதை நிபந்தனையாக்க அமெரிக்கா முற்படுகிறது. ஆனுல் நமீபியாவில் உள்ள காலனியாதிக்க ஆட்சியை அகற்றும் பிரச்சினை மீதான ஐ.நா. சங்கப் பாதுகாப்புக் கவுன்சிலின் தீர்மானத்தில் (No. 435) இப்படிப்பட்டதொரு நிபந்தனை குறித்து ஒரு

வார்த்தை கூடக் குறிப்பிடப்படவில்லை என்பது தெரிந்ததே.

நமீபியாவிற்குச் சுதந்திரம் அளிப்பதை கியூபா நாட்டுப் படைகள் வெளியேறுவதுடன் ''இணைக்கச்'' செய்யப்பட்ட முயற்சி பல சர்வ தேச சந்திப்புகளில் கண்டிக்கப்பட்டது. ஏனெனில், அந்நாட்டில் கியூபா நாட்டுப் படைகள் இருப்பது (அங்கோலாவின் சட்டபூர்வமான அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க) ஐ.நா. சங்க விதிமுறைகளுக்கோ அல்லது இந்தச் சர்வ தேச ஸ்தாபனத்தின் கோட்பாடுகள் மற்றும் லட்சியங்களுக்கோ சிறிது கூட முரண்பாடாக இல்லை. இவ்வாறு ''இணைக்கச்'' செய்யப்படும் முயற்சி அங்கோல மக்கள் குடியரசின் உள்விவகாரங்களில் தலையிடுவதேயன்றி வேறில்லையென டெல்லி மகாநாட்டு அரசியல் பிரகடனத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. கூட்டுச் சேரா நாடுகள் தமது ஆவணங்களில், அங்கோலாவிலிருந்து தென்னுப்பிரிக்கப் படைகள் உடனடியாக, நிபந்தனையின்றி வெளியேற வேண்டுமெனக் கோரின, அங்கோலா, மொசாம்பிக், ஜாம்பியா, ஜிம்பாபுவே, போட்சுவாஞ, லிஸ்ஸாத்தோ, சுவாஸிலாந்து, சேய்ஷேல் தீவுகள் போன்ற அரசுகளுக்கு எதிராக தென்னுப்பிரிக்க நிறவெறி ஆட்சி கடைபிடிக்கும் இராணுவ, அரசியல், பொருளாதார ஸ்திரக் குலேப்பைக் கடுமையாகக் கண்டித்தன.

கூட்டுச்சேரா அரசுகளின் தீர்மானங்களுக்குப் பதில் தரும் முகமாக 1984ஆம் ஆண்டு துவக்கத்தில் தென்னுப்பிரிக்க நிறவெறி ஆட்சி ஏகாதிபத்திய அரசுகளின் மறைமுகமான ஆதரவோடு அங்

கோலாவிற்கு எதிராகப் புதிய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இறங்கி நாட்டினுள் 300 கி.மீ. தூரம் வரை உட்புகுந்தது. பயங்கரவாதத்தை அரசுக் கொள்கையாக மாற்றியுள்ள தென்னுப்பிரிக்கக் குடியரசு அமெரிக்க ஐக்கிய நாட்டின் உதவியோடு நீண்ட காலமாகவே மக்கள் அங்கோலாவிற்கு எதிராகப் பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

டெல்லியில் நடைபெற்ற கூட்டுச் சேரா மகாநாட்டின் முழு அமர்வுகளில் ஏமன் மக்கள் ஜனநாயகக் குடியரசு தீவிரப் பங்கேற்றது. உதாரணமாக, உயர் மட்ட மக்கள் கவுன்சிலின் தலைமை குழுத் தலைவரும் ஏமன் நாட்டு பிரதமருமான அலி நாசர் முகமது, பதட்ட நிலையின் புதிய பிறப்பிடங்களின் தோற்றமானது, நிலவரத்தைத் தனக்குச் சாதகமாக மாற்றவும் சுதந்திர நாடுகளை அடிமைப்படுத்தவும் தேசிய விடுதலை இயக்கங்களை ஒடுக்கவும் உலகில் முழு ஏகாதிபத்திய ஆதிக்கத்தை நிலைநாட்டவும் அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்து வரும் முயற்சிகளின் நேரடி விளைவு என்று குறிப்பிட்டார். ''மத்தியப் படைத் தலைமையகம்'' (சென்ட்கோம்) கலைக்கப்பட வேண்டுமென அவர் கோரினார்.

டெல்லியில் நடைபெற்ற உயர் மட்ட சந்திப்பின் முடிவுகளை அமெரிக்க நிர்வாகம் எப்படி மதிப்பிடுகிறது? ''கூட்டுச் சேரா இயக்கத்தின் பிரகடனம்—பெரிதும் சரிசமநிலையற்ற, விவாத ஆவணம்'' என்று அமெரிக்க அரசுத் துறை இலாகா கருத்துரைத்தது. ''அமெரிக்க ஐக்கிய நாட்டின் பாலான நியாயமற்ற தாக்குதல்கள்...

இந்தப் பிரகடனத்தின் மீதான நம்பிக்கையைக் குலேக்கின்றன''* என்று தொடருகிறது அது. ஏழாவது மகாநாட்டின் முடிவுகளேப் பற்றி அமெரிக்க ஐக்கிய நாட்டில் நிலவும் பெரிதும் எதிர்மறையான கருத்து, கூட்டுச் சேரா இயக்க விரோதிகளால் இயக்கத்தைப் பிளவுபடுத்த முடியவில்லே, அடிப்படைக் கோட்பாடுகளின் மீதான விசுவாசத்தைக் குலேக்க இயலவில்லே, இன்றைய உலகின் மிக முக்கியப் பிரச்சினேகளின் மீதான விவாதத்திலிருந்து கவனத்தைத் திசை திருப்ப முடியவில்லே என்பதைக் காட்டுகிறது. பொய், உண்மைகளேத் திரித்துக் கூறுதல், நடைபெற்ற மகாநாட்டைப் பற்றி ஏகாதிபத்தியத்திற்கு ஆதாயமில்லாத விவரங்களேக் குறித்து மௌனம் சாதித்தல் — இவைதான் மேலேய செய்தி ஒலிபரப்பு சாதனங்கள் பயன்படுத்திய ஒரு சில முறைகளாகும். அமெரிக்க ஜனதிபதி ரீகன் நடந்து கொண்ட முறைக்கு ஈடு இணேயே இல்லே. மிக முக்கியப் பிரச்சினேகள்—கூட்டுச் சேரா நாடுகளுக்கு எதிரான ஏகாதிபத்திய, நவீன காலனியாதிக்க நடவடிக்கைகளே எப்படி எதிர்த்து சமாளிப்பது என்ற பிரச்சினே—விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்த மகாநாட்டின் நான்காவது நாளன்று, மத்திய அமெரிக்கா மற்றும் கரிபியக் கடல் பிரதேச நாடுகளேச் சேர்ந்த மகாநாட்டுப் பிரதிநிதிகளே ரீகன் நேரடியாக அச்சுறுத்திஞர்.

டெல்லி மகாநாடு மற்றும் இதன் முடிவுகளின் மீதான அமெரிக்க ஐக்கிய நாட்டின் கருத்து,

---

* *Times of India*, March 16, 1983.

வளர்ச்சியுறும் நாடுகளின் பால் ரீகன் நிர்வாகத்திற்கு உள்ள உண்மையான உறவை நன்கு பிரதிபலித்தது. இந்தியா அமெரிக்க ஐக்கிய நாட்டின் வெளிப்படையான நிர்பந்தத்திற்கு உள்ளானது. சில பாரம்பரியமான இந்தியப் பொருட்களை, உதாரணமாக துணிகளை, வாங்க அமெரிக்கா மறுத்தது; ஆசிய வளர்ச்சி வங்கியின்[32] கடன் இந்தியாவிற்கு மறுக்கப்பட்டது. இந்த வங்கியில் அமெரிக்க நிதி முதலைகள் செல்வாக்குள்ள பங்காற்றுகின்றனர். இந்தியாவின் ஒரு சில பிரதேசங்கள் (உதாரணமாக ஜம்மு காஷ்மிர் மாநிலப் பிரதேசம்) அதற்குச் சொந்தமில்லாததைப் போல் சித்தரிக்கும் வரைபடங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் தோன்றின. டெல்லி மகாநாட்டிற்குப் பின் அமெரிக்க ஏகாதிபத்தியம் பாகிஸ்தானிற்கு அளித்து வரும் இராணுவ உதவியைக் கிட்டத்தட்ட இரு மடங்காக்கியது. ''மத்தியப் படைத் தலைமையகத்தின்'' பொறுப்பில் உள்ள எல்லா பிரிவுகளின் அங்கமாக விளங்கும் ''துரிதத் தாக்குதல் படைகளின்'' நடவடிக்கைகளை ஒத்திசையச் செய்வதற்காகப் பாகிஸ்தான் நிலப்பரப்பில் இராணுவத் தளங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

அமெரிக்காவின் இந்நடவடிக்கைகள் அதன் நீண்ட காலத் திட்டங்களின் ஒரு பகுதி மட்டுமே என்பதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும். இதன்படி உலகின் மிகப் பெரும் பிரதேசங்கள் ''அமெரிக்க மண்டலங்கள்'' அல்லது அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு ''ஜீவாதார முக்கியத்துவமுடைய மண்டலங்கள்'' என்று ரீகன் நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளன. நிக்கரா

குவா ''நடவடிக்கை'', லெபனனில் இழைக்கப் படும் இரத்தக் களறியான குற்றங்கள், தென்னுப் பிரிக்க நிறவெறியாளர்களுக்கு அளிக்கப்படும் ஆதரவு, இந்து மகா சமுத்திரத்தை இராணுவ மயமாக்குதல், இந்து மகா சமுத்திரத்தை அமைதி மண்டலமாக்க வேண்டும் என்ற கூட்டுச் சேரா இயக்க, ஐ.நா. சங்கத் தீர்மானங்களுக்கு வேட்டு வைப்பது—இவையனைத்தும் மேற்கூறிய நீண்ட காலத் திட்டத்தின் ஒரு சில விளைவுகளாகும். ''குண்டாந்தடிக் கொள்கை'' என்பது அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு ஒன்றும் புதிதல்ல. ஆனல் கூட்டுச் சேரா இயக்கத்தின் கடைசித் தீர்மானங் களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, கோடிக் கணக்கான மக்களின் வாழ்வுப் பிரச்சினை மட்டு மின்றி மொத்தத்தில் மனிதகுலத்தின் வாழ்க் கையே கேள்விக் குறியாக உள்ள ஒரு புதிய வரலாற்றுச் சூழ்நிலையில் இந்தக் கொள்கை கடை பிடிக்கப்பட்டு வருவதில்தான் இன்று இதன் அபாயமே அடங்கியுள்ளது.

பொருளாதாரத் துறையில் கூட்டுச் சேரா நாடுகள், எல்லா வளர்ச்சியுறும் நாடுகளின் மீது நிர்ப்பந்தம் செலுத்த ஏகாதிபத்தியத்திற்குப் பல்தேசியக் கார்ப்பரேஷன்கள் பலம் வாய்ந்த கருவிகளாக விளங்குகின்றன. இக்கார்ப்பரேஷன் களின் ஒட்டுண்ணித்தனமான, சுயநல நடவடிக்கை கள் வளர்ச்சியுறும் நாடுகளின் பொருளா தாரத்திற்குப் பேரிழப்பை ஏற்படுத்துகின்றன.

சித்தாந்தத் துறையில் கூட்டுச் சேரா இயக் கத்தின் காலனியாதிக்க எதிர்ப்புப் போக்கு, தேசிய சுதந்திரத்திற்கான இதன் போராட்டம், தேசிய

விடுதலை இயக்கங்களுக்கு இது அளிக்கும் ஆதரவு ஆகியவற்றைக் குலைக்க அமெரிக்க ஐக்கிய நாடு முயலுகிறது. இன்றைய உலகத்தின் தேசிய விடுதலை இயக்கத்தையும் விடுதலை மற்றும் சுதந்திரத்திற்கான மக்களினங்களின் போராட்டத்தையும் அமெரிக்கப் பிரச்சாரம் நம்ப முடியாத அளவு ஏளனத்துடன் ''சர்வதேச வன்முறையுடன்'' சமப்படுத்துகிறது.

டெல்லி மகாநாட்டினருக்கு அனுப்பிய செய்தியில், அமெரிக்க ஐக்கிய நாடு கூட்டுச் சேராக் கோட்பாடுகளுக்கு விசுவாசமாக உள்ளது என்று ஏளனமாக அறிவித்த ரீகனை இது ஒன்றும் செய்யவில்லை. நடைமுறையில் ரீகன் நிர்வாகம் கூட்டுச் சேரா இயக்க உறுப்பு நாடுகளாகிய இளம் அரசுகளின் விவகாரங்களில் தன் தலையீட்டை அதிகரித்து வருகிறது.

1983 ஆம் ஆண்டு செப்டெம்பர் 26 ஆம் தேதி ஐ.நா. சங்கத்தின் 38 வது அமர்வில் தனது உரையில் ரீகன் கூட்டுச் சேரா இயக்க உறுப்பு நாடுகளைப் பற்றி சமயோசித சாமர்த்தியமின்றிக் குறிப்பிட்டார். இவரது உரை பற்றிக் கருத்துரைக்குங்காலை இந்திய *The Statesman* பத்திரிகை, ரீகன், ''போலியான கூட்டுச் சேராமை'' (இந்தியா போன்ற நாடுகளை மனதில் கொண்டு) ஐ.நா. சங்கத்தின் செல்வாக்கைப் பலப்படுத்துவதற்கான பாதை அல்ல என்றும் ''போலியான கூட்டுச் சேராமை'' என்பது ஆயுதங்களின் மீதான போலிக் கண்காணிப்பை விட எவ்விதத்திலும் மேலானது இல்லையென்றும் ''கூட்டுச் சேரா'' நாடுகள் என்றழைக்கப்படுபவற்றில் சில ஐ.நா.

சங்கத்தில் சக்திகள் பிளவுபட்டு அணிசேரா துணைபுரிகின்றன என்றும் கூறியதாக எழுதியது.*

ஐரோப்பாவில் நம்பிக்கை, பாதுகாப்பு மற்றும் ஆயுதக் களைப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவது சம்பந்தமான மகாநாட்டில் உரையாற்றுங்காலை (ஸ்டாக்ஹோம், 1984, ஜனவரி 17) சோவியத் யூனியனின் அயல் விவகாரத் துறை அமைச்சர் அ. குரோமிகோ அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கொள்கையின் இன்னுமொரு முக்கிய அம்சத்தைக் குறிப்பிட்டார். ''மற்ற அரசுகளுடனை உறவுகளின் விஷயத்தில் இரகசியமான, சீர்குலைவு நடவடிக்கைகளையும் வன்முறையையும் வாஷிங்டன் பயன்படுத்துவதைக் கவனிக்காமல் இருக்க முடியுமா? இந்தப் பாதகமான, நியாய மற்ற முறைகள் அனைத்தையும் வாஷிங்டன் தனது அதிகார பூர்வமான வெளிநாட்டுக் கொள்கை சாதனங்களில் சேர்த்துள்ளது. நடைமுறையில் இவை பல நாடுகளுக்கு எதிராகவும் இந்நாடுகளின் அரசுப் பிரமுகர்களுக்கு எதிராகவும் இந்நாடுகளின் சமூக அமைப்பிற்கு எதிராகவும் பயன்படுத்தப்படுகின்றன... இந்த மகாநாட்டின் கருத்தினால் ஏதாவது பயன் உண்டு என்றால், நாம் இதைப் பற்றித் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்; இதை நிறுத்தி அரசுகளுக்கு இடையிலான விஷயங்களில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட முறைகளைக் கடைபிடிக்குமாறு இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அறை கூவல் விட வேண்டும்.''**

---

* *The Statesman*, September 27, 1983.

** பிராவ்தா, ஜனவரி 19, 1984.

## 2. சோவியத் யூனியனும் கூட்டுச் சேரா இயக்கமும்

கூட்டுச் சேரா நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு, காலனியாதிக்க எதிர்ப்பு, நிறவெறி எதிர்ப்புக் கொள்கையும், சமாதானம் மற்றும் சர்வதேசப் பாதுகாப்பைப் பலப்படுத்துவதில் இவற்றின் முயற்சிகளும் அரசியல் சுதந்திரத்தை வலுப்படுத்தி, பொருளாதார விடுதலையை அடையும் போராட்டத்தில் இந்நாடுகளின் ஒற்றுமைக்கு வழிகோலின. ஆப்பிரிக்காவின் தெற்கில் உள்ள நிறவெறி ஆட்சிக் கும்பல்களுக்கு எதிராயும் இவர்களது ஏகாதிபத்திய ஆதரவாளர்களுக்கு எதிராயும் கூட்டுச் சேரா நாடுகளின் தொடர்ச்சியான, கோட்பாட்டு வழிப்பட்டக் கொள்கை உலக மக்கள் அனைவருக்கும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. எல்லா மகாநாடுகளின் இறுதி ஆவணங்களிலும் தமது தேசிய, சமூக விடுதலைக்காகப் போராடும் மக்களினங்களுக்கு ஒருமனதான ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது, ஆப்பிரிக்கப் பூமியில் ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகளுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுச் சேராமையைப் பல வளர்ச்சியுறும் நாடுகளின் கொள்கையாகவும் கூட்டுச் சேரா இயக்கத்தை உலக அரங்கிலுள்ள செல்வாக்கு மிகு சக்தியாகவும் கருதி வரும் சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் இந்த இயக்கத்தின் துவக்கத்திலிருந்தே இதன் தீர்மானங்களையும் முன்மொழிவுகளையும் பல வகைகளிலும் ஆதரித்தன.

சோவியத் யூனியனும் சோஷலிச முகாமின் எல்லா நாடுகளும் கூட்டுச்சேரா இயக்கம் தோன்றியதை வரவேற்றன; இதைச் சர்வதேச உறவுகளின் வளர்ச்சியில் நல்ல ஒரு காரணியாகக் கருதின, கருதி வருகின்றன. கூட்டுச் சேரா இயக்க நாடுகளுக்கும் இந்த இயக்கத்தின் வெளியேயுள்ள சோஷலிச நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சமத்துவம், உள்விவகாரங்களில் தலையிடாமை, பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில், சமாதானம், சமாதான சகவாழ்விற்கு ஆதரவாகவும் ஏகாதிபத்தியம், காலனியாதிக்கத்திற்கு எதிராயும் நடைபெறும் போராட்டம் எனும் லட்சிய ஒருமைப்பாட்டைக் கணக்கில் கொண்டும் உருவாக்கப்படுகின்றன. வளர்ச்சியுறும் நாடுகளின் அரசியல் சுதந்திரம் பலமடைய வேண்டுமென்பதற்காகவும் இந்நாடுகள் பொருளாதார விடுதலை அடைவதற்காகவும் சோஷலிச நாடுகள் இடையறாது போராடி வருகின்றன.

பெல்கிரேத் மகாநாட்டிலிருந்து துவங்கி, கூட்டுச் சேரா அரசுகளின் எல்லா மகாநாடுகளுக்கும் அனுப்பப்படும் சோவியத் வாழ்த்துச் செய்திகளில் இயக்கத்தைப் பற்றி நல்ல மதிப்பீடு தரப்படுகிறது, சமாதானம், தேசிய சுதந்திரம் மற்றும் விடுதலைக்கான போராட்டத்தில் வெற்றிகள் உண்டாக வாழ்த்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

கூட்டுச் சேரா இயக்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்கிற்குப் பங்கமேற்படுத்தவும் சோஷலிச நாடுகளுடன் இந்நாடுகளுக்கு உள்ள ஒத்துழைப்பைக் குலைக்கவும் மேலைய வல்லரசுகள் முயலுகின்றன. இந்நடவடிக்கைகளை அம்பலப்

படுத்திய பி. காஸ்ட்ரோ அல்ஜீரியா மகாநாட்டில் பேசுங்காலே, கூட்டுச் சேரா நாடுகளுக்கும் சோஷலிச நாடுகளுக்கும் இடையே பிளவு ஏற்படுத்தச் செய்யப்படும் எந்தவொரு முயற்சியும் சாராம்சத்தில் எதிர்ப்புரட்சித் தன்மையை உடையது என்றும் இது ஏகாதிபத்திய சக்திகளுக்குத்தான் ஆதாயமானது என்றும் குறிப்பிட்டார். மகாநாட்டின் இறுதிக் கூட்டத்தில் பேசும் போது மறைந்த அல்ஜீரிய ஜனதிபதி ஹுவரீ புமிதியேன், சோஷலிச முகாம் நிலவுவதே கூட்டுச் சேரா இயக்கத்திற்கு ஒரு ஆதாரத் தளமாகும் என்று கூறினர்.

ஏகாதிபத்தியச் சக்திகளேப் பயன்மிகு வகையில் எதிர்த்து நிற்பதற்காக சோஷலிச அரசுகளுடனை ஒத்துழைப்பைப் பலப்படுத்தக் கோரும் பிரகடனம் 4வது மகாநாட்டில் ஏற்கப்பட்டது. சோவியத் யூனியனின் பல சமாதான முன்மொழிவுகளே, உதாரணமாகக் கூட்டுப் பாதுகாப்பு அமைப்பை உருவாக்குவது பற்றிய முன்மொழிவை மகாநாடு ஆதரித்தது. தேசிய விடுதலே இயக்கத்தைப் பற்றிய தனித் தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது. இதில் நேட்டோ நாடுகளின் கொள்கைக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது, ஆயுதமேந்தி சுதந்திரத்திற்காகப் போராட ஒடுக்கப்பட்ட மக்களினங்களுக்குள்ள சட்ட பூர்வமான உரிமை ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

சுயநிர்ணயத்திற்கும் சுயமான வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுக்கவும் மக்களினங்களுக்கு உள்ள உரிமையைக் கூட்டுச் சேரா இயக்கம் தோன்றுவதற்கு நீண்ட நாள் முன்னதாகவே இளம் சோவியத் அரசு தொடர்ச்சியாகவும் உறுதி

யாகவும் காத்து நின்றது. 1917ஆம் ஆண்டு ருஷ்யாவில் சோஷலிச புரட்சி வெற்றி பெற்ற மறுகணமே சோவியத் ருஷ்யா, கிழக்கேயிருந்த அயல் நாடுகளின் விஷயத்தில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது: ஜாரிச அரசாங்கத்தின் பங்கேற்போடு செய்யப்பட்ட இரகசிய ஏகாதிபத்திய உடன்படிக்கைகளைப் பகிரங்கப்படுத்தி ரத்து செய்தது, சீனு, துருக்கி, இரான் மீது ஜாரிசத்தால் திணிக்கப்பட்ட தளையூட்டும் ஒப்பந்தங்களை உடைத்தெறிந்தது, இரானில் ஜார் அரசாங்கத்திற்கு முன்பிருந்த சலுகைகளைக் கைவிட்டது, கடன்களை ரத்து செய்தது. அரசுரிமையை மதித்தல், உள்விவகாரங்களில் தலையிடாதிருத்தல், சமத்துவம், பரஸ்பர ஆதாயத்தின் அடிப்படையில் சர்வதேசப் பொருளாதார உறவுகளை மாற்றியமைக்கும் ஆலோசனைகளை 1922ஆம் ஆண்டு ஜெனேவா மகாநாட்டில்[33] சோவியத் பிரதிநிதிக் குழு முன்வைத்தது.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களினங்களின் தேசிய விடுதலை இயக்கத்திற்கு ஆதரவளிப்பதை சோவியத் யூனியன் தனது சர்வதேசியக் கடமையாகக் கருதியது, கருதி வருகிறது, சர்வதேச அரங்கில் கூட்டுச் சேரா இயக்க நாடுகளின் பங்கு அதிகரித்து வருவதை வரவேற்கிறது.

தேசிய விடுதலை இயக்கத்திற்கு—இதிலிருந்து தான் பின்னுல் கூட்டுச் சேரா இயக்கம் தோன்றியது — உலக சோஷலிசத்தின் பன்முக உதவி குறிப்பாக இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலத்தில் நன்ருக வெளிப்பட்டது. 1946ஆம்

ஆண்டு பிப்ரவரியில் சோவியத் யூனியன்—வல்லரசுகளில் இது மட்டுமே—கூட்டுச் சேரா இயக்கத்தின் எதிர்கால உறுப்பு நாடுகளாகிய சிரியாவிலிருந்தும் லெபனானிலிருந்தும் பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சுப் படைகள் வெளியேற வேண்டுமென்ற சிரிய, லெபனானிய கோரிக்கையை ஆதரித்தது. 1947இல், எகிப்திலிருந்து பிரிட்டிஷ் படைகள் வெளியேற வேண்டுமென்ற எகிப்தியக் கோரிக்கையை சோவியத் யூனியன் ஆதரித்தது. 1946ஆம் ஆண்டு துவக்கத்தில், இந்தோனேசியாவிற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை பிரிட்டன் நிறுத்த வேண்டுமென்ற பிரச்சினையை சோவியத் யூனியன் ஐ.நா.சங்கத்தின் பாதுகாப்புக் கவுன்சிலில் வைத்தது.[34] 1947, 1948 ஆண்டுகளில் சோவியத் யூனியன் மீண்டும் ஐ.நா. சங்கத்தில் இளம் இந்தோனேசியக் குடியரசிற்கு ஆதரவாய், ஹாலந்து ஆக்கிரமிப்பு, பொருளாதார முற்றுகை மற்றும் அரசியல் தனிமையை எதிர்த்துப் போராடியது. 1956ஆம் ஆண்டு நவம்பரில் எகிப்திற்கு எதிராக பிரிட்டன், பிரான்ஸ், இஸ்ரேல் மும்முரமாக ஆக்கிரமிப்பில் இறங்கிய போது, உடனடியாக ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட வேண்டுமென கோரி, தேவையெனில் ஆக்கிரமிப்பிற்குப் பலியான தரப்பைப் பாதுகாக்கும் முகமாக பலத்தைப் பிரயோகிக்கத் தான் உறுதி பூண்டுள்ளது குறித்து எச்சரிக்கை விடுத்து சோவியத் யூனியன் தீர்மானகரமான நடவடிக்கையை மேற்கொண்டது.

சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடுகளின் பொருளாதார, அரசியல், இராணுவ பலம்,

இளம் வளர்ச்சியுறும் அரசுகளுக்கு இணக்கம் காட்டுமாறும் நேரடியான ஆக்கிரமிப்பு, பலப் பிரயோகம் ஆகியவற்றிலிருந்து விலகியிருக்கு மாறும் ஏகாதிபத்திய அரசுகளை நிர்ப்பந்தித்தது. இளம் அரசுகளின் உள் விவகாரங்களில் ஏகாதி பத்தியத்தின் தலையீட்டிற்கு எதிராயும் காலனி யாதிக்க முறை ஒழிக்கப்பட வேண்டுமென்று கோரியும் தொடர்ந்து போராடி வந்த சோவியத் யூனியன் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களினங்களின் தேசிய விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவான தீர்மானங்களை நிறைவேற்றப் பாடு பட்டது. உதாரணமாக, 1960ஆம் ஆண்டு சோவியத் யூனியன் **காலனி நாடுகளுக்கும் மக்களினங்களுக்கும் சுதந்திரம் அளிக்கும் பிரகடன** நகலை ஐ.நா. சங்கப் பொதுச் சபை விவாதத்திற்கு வைத்தது.

இப்பிரகடன நகலில் கீழ்காணும் அம்சங்கள் இடம் பெற்றிருந்தன:

அ) எல்லா காலனி நாடுகளுக்கும் பொறு பாட்சிக்கு விடப்பட்டப் பகுதிகளுக்கும் சுயநிர் வாகமில்லா இதர பிரதேசங்களுக்கும் முழு விடு தலையும், இந்நாட்டு மக்கள் சுதந்திரமாக வெளி யிட்ட சித்தம், விருப்பத்திற்கேற்ப சொந்த தேசிய அரசுகளின் கட்டுமானத்தில் சுதந்திரமும் உடனடியாக அளிக்கப்பட வேண்டும். இப்பிரதே சங்களின் மக்களுக்குத் தமது எதிர்காலத்தையும் அரசு நிர்வாக வடிவங்களையும் தாமே நிர்ணயிக் கும் வாய்ப்பை அளிக்கும் முகமாகக் காலனி யாதிக்க ஆட்சியின், காலனியாதிக்க நிர்வாகத்தின் எல்லா வடிவங்களும் அகற்றப்பட வேண்டும்.

ஆ) அந்நியப் பிரதேசங்களில் நிலச் சொத்துகள் மற்றும் குத்தகை வட்டங்கள் வடிவிலிருக்கும் காலனியாதிக்கத்தின் எல்லா ஆதார மையங்களேயும் ஒழிக்க வேண்டும்.

இ) அரசுகளுக்கு இடையிலான உறவுகளில் காலனியாதிக்கத்தின் எவ்வித வெளிப்பாட்டிற்கும், ஒரு சில அரசுகளுக்கு இழப்பேற்படுத்தும் மற்ற அரசுகளின் எவ்வித மேம்பாட்டிற்கும் விதிவிலக்குகளுக்கும் இடமளிக்காமல், ஐ.நா. சங்க விதிமுறைகளும் சமத்துவம், எல்லா அரசுகளின் அரசுரிமை மற்றும் பிரதேச முழுமையை மதித்தல் ஆகியவற்றைப் பற்றியப் பிரகடனமும் கண்டிப்புடனும் பிறழாமலும் கடைபிடிக்கப்பட வேண்டுமென்று எல்லா அரசாங்கங்களுக்கும் அறைகூவல் விடப்படுகிறது.

சோவியத் முன்மொழிவுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டப் பிரகடனத்தைப் பொதுச் சபை ஏற்றது.*

சோவியத் யூனியன் எப்போதுமே அண்மை கிழக்கிலும் மத்திய கிழக்கிலும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிற்கு எதிராகத் தீவிரமாகப் போராடியது, ஜோர்டான், லெபனுன், சிரியா, இராக்,

---

* 1975ஆம் ஆண்டு ஆகஸ்டில், பிரகடனத்தின் 15ஆம் ஆண்டு நிறைவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட, காலனியாதிக்கத்தை அகற்றுவது சம்பந்தமான ஐ.நா. சங்கக் கமிட்டியின் விசேஷக் கூட்டத்தில் உரையாற்றும் போது அன்றைய ஐ.நா. சங்கப் பொதுச் செயலாளர் குர்ட் வால்ட்ஹைம், இந்த வரலாற்று முக்கியத்துவமுள்ள ஆவணம் தேசிய விடுதலைக்கான போராட்டத்தில் பெரும் பங்காற்றியதெனக் குறிப்பிட்டார்.

பாலஸ்தீன விடுதலை முன்னணி போன்ற கூட்டுச் சேரா உறுப்பினருக்கு அரசியல், ராஜதந்திர, பொருளாதார ஆதரவை நல்கியது. இப்பிரதேசத்தில் நிலவும் பதட்ட நிலையைத் தணிக்க சோவியத் யூனியன் திட்டவட்டமான செயல்திட்டத்தை முன்மொழிந்தது, லெபனனிலிருந்தும் ஜோர்டானிலிருந்தும் அந்நியப் படைகள் வெளியேற வேண்டுமெனக் கோரியது, இத்தியாதி. ஹாலந்து மற்றும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடிய இந்தோனேசிய மக்களுக்கு சோவியத் யூனியன் ஆதரவு நல்கியது, ஜாயிர், சைப்ரஸ், டொமினிகன் குடியரசு போன்ற அரசுகளின் பாதுகாப்பிற்கு ஆதரவாகத் தொடர்ச்சியாகவும் தீவிரமாகவும் குரலெழுப்பியது; கியூபா, வியட்நாம், லாவோஸ், கம்பூச்சிய மக்களுக்கு சோவியத் யூனியன் பெரும் உதவி நல்கியது; தெற்கு ஆசியாவில் 1965—1966க்களில் அரசியல் நிலவரத்தைச் சீர்படுத்தி ஸ்திரமாக்க சோவியத் யூனியன் பயன்மிகு முயற்சிகளை மேற்கொண்டது (இந்தியா, பாகிஸ்தானுக்கு இடையிலான தாஷ்கென்ட் உடன்படிக்கை,[35] ஜனவரி, 1966). பியாஃப்ரா அரசை (1967—1969) பிரகடனப்படுத்திய பிரிவினைச் சக்திகளை எதிர்த்து, ஒரே அரசின் பாதுகாப்பிற்காக நைஜீரிய அரசாங்கம் நடத்தியப் போராட்டத்திற்கு[36] சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் தீவிரமான ஆதரவளித்தன. பங்களாதேஷ் குடியரசு பிரகடனம் செய்யப்பட்ட போதும் (1971)[37] இதற்குப் பின்னும் தேசிய விடுதலை இயக்கம் மற்றும் மக்களினங்களின் சுய நிர்ணய உரிமை பால் தனக்குள்ள கோட்பாட்டு

ரீதியான, சர்வதேசியவாத அணுகுமுறையை சோவியத் யூனியன் வெளிப்படுத்தியது. தமது சுதந்திரம், அரசுரிமை, பிரதேச முழுமை மற்றும் தேசிய ஒற்றுமையை ஏகாதிபத்திய, நிறவெறி சக்திகள், உள் பிற்போக்கிடமிருந்து காப்பாற்றப் போராடி வரும் அங்கோல மக்கள் குடியரசிற்கும் எத்தியோப்பியாவிற்கும் சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் அளித்து வரும் உதவிக்குப் பெரும் முக்கியத்துவம் இருந்தது, இப்போதும் இருந்து வருகிறது.

70க்களில் சோஷலிச நாடுகள், கூட்டுச் சேரா நாடுகளின் ஒத்துழைப்பு மேன்மேலும் சமாதானத்தைப் பாதுகாக்கும் காரணியாக, சர்வதேச உறவுகளில் பதட்டநிலையைக் குறைக்கும் காரணியாக மாறியது. பல சர்வதேச மகாநாடுகளிலும் ஐ.நா. சங்கத்திலும் கூட்டுச் சேரா நாடுகளின் செயல்பாடு, நம் கருத்துப்படி, சர்வதேசப் பாதுகாப்பைப் பலப்படுத்துவதை லட்சியமாகக் கொண்ட பல முக்கிய ஆவணங்களை ஏற்க உதவி புரிந்தது.

ஐ.நா. சங்கப் பொதுச் சபை மற்றும் இதன் விசேஷ உறுப்புகளின் பதிவுகளும் தீர்மானங்களும், சுதந்திரம், உள்விவகாரங்களில் தலையிடாமை, சமூக முன்னேற்றம் ஆகியவற்றின் மீது கூட்டுச் சேரா அரசுகளுக்கும் எல்லா வளர்ச்சியுறும் நாடுகளுக்கும் உள்ள உரிமையைப் பாதுகாக்கும் சோவியத் யூனியனின் நிரந்தரமான, தொடர்ச்சியான, கோட்பாட்டு வழிப்பட்ட நிலையை ஆணித்தரமாக மெய்ப்பிக்கிறது. ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் 6வது (1974, ஏப்ரல்),

7வது (1975, செப்டெம்பர்) விசேஷ அமர்வு களில் சோவியத் தூதுக்குழுவின் நடவடிக்கையை நினைவு கூர்வதே போதுமானது. இந்த அமர்வு களில் சோவியத் யூனியன், தமது இயற்கைச் செல்வங்களை தம் விருப்பப்படி பயன்படுத்த இளம் அரசுகளுக்கு உள்ள உரிமையை ஆதரித்துப் பேசியது. வளர்ச்சியுறும் நாடுகளின் முன்முயற்சி யால் கூட்டப்பட்ட ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் 6வது விசேஷ அமர்வில் மூலப் பொருள் மற்றும் பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன, அல்ஜீரியாவில் நடைபெற்ற கூட்டுச் சேரா நாடுகளின் 4வது மகாநாட்டுத் தீர்மானங்களுக்கு ஏற்ப சர்வதேசப் பொருளா தார உறவுகளை மாற்றியமைக்கும் பிரச்சினை முன் வைக்கப்பட்டது. சோஷலிச நாடுகள் மற்றும் இளம் அரசுகளின் கூட்டு முயற்சிகளின் பயனாய் "புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பு" எனும் பிரபல செயல் திட்டம் ஏற்கப்பட்டது. இதன்படி தமது இயற்கைச் செல்வங்களைத் தம் விருப்பப்படி பயன்படுத்த எல்லா அரசுகளுக்கும் முழு உரிமை உண்டு, முக்கியமாக அந்நிய ஏக போகங்களின் சொத்துக்களைத் தேச உடமை யாக்க உரிமை உண்டு.

தமது தேசிய விடுதலைக்காகப் போராடும் மக்களினங்களுக்குப் பன்முக ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்ட லெனினிய வெளிநாட்டுக் கோட்பாடுகளின் வழிநின்று சோவியத் யூனியன் இளம் அரசுகளுக்கும் தேசிய விடுதலை இயக்கங் களுக்கும் நிரந்தர அரசியல் மற்றும் ராஜதந்திர ஆதரவோடு கூட எவ்வித அரசியல், இராணுவ

அல்லது வேறுவித நிபந்தனைகளின்றி பெரும் பொருளாதார உதவியையும் அளித்து வருகிறது. அதோடு கட்டி முடிக்கப்பட்ட தொழில் நிறுவனங்கள், மற்ற அமைப்புகளிலிருந்து லாபம் பெறும் உரிமை உட்பட எந்த ஒரு உரிமையையும் பெறுவதை சோவியத் யூனியன் நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. வளர்ச்சியுறும் நாடுகளுடன் சோவியத் யூனியனுக்கும் மற்ற சோஷலிச அரசுகளுக்கும் உள்ள பொருளாதார ஒத்துழைப்பு முதலாவதாகத் தொழிற்துறைக்கு அஸ்திவாரமிடவும் அந்தந்த நாடுகளுக்கு முக்கியமான துறைகளை ஏற்படுத்தவும் ஏகாதிபத்திய அரசுகள் மற்றும் இவற்றின் ஏகபோகங்களைச் சார்ந்திருப்பதையும் பின்தங்கலையும் அகற்றவும் துணை புரிகிறது.

இளம் அரசுகளுடனான சோஷலிச நாடுகளின் ஒத்துழைப்பு ஒரு சில சந்தர்ப்பங்களில் ''உதவி'' புரியும் நிபந்தனைகளைத் தளர்த்தும்படி ஏகாதிபத்திய அரசுகளை நிர்ப்பந்தித்தது.

கீழ்காணும் விவரங்களைக் கொண்டு சோஷலிச நாடுகளுக்கும் கூட்டுச் சேரா அரசுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பின் அளவுகளை முடிவு செய்யலாம்.

ஆண்டிற்கு ஒரு மில்லியன் டன் எஃகு உற்பத்தித் திறனுள்ள பெரும் உலோகத் தொழிற்சாலையை பிலாயில் கட்டும் உடன்படிக்கை 1955ஆம் ஆண்டு சோவியத் யூனியனுக்கும் இந்தியாவிற்குமிடையே கையெழுத்தானது. இதே காலகட்டத்தில் வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு சம்பந்தமாக பர்மா, எகிப்து, லெபனுன், ஆப்கானிஸ்தான், இதர நாடுகளுடன் உடன்

படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன; பின்னல், பொருளாதார வளர்ச்சிக்காகப் பொருளாதார, தொழில்நுட்ப உதவியை அளிக்கும் உடன்படிக்கைகள் இந்தோனேசியா, நேப்பாளம், ஸ்ரீ லங்கா, எத்தியோப்பியா, கானு, கினி, மாலி, இன்னும் சில நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்டன. 1982இல் சோவியத் யூனியன் மொத்தத்தில் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் உள்ள 70 அரசுகளுக்குப் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு நல்கியது.

80க்களின் துவக்கத்தில் சோவியத் யூனியனின் உதவியோடு வளர்ச்சியுறும் நாடுகளில் 1700 தொழிற்துறை நிறுவனங்கள், மின்நிலையங்கள், நீர்மின்நிலையக் கூட்டமைப்புகள், மற்ற தேசியப் பொருளாதார அமைப்புகள் கட்டப்பட்டன.

சோவியத் யூனியனின் உதவியோடு வளர்ச்சியுறும் நாடுகளில் கட்டப்பட்ட நிறுவனங்கள் இந்நாடுகளின் பொருளாதாரத்தில் மிக முக்கியப் பங்கை வகிக்கின்றன. உதாரணமாக, சோவியத் நிபுணர்களின் உதவியோடு இந்தியாவில் கட்டப்பட்ட உலோகத் தொழில் நிறுவனங்களில் நாட்டின் மொத்த எஃகு உற்பத்தியில் 35 சதவிகிதம் (19 மில்லியன் டன்) உற்பத்தியாகிறது, 50 சதவிகித எண்ணெய் எடுக்கப்படுகிறது, 70 சதவிகித டர்பைன்களும் 80 சதவிகித சுரங்கக் கருவிகளும் தயாரிக்கப்படுகின்றன. சிரியாவில் சோவியத் புவி இயலர்களால் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது; இதன் ஏற்றுமதி நாட்டின் மொத்த அந்நியச் செலாவணியில் 50 சதவிகிதத்திற்கும் அதிகமாகத் தருகிறது. எகிப்தில் சோவியத் யூனிய

னின் உதவியோடு கட்டப்பட்டுள்ள ஹெலுவான் உலோகத் தொழிற்சாலை நாட்டின் மொத்த உற்பத்தியில் 100 சதவிகித வார்ப்பிரும்பையும் 74 சதவிகித எஃகையும் 70 சதவிகித ரோல்ட் உலோகத்தையும் 100 சதவிகித கோக் நிலக்கரியையும் தருகிறது. கினியில் சோவியத் யூனியனின் உதவியோடு கட்டப்பட்டுள்ள நிறுவனங்கள் நாட்டின் மொத்த பாக்சைட் உற்பத்தியில் 20 சதவிகிதத்தைத் தருகின்றன; எத்தியோப்பியாவில் இத்தகைய நிறுவனங்கள் 100 சதவிகிதம் எண்ணெயைப் பதப்படுத்துகின்றன; அல்ஜீரியாவில் சோவியத் உதவியோடு கட்டப்பட்ட தொழில் நிறுவனங்களில்தான் முழு அளவு வார்ப்பிரும்பும் பாதரசமும் உற்பத்தியாகின்றன. கூட்டுச் சேரா நாடுகளில் சோஷலிச அரசுகளின் உதவியோடு இவ்வாறாக பெரும் கூட்டமைப்புகள் (உதாரணமாக இந்தியாவில் பிலாய், பொக்காரோ உலோகத் தொழிற்சாலைகள், எகிப்தில் ஹெலுவான் உலோகத் தொழிற்சாலை, ஙநலிலும் எஃப்ராத்திலும் நீர்மின் நிலையங்கள்) உருவாயின. அதன் விளைவாக, ''உதவியளிக்கும்'' போர்த்தந்திரத்தை மறுபரிசீலனை செய்யும்படியும், கூட்டுகளில் உறுப்பினராக இல்லாத, பல சமயங்களில் ஐ.நா. சங்கத்தில் மேலைய நாடுகளின் ஒத்திசைவான நிலைக்கு எதிராகக் குரல் எழுப்பிய நாடுகளுக்கு இந்த உதவியை அதிகரிக்கும்படியும் கூட மேலைய நாடுகள் கட்டாயப்படுத்தப்பட்டன.

சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடுகளின் உதவியோடு கட்டப்பட்ட அமைப்புகள் இயங்கத் தொடங்கிய போது பல கூட்டுச் சேரா

அரசுகளில் அரசுத் துறை உருவாகத் துவங்கியது. இது இந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும் நாட்டைத் தொழிற்துறைமயமாக்கவும் உதவியது.

தொழிற்துறை, விவசாயம், போக்குவரத்து, மருத்துவம், கல்வி போன்ற துறைகளுக்கு நிபுணர்களையும் ஊழியர்களையும் பயிற்றுவிப்பதில் இளம் அரசுகளுக்கு சோஷலிச நாடுகள் அளிக்கும் உதவி ஆண்டுகள் செல்லச் செல்ல அதிகரித்து வருகிறது.

ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு முயற்சிகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு பாதுகாப்பு வல்லமையைப் பலப்படுத்துவதில் கூட்டுச் சேரா நாடுகளுக்கு சோவியத் யூனியனுடன் உள்ள ஒத்துழைப்பு இந்நாடுகளுக்கு மிக முக்கியமானது. இராணுவ தொழில்நுட்பம் மற்றும் போர் தளவாடங்களை அளித்தது (அதுவும் மிகவும் சலுகையாக), சோவியத் இராணுவ நிபுணர்களின் உதவி, சோஷலிச நாடுகளின் இராணுவ கல்விக் கூடங்களில் தேசிய இராணுவ ஊழியர்களைப் பயிற்றுவித்தது ஆகியவற்றின் பயனாகத்தான் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் உள்ள பல கூட்டுச் சேரா நாடுகளில் இராணுவம் உருவாக்கப்பட்டது அல்லது புதுப்பிக்கப்பட்டது என்பதில் எவ்வித ரகசியமும் இல்லை. இதுதான் (சோவியத் யூனியனின் அரசியல் மற்றும் பொருளாதார ஆதரவுடன் ஒன்றாகச் சேர்ந்து) ஏகாதிபத்திய அரசுகளின் நேரடி இராணுவ ஆக்கிரமிப்புகளை எதிர்த்து நின்று சமாளிக்க இந்த அரசுகளுக்கு உதவியது. இந்தோனேசியா *(1961-65)*, கியூபா *(1961)*, எகிப்து, சிரியா *(1968-73)* ஆகிய நாடுகளின் இராணுவங்களை நவீனமயமாக்க

சோவியத் யூனியன் அளித்த உதவியை இவ்விஷயத்தில் விசேஷமாகக் குறிப்பிட வேண்டும். ஆப்கானிஸ்தான், கினி-பிசாவு, மொசாம்பிக், அங்கோலா, எத்தியோப்பியா, அல்ஜீரியா ஆகிய நாடுகளுக்கு சோவியத் யூனியன் அளித்து வரும் தன்னலங்கருதா உதவி, தமது தேசிய விடுதலை, அரசுரிமை, பிரதேச முழுமை மற்றும் தேசிய ஒற்றுமைக்காகப் போராடி வரும் உலக மக்களினங்களின் முன் சோவியத் மக்கள் நிறைவேற்றும் சர்வதேசக் கடமைக்கு எடுத்துக்காட்டாகும்.

சமாதானம் மற்றும் உலக மக்கள் அனைவரின் பாதுகாப்பிற்காக சோவியத் யூனியன் ஆற்றி வரும் தீவிரப் போராட்டத்தைக் கூட்டுச் சேரா இயக்க உறுப்பு நாடுகள் ஆதரிக்கின்றன. கூட்டுச் சேரா அரசுகளின் ஆதரவோடு ஐ.நா. சங்கத்தில் சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பலப்படுத்துவது, படைக்கலைப்பு, ஆக்கிரமிப்பைத் தடுத்தல், ஆயுதப் போட்டியை மட்டுப்படுத்துதல் போன்ற முக்கியப் பிரச்சினைகள் மீது, காலனியாதிக்கம், நிறவெறிக்கு எதிரான போராட்டப் பிரச்சினைகள் மீது பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் 34வது அமர்வில் (1979) வளர்ச்சியுறும் அரசுகள், **சர்வதேச உறவுகளில் மேலாதிக்கக் கொள்கை அனுமதிக்கப்படலாகாது** என்று சோவியத் யூனியன் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்தன; ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் 35வது அமர்வில் **இராணுவ அபாயத்தைக் குறைப்பதற்கான ஒரு சில உடனடி நடவடிக்கைகளைப் பற்றி** சோவியத் யூனியன் கொண்டு வந்த நகல் தீர்மானத்தைக் கூட்டுச்

சேரா நாடுகளில் பெரும்பான்மையானவை ஆதரித்தன.

உலக அமைதியையும் கூட்டுச் சேரா நாடுகளிலுள்ள மக்கள் உட்பட உலக மக்கள் அனைவரின் பாதுகாப்பையும் பேணிக் காப்பதற்காக, பரஸ்பரம் இராணுவ பலத்தைப் பிரயோகிக்க வேண்டாம், சமாதான உறவுகளைக் கடைபிடிப் போம் என்று ஒப்பந்தம் செய்து கொள்ளலாமென வார்சா ஒப்பந்த நாடுகள் **நேட்டோ** நாடுகளுக்கு 1983இல் முன்மொழிந்தன. பின் சோவியத் யூனியன் ''அணு ஆயுதங்களை முடக்குதல்'' எனும் முக்கியப் பிரச்சினையை ஐ.நா. சங்கப் பொதுச் சபை அமர்வின் கவனத்திற்குக் கொண்டு வந்தது (1983), **அணு ஆயுத யுத்தத்தைக் கண்டனம் செய்யும் பிரகடனம்** ஒன்றை ஏற்குமாறு முன்மொழிந்தது. சோவியத் யூனியனின் முன்மொழிவுகள் சர்வதேசக் கூட்டமைப்பால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இறுதியாக சோவியத் யூனியன், விண்வெளியை இராணுவ நோக்கங்களுக்காகப் பயன் படுத்துவதில்லையென உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு முன்மொழிந்தது. 1984ஆம் ஆண்டு ஜனவரியில் சோஷலிச நாடுகள், இரசாயன ஆயுதத்தைப் பயன்படுத்துவதில்லை என்ற உடன்படிக்கை நகலை **நேட்டோ** நாடுகளுக்கு அளித்தன.

காலனியாதிக்கம், நிறவெறி, நவீன காலனியாதிக்கம் ஆகியவற்றிற்கு எதிராகப் போராடுவது, எல்லாக் கண்டங்களிலும் பாதுகாப்பையும் ஸ்திர நிலையையும் பலப்படுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட வளர்ச்சியுறும் நாடுகளின் முன்மொழிவுகளை சோவியத் யூனியனும்

மற்ற சோஷலிச நாடுகளும் தீவிரமாக ஆதரிக்கின்றன.[38]

சர்வதேசப் பொருளாதார உறவுகளை மாற்றியமைப்பதற்காக வளர்ச்சியுறும் அரசுகள் நடத்தும் போராட்டத்திற்குத் தீவிர ஆதரவு நல்குவது என்பது சோவியத் யூனியன், சோஷலிச முகாமிலுள்ள மற்ற நாடுகளின் கொள்கையில் ஒரு முக்கியப் போக்காகும். ''இன்றுள்ள உலக நிலவரத்தில் ஏகாதிபத்திய அதிகாரத்தை எதிர்த்து நிற்கவும் நியாயமான, அதாவது சம உரிமையுள்ள பொருளாதார உறவுகளை வென்று பெறவும் விடுதலையடைந்த நாடுகளால் இயலும் என்பது இப்போது தெளிவு''* என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங்கிரசில் கூறப்பட்டது. இப்போது நிலவும் சமமில்லா சர்வதேசப் பொருளாதார உறவுகளை அடியோடு மாற்றியமைக்க வேண்டும், இளம் அரசுகளின் விஷயத்தில் ஏகாதிபத்திய ஏகபோகங்களும் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களும் கடைபிடிக்கும் பாகுபாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்று வளர்ச்சியுறும் நாடுகள் விடுக்கும் நியாயமான கோரிக்கைகளை சோவியத் யூனியன் தீவிரமாக ஆதரிக்கிறது. ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் 31வது அமர்விலேயே (1976) சோவியத் யூனியன் ஒரு முன்மொழிவை வைத்தது. அதில் பின்வருமாறு சுட்டிக் காட்டப்பட்டிருந்தது: ''உலக சக்திகள்

---

* **சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங்கிரஸ்,** *மாஸ்கோ, 1976, தொகுதி 1, பக்கம் 36 (ருஷ்ய மொழியில்).*

முற்றிலும் வேறு விதமாக உள்ள ஒரு சூழ்நிலையில், ஏகாதிபத்திய ஏகபோகங்களின் தன்னல நோக்கங்களுக்கு மட்டுமே ஏற்றதாயுள்ள வகையில் உருவாகியிருக்கும் சர்வதேசப் பொருளாதார உறவுகளின் தன்மை, மிகப் பெரும்பான்மையான நாடுகளின் அத்தியாவசிய நலன்களுக்கும் பொது சர்வதேச நிலவரத்தின் வளர்ச்சியோடும் முரண்படுகிறது.''*

அதே பொழுது சோஷலிச அரசுகள், புதிய சர்வதேசப் பொருளாதார முறையின் ஒரு சில அம்சங்களை ஒளிவு மறைவின்றி, காரிய நோக்கோடு விமர்சனம் செய்கின்றன; வெளிநாட்டு பொருளாதார பிரச்சினைகளின் தீர்வுகளை வளர்ச்சியுறும் நாடுகளின் ஆழ்ந்த சமூகப் பொருளாதார மாற்றங்களில் இருந்து பிரிக்கவும் வளர்ச்சியுறும் நாடுகளின் கோரிக்கைகளை மட்டுமே நிறைவேற்றுவதற்காகப் போராடவும் இந்த அம்சங்கள் முயலுகின்றன. சர்வதேசப் பொருளாதார உறவுகளை மாற்றியமைப்பதானது ஏதாவது சில நாடுகளின் நோக்கங்களுக்காக நடைபெறக் கூடாது, மாறாக எல்லா நாடுகள், மக்களினங்களின் நலன்களுக்காகவும் செய்யப்பட வேண்டும். வளர்ச்சியுறும் நாடுகளின் விஷயத்திலும் சோஷலிச அரசுகளின் விஷயத்திலும் ஏகாதிபத்தியம் கடைபிடிக்கும் பாகுபாட்டையும் தான்தோன்றித்தனத்தையும் அகற்றப் பாடுபட வேண்டியது அவசியம்.

''ஏழை மற்றும் பணக்கார நாடுகள்'', ''வடக்கு மற்றும் தெற்கு'' என்றழைக்கப்படும்

---

* **பிராவ்தா**, அக்டோபர் 5, 1976.

தத்துவங்களைப் பொறுத்தமட்டில், இந்தத் ''தத்துவங்கள்'' எல்லாவற்றிலும் சோஷலிச அரசுகளுக்கும் முதலாளித்துவ அரசுகளுக்கும் இடையிலான மாறுபாடுகள் அலட்சியப்படுத்தப்படுகின்றன. கூட்டுச் சேரா நாடுகளின் முன் ஏகாதிபத்திய அரசுகளுக்கும் (அவை காலனி மற்றும் சார்பு நாடுகளைக் கொள்ளைச் சுரண்டலுக்கு உள்ளாக்கின) சோஷலிச நாடுகளுக்கும் (இவற்றிற்கு எப்போதுமே காலனிகள் இருந்ததில்லை, இவை எப்போதுமே மற்ற நாடுகளுடனான தமது உறவுகளை சமத்துவம், பரஸ்பர ஆதாயம், உள் விவகாரங்களில் தலையிடாமை ஆகியவற்றின் அடிப்படையில் அமைத்துக் கொண்டன) ஒரே விதமான பொறுப்பையும் எனவே ஒரே மாதிரியான கடமைகளையும் இந்தத் ''தத்துவங்கள்'' ஆதாரப்படுத்துகின்றன. கூட்டுச் சேரா இயக்கத்திலும் இதன் அமர்வுகளின் முடிவுகளிலும் துரதிர்ஷ்டவசமாக ''ஒரேவித கோரிக்கைகள்'' எனும் ஆய்வுரைக்குச் சாதகமாக அவ்வப்போது கேட்க நேரிடுகிறது.

சர்வதேசப் பொருளாதார உறவுகளை மாற்றியமைப்பதை சோஷலிச நாடுகள் சர்வதேச நிலவரம் பொதுவாகச் சீராவதுடனான இடையறாத் தொடர்பில் பார்க்கின்றன, இதில் உலகில் பதட்ட நிலைத் தணிவிற்கும் ஆயுதப் போட்டி நிறுத்தப்படுவதற்கும் படைக்கலைப்பிற்கும் பிரதான முக்கியத்துவம் அளிக்கின்றன.

வளர்ச்சியடைந்த சோஷலிச நாடுகளுக்கும் பல வளர்ச்சியுறும் நாடுகளுக்குமிடையே நல்லுறவுகளும் பன்முக ஒத்துழைப்பும் தோன்றி வளர்ந்து

வருகின்றன. வளர்ச்சியுறும் நாடுகள், குறிப்பாக சோஷலிசத் திசையமைவுப் பாதைக்கு வந்துள்ள நாடுகள் சோவியத் யூனியன், சோஷலிச முகாமின் மற்ற நாடுகளின் வரலாற்று அனுபவம் மீது கணிசமான அக்கறை காட்டுகின்றன. ஏனெனில் அரசுக் கட்டுமானம், பொருளாதாரம், தேசிய உறவுகள், கலாச்சாரக் கட்டுமானம், ஊழியர் பயிற்சி ஆகிய துறைகளில் சோஷலிச நாடுகள் தீர்க்க வேண்டியிருந்த பல பிரச்சினைகளை இன்று ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க இளம் அரசுகள் தீர்த்து வருகின்றன.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடிச் சூழ்நிலைகளில், சுதந்திரமான, சமாதானமான வளர்ச்சியின் மீது நாட்டமுடைய பல இளம் சுதந்திர அரசுகள் சர்வதேச அரங்கில் தோன்றிய போது கூட்டுச் சேரா இயக்கம் உருவாயிற்று. ஒடுக்கப்பட்ட மக்களினங்கள், முன்னர் ''ஏகாதிபத்தியத்தின் சர்வதேச அரசியல் பொருளாக'' இருந்தவர்கள் ''சுயமான பங்கேற்பாளர்களாக, புதிய வாழ்வின் படைப்பாளிகளாக'' வீறு கொண்டு எழுவார்கள், மற்ற எல்லா மக்களினங்களோடும் சேர்ந்து சரிசமமாக ''உலகம் முழுவதன் எதிர்காலத்தை முடிவு செய்வதில்'' பங்கேற்பார்கள்* என்ற லெனினின் கணிப்பு குறிப்பாக இதற்குத்தான் சாரும்.

ஆக்கிரமிப்பு நோக்குடைய இராணுவ அரசியல் கூட்டுகள், இணைப்புகளில் இழுக்க ஏகாதிபத்

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 10, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1981, பக்கங்கள் 98, 99.

தியம் செய்யும் முயற்சிகளைக் கூட்டாக எதிர்த்து நிற்கும் வாய்ப்பையும், சுதந்திரமான கொள்கையைப் பின்பற்றி சமமான, ஜனநாயக அடிப்படையில் சர்வதேசப் பொருளாதார உறவுகளை மாற்றியமைக்கப்பாடுபடும் வாய்ப்பையும், சமாதானத்திற்கு ஆதரவாக ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், நிறவெறிக்கு எதிராகப் போராடும் வாய்ப்பையும்தான் இளம் அரசுகள் கூட்டுச் சேரா இயக்கத்தில் கண்டன.

புறவயரீதியாக கூட்டுச் சேரா இயக்கம், நவீன உலகின் எல்லா புரட்சிகர, ஜனநாயக, முற்போக்குச் சக்திகளையும் ஒன்றிணைத்து நிற்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியில் உடனடியாகச் சேர்ந்தது. இது உலகப் புரட்சிகர போக்கின், தேசிய விடுதலை இயக்கத்தின் ஒரு அங்கமாகும். இன்று கூட்டுச் சேரா நாடுகளின் தலைவர்களில் மேன்மேலும் அதிகமானோர், உள்நாட்டுக்கொள்கையைக் கடைபிடிக்கும் போது, சமூக முன்னேற்றத்திற்கான போராட்டத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்திற்கும் இடையிலுள்ள இயல்பான பரஸ்பர தொடர்பினை ஆதாரமாகக் கொண்டு, செயல்படுகின்றனர்.

கூட்டுச் சேரா இயக்கத்தின் மாறுபடும் தன்மை—உலகிலுள்ள அநேகமாக எல்லா சமூக அமைப்புகளையும் சேர்ந்த அரசுகள் இவ்வியக்கத்தில் உள்ளன — இயக்கத்தினுள் கருத்துக்கள், கருத்தமைப்புக்கள், சித்தாந்த அரசியல் போக்குகளின் இடையறு உள் போராட்டத்திற்கு வழிகோலுகிறது. கூட்டுச் சேரா இயக்கத் திசையமைவைத் தேர்ந்தெடுப்பது, இதன் அரசியல்

போக்கை முடிவு செய்வதுதான் இப்போராட்டத்தின் உட்பொருள்.

கூட்டுச் சேரா இயக்கத்தைப் பிளவுபடுத்தி உள்ளிருந்தே குலைத்து, கூட்டுச் சேரா இயக்கக் கொள்கையின் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சாரத்தை மழுங்கச் செய்ய முயலும் ஏகாதிபத்திய, மற்ற பிற்போக்குச் சக்திகளின் தாக்குதல்கள் நிற்கவில்லை. இதன் தொடர்பாகப் பிரபல இந்திய விஞ்ஞானி விஜய் குப்தா பின்வருமாறு கூறுகிறார்: ''கூட்டுச் சேரா இயக்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்கைப் பலவீனப்படுத்துவதும் இதைப் பயனற்ற நடுநிலை அம்சமாக மாற்றுவதும் தான் மேலைய நாடுகளுடைய முயற்சிகளின் நோக்கம்... கூட்டுச் சேரா இயக்கம் ''சம அளவில் விலகியிருக்கும்'' தத்துவத்தை ஏற்றுக் கொள்ளுமாறு செய்வதே மேலைய நாடுகளின் பிரதான எண்ணம் ஆகும். வளர்ச்சியுறும் நாடுகளுடனை இரு வல்லரசுகளின் உறவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது தேசிய விடுதலை, நிறவெறி, சமாதானம், படைக்கலைப்பு, இராணுவத் தளங்கள், ஆயுதப் போட்டி, அணு ஆயுத யுத்த அபாயம் ஆகிய பிரச்சினைகளின் விஷயத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே எவ்வித வேறுபாடுகளும் கண்டுபிடிக்கப் படக் கூடாது என்பதற்காக மேற்கூறிய தத்துவங்களின் உதவியால் கூட்டுச் சேரா இயக்க விரோதிகள் பாடுபடுகின்றனர். இராணுவக் கூட்டுகளை உருவாக்கி செயல்படுத்துவது, ''துரிதத் தாக்குதல் படைகளையும்'' இராணுவத் தளங்களையும் உருவாக்குவது ஆகியவை சம்பந்தமாகக் கூட்டுச்

சேரா இயக்கம் தமக்கு உகந்த நிலையை மேற்கொள்ள வேண்டும் என்று மேலைய வல்லரசுகள் விரும்புகின்றன.''*

இன்று ஏகாதிபத்தியம் கூட்டுச் சேரா நாடுகளின் மீது பரந்த அளவு தாக்குதல்களைத் தொடுத்து வருகிறது. அரசியல் துறையில் ஏகாதிபத்திய நாடுகள் ''பிரித்தாளும்'' முறையைக் கைகொண்டு தனிப்பட்ட நாடுகளுக்கிடையே சச்சரவுகளை மூட்டி விட்டு, தேசிய விடுதலை மண்டலத்தில் தனது இராணுவ நடமாட்டத்தை அதிகப்படுத்த நெருக்கடி நிலைமைகளைப் பயன்படுத்துகின்றன. பொருளாதாரத் துறையில் ஏகாதிபத்தியம் தனது விஸ்தரிப்பின் முக்கிய நெம்புகோல்களாகப் பன்னாட்டு தொழில் நிறுவனங்களைப் பயன்படுத்தி வளர்ச்சியுறும் நாடுகளை ஈவிரக்கமின்றிச் சுரண்டுகிறது, உலக முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் இந்நாடுகளைச் சமமற்ற, சார்பு பகுதிகளாக வைத்திருக்க முயலுகிறது. கூட்டுச் சேரா நாடுகள் மீது, எல்லா வளர்ச்சியுறும் நாடுகள் மீது நிர்ப்பந்தம் செலுத்தவும், ஒரு சில சந்தர்ப்பங்களில் இணங்கிக் கொடுக்குமாறு கட்டாயப்படுத்தவும் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு இன்னமும் உண்மையான வாய்ப்புள்ளது. ''கீழ்படியாத'' அரசாங்கங்களுக்கு எதிராக ஏகாதிபத்தியம் சதி செய்கிறது, சுதந்திர நாடுகளின் உள்ளேயிருக்கும் பிற்போக்கிற்கும் சீர்குலைவுச் சக்திகளுக்கும் நிதியுதவி செய்கிறது.

---

* *India and Non-Alignment*. Ed. by Vijay Gupta. New Delhi, 1983, p. 7.

சித்தாந்தத் துறையில், சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடுகளின் கொள்கை மீது கூட்டுச் சேரா நாடுகளிடையே வெறுப்பை ஏற்படுத்தவும், உலக சோஷலிசத்திற்கும் தேசிய விடுதலை இயக்கத்திற்கும் பொது நலன்கள் இல்லை என்று நம்பச் செய்யவும் ஏகாதிபத்தியம் முயலுகிறது. இந்நோக்கத்தோடு மேலைய நாடுகளின் அதிகாரபூர்வமான வட்டங்கள் ''சம அளவில் விலகியிருக்கும்'' கருத்தைப் பிரச்சாரம் செய்கின்றன. தமது தத்துவார்த்த மற்றும் நடைமுறை நடவடிக்கையில் கூட்டுச் சேரா இயக்கம் ஏதோ இதைக் கடைபிடிக்க வேண்டுமாம்.

ஆனால், ''இளம் சுதந்திர நாடுகளின் அரசுரிமையைப் பலப்படுத்துவதிலும் ஏகாதிபத்தியத்தின் இராணுவ நிர்ப்பந்தத்தை எதிர்த்துச் சமாளிப்பதிலும் மற்றும் தொழிற்துறை, பொருளாதார வளர்ச்சியிலும் சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும்தான் இந்நாடுகளுக்கு உதவின. கூட்டுச் சேரா இயக்கம் இந்த உண்மையை அங்கீகரிக்காமல் கூட்டுச் சேரா இயக்க நண்பனாகிய சோவியத் யூனியனை இயக்க விரோதியாகிய அமெரிக்க ஐக்கிய நாட்டோடு சேர்ந்து ஒரே தட்டில் வைப்பது முழுத் தவறாகும்''* என்று இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிகிரிஷன் சிங் சுர்ஜித் குறிப்பிட்டார்.

சோஷலிச உலகுடன் கூட்டுச் சேரா இயக்கத்திற்குள்ள பரஸ்பர செயலாக்கத்தை வளர்த்து வலுப்படுத்த வேண்டும் என்பதற்காகப்

---

* *Ibid.*, p. 39.

பாடுபடுபவர்களின் நிலை வரலாற்று ரீதியாகச் சரியானது என்பதில் ஐயம் எதுமில்லை. ஏனெனில் இன்றைய உலகின் அடிப்படை ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தியாகிய உலக சோஷலிச முகாமுடனை கூட்டு மட்டுமே, ஏகாதிபத்திய அதிகாரம், ஆக்கிரமிப்புச் செயல்கள், சித்தாந்த மற்றும் அரசியல் சீர்குலைவு நடவடிக்கைகள் ஆகியவற்றை வெற்றிகரமாக எதிர்த்துச் சமாளிக்கவும் கூட்டுச் சேரா இயக்க லட்சியங்களை நிறைவேற்றுவதில் புதிய வெற்றிகளை அடையவும் கூட்டுச் சேரா நாடுகளுக்கு வாய்ப்பளிக்கிறது.

இன்று உலக வளர்ச்சிப் பிரச்சினைகள் அனைத்தின் தீர்வும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான உலகப் பிற்போக்குச் சக்திகளின் மீது ஜனநாயக,புரட்சிகர,சோஷலிச, யுத்த எதிர்ப்பு, முற்போக்குச் சக்திகள் அனைத்தும் பெறும் வெற்றியால் நிர்ணயிக்கப்படுகிறது. எனவே சுயமான சுதந்திர, முற்போக்கு வளர்ச்சிக்கு வகை செய்யவும் கூட்டுச்'சேரா இயக்கத்தின் வேலைத்திட்ட லட்சியங்களை நிறைவேற்றவும் இந்த இயக்க நாடுகளுக்கு உள்ள உண்மையான வாய்ப்புக்கள், ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய அணியில் கூட்டுச் சேரா இயக்கம் வகிக்கும் இடத்தைப் பொறுத்துள்ளன. கூட்டுச் சேரா நாடுகளின் எதிர்கால வெற்றிகள், இயக்கத்தின் பிரதானக் கோட்பாடுகள் மற்றும் லட்சியங்களைப் பின்பற்றுவதன் அடிப்படையிலான இவற்றின் ஒற்றுமையோடு பிரிக்க முடியாதபடி தொடர்புடையவை.

ஏகாதிபத்தியச் சக்திகள், எல்லாவற்றிற்கும் மேலாக அமெரிக்க ஐக்கிய நாடு, கூட்டுச் சேரா

இயக்கத்திற்கு எதிரான சீர்குலைவு நடவடிக்கைகளை நிறுத்தவில்லை. இவை கூட்டுச் சேரா நாடுகளின், குறிப்பாக முற்போக்கு வளர்ச்சிக் கொள்கையைத் தொடர்ச்சியாகக் கடைபிடிக்கும் நாடுகளின் உள்விவகாரங்களில் வெளிப்படையாகத் தலையிடுகின்றன.

என்றாலும் தேசிய விடுதலை சக்திகளின் மீதான ஏகாதிபத்திய நிர்ப்பந்தத்தையும் பொருட்படுத்தாது இச்சக்திகள் சமீப ஆண்டுகளில் கணிசமான வெற்றிகளை அடைந்துள்ளன என்பதைக் குறிப்பிட வேண்டும். உலக முற்போக்குச் சக்திகளின் ஆதரவின்றி, சோஷலிச மற்றும் கூட்டுச் சேரா நாடுகளின் ஒற்றுமையான நடவடிக்கைகளின்றி இந்த வெற்றிகள் சாத்தியமானவையாக இருந்திருக்காது. யுத்தமா அல்லது சமாதானமா, ஏகாதிபத்தியமா அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்பா, ஒடுக்குமுறையா அல்லது சுதந்திரமா எனும் பிரச்சினைகளில் முடிவு செய்யும் விஷயத்தில் கூட்டுச் சேரா நாடுகள் நடுநிலை வகிக்கவில்லை, நடுநிலை வகிக்கவும் முடியாது. எனவே தான் இந்நாடுகளால் உலகின் மற்ற முற்போக்கு, சமாதான சக்திகளுடன் ஒத்துழைக்காமல் இருக்க முடியாது. இத்தகையதொரு ஒத்துழைப்பிற்கான யதார்த்தமான அடித்தளம் இருந்தது, இருக்கிறது, எதிர்காலத்தில் இது இன்னமும் விரிவடையும்.

## குறிப்புகள்

1 "கெடுபிடி யுத்தம்"—சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடுகள் பாலும் மற்றும் தேசிய விடுதலை, சமாதானம், ஜனநாயகம், சோஷலிசத்திற்காகப் போராடும் மக்களினங்களின் பாலும் மேலைய நாடுகளின் பிற்போக்கு, ஆக்கிரமிப்பு வட்டங்கள் கடைபிடித்த கொள்கையைக் குறிக்கும் ஒரு கருத்து, இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.—13.

2 நேட்டோ (வட அட்லாண்டிக் ஒப்பந்த ஸ்தாபனம்)—ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவிலுள்ள 16 முதலாளித்துவ அரசுகளின் இராணுவ அரசியல் கூட்டு. "கெடுபிடி யுத்தத்தின்" உச்ச கட்டத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் முன்முயற்சியால் 1949இல் தோற்றுவிக்கப்பட்டது.—14.

3 **அன்ஜியூஸ்**—அமெரிக்க ஐக்கிய நாடு, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து நாடுகளின் இராணுவக் கூட்டு. 1951 ஆம் ஆண்டு செப்டெம்பர் 1 ஆம் தேதியன்று சான்பிரான்சிஸ்கோ நகரில் உடன்பாடு கையெழுத்தானது, 1952 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 முதல் அமுலுக்கு வந்தது. இது

சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடுகள், தென் கிழக்கு ஆசியாவின் விடுதலை இயக்கத் திற்கு எதிரான மேலைய வல்லரசுகளின் ஆக்கிரமிப்பு இராணுவக் கூட்டுகளில் ஒன்றாகும்.—14.

4 **ஸியாட்டோ**—தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த ஸ்தாபனம், அமெரிக்க ஐக்கிய நாட்டின் முன் முயற்சியால் தோற்றுவிக்கப்பட்ட இராணுவ அரசியல் கூட்டு. இதைப் பற்றிய ஒப்பந்தம் 1954ஆம் ஆண்டு செப்டெம்பரில் கையெழுத் தானது; 1955 பிப்ரவரியில் அமுலுக்கு வந் தது. 1977ஆம் ஆண்டு ஜூனில் கலைக்கப்பட் டது.—14.

5 **சென்டோ** — மத்திய ஒப்பந்த ஸ்தாபனம், 1955ஆம் ஆண்டு கிரேட் பிரிட்டன் மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் முன்முயற்சியின் பேரால் அண்மை மற்றும் மத்திய கிழக்கில் தோற்றுவிக்கப்பட்ட இராணுவ அரசியல் கூட்டு. 1979இல் இரானும் பாகிஸ்தானும் இதிலிருந்து வெளியேறியதும் இது நடை முறையில் தனது பணிகளை இழந்து விட்டதால் இதைக் கலைக்குமாறு ஆலோசனை கூற துருக்கி முடிவு செய்தது.—14.

6 **சபுல்தெபேக் பிரகடனம்** — 1945ஆம் ஆண்டு மார்ச் 6ஆம் தேதி, யுத்தம் மற்றும் சமா தானம் பற்றி சபுல்தெபேக் (மெக்சிகோ) கோட்டையில் நடைபெற்ற அமெரிக்க நாடு களின் மகாநாட்டில் ஏற்கப்பட்டது. மகா நாட்டில் அமெரிக்க ஐக்கிய நாடும் அர்ஜென் டைனாவைத் தவிர மற்ற எல்லா லத்தீன் அமெரிக்க நாடுகளும் கலந்து கொண்டன. இப்பிரகடனத்தில் பரஸ்பர உதவி, அமெரிக்க

ஒருமைப்பாடு பற்றிக் கூறப்பட்டுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடு, தனது மேலாதிக்கத்தின் கீழ் அமெரிக்க நாடுகளின் இராணுவ அரசியல் கூட்டைத் தோற்றுவிக்க இந்தப் பிரகடனத்தைப் பயன்படுத்தியது.—18.

7 1950ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் தேதி தென் கொரிய ஆட்சியாளர்கள் கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசிற்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டனர். உடனே (1950, ஜூலையில்) அமெரிக்க ஐக்கிய நாடு இந்தச் சச்சரவில் தலையிட்டது. "ஐ.நா. சங்கப் படை" எனும் போர்வையின் கீழ் நிறைவேற்றப்பட்ட இந்த ஆக்கிரமிப்பில் அமெரிக்க ஐக்கிய நாட்டைத் தவிர இன்னும் சில நாடுகளும் கலந்து கொண்டன. சோவியத் யூனியன், சீன மக்கள் குடியரசு, மற்ற சோஷலிச நாடுகள், உலக முற்போக்கு சக்திகளின் ஆதரவோடு கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு ஆக்கிரமிப்பாளர்களுக்குப் பதிலடி தந்ததையடுத்து அவர்கள் 1953ஆம் ஆண்டு ஜூலை 27இல் சமரசத்தில் கையெழுத்திடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர்.—26.

8 சென்ட்கோம்-1983ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி தோற்றுவிக்கப்பட்ட அமெரிக்க பிரதேச படைத்தலைமை. தென்மேற்கு ஆசியாவிலும் வடக்கு ஆப்பிரிக்காவிலும் உள்ள 19 அரசுகள் இதன் அதிகார வரம்பிற்குள் அடங்கும். சமாதானக் காலத்தில் இதன் இராணுவத் தலைமை தளபதி அமெரிக்க முப்படைத் தளபதிகளின் கமிட்டியின் நேரடிக் கட்டளைகளுக்குக் கீழ்படிய வேண்டும். சென்ட்கோம் போர் காலத்தில் சாத்தியமான இராணுவ நடவடிக்கைத் திட்டங்களைத் தீட்டுகிறது,

அந்தப் பிரதேசத்திலுள்ள நாட்டுத் தலைவர்களுடன் ''இராணுவ பரஸ்பர செயலாக்கப்'' பணியை நிறைவேற்றுகிறது, இராணுவ உதவி செயல் திட்டங்களின் நிறைவேற்றத்தைக் கண்காணிக்கிறது. இப்படைத் தலைமை ஓமான், சோமாலி, கென்யா, எகிப்து போன்ற இடங்களில் உள்ள பரவலான அமெரிக்க இராணுவத் தளங்கள் மற்றும் இராணுவ அமைப்புகளை ஆதாரமாகக் கொண்டு இயங்குகிறது. தெற்கில் டியகோ-கார்சியா தீவும் வடக்கில் இஸ்ரேலும் முக்கிய ஆதாரத் தளமாக விளங்குகின்றன. போலீஸ் வேலை செய்வது, அமெரிக்காவிற்கு ஏற்ற ஆட்சி முறைகளுக்கு ஆதரவளித்தல், பிரதேசத்திலுள்ள சுதந்திர அரசுகளின் உள்விவகாரங்களில் தீவிரமாகத் தலையிடுவது ஆகியவைதான் புதிய படைத் தலைமையின் கடமைகள்.—54.

9 **ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டு ஸ்தாபனம்**—ஆப்பிரிக்காவில் உள்ள சுதந்திர நாடுகளின் அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்களின் அடிஸ்-அபாபா மகாநாட்டு தீர்மானத்திற்கேற்ப 1963ஆம் ஆண்டு மே மாதம் தோற்றுவிக்கப்பட்ட பிரதேச அரசுகளின் அரசியல் ஸ்தாபனம். வெளிவிவகாரக் கொள்கை, பொருளாதாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம், தற்காப்பு மற்றும் பாதுகாப்பு, கல்வி, கலாச்சாரம், மருத்துவம் உட்பட அரசுகளுக்கிடையேயான உறவுகளின் பல்வேறு துறைகளில் தமது நடவடிக்கைகளை ஒன்றிணைத்து செயல்படுவதென ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டு ஸ்தாபன உறுப்பு நாடுகள் உறுதிமொழி மேற்கொண்டன. ஆப்பிரிக்கக் கண்டத்தில் நிலவும் காலனியாதிக்கத்தின் மிச்ச சொச்சங்களையும் தென்னாப்பிரிக்காவில் நிலவும் நிறவெறியையும் ஒழித்துக் கட்டுவதற்காகப் போராடுவது

ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டு ஸ்தாபனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்ருகும். இன்று தென்னுப்பிரிக்கக் குடியரசைத் தவிர ஆப்பிரிக்காவின் எல்லா நாடுகளும்—50 சுதந்திர அரசுகள் — இந்த ஸ்தாபனத்தில் உறுப்பு நாடுகளாக உள்ளன.—54.

10 ஒப்பெக் (OPEC) — எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் ஸ்தாபனம்; வெனிசுலா நாட்டின் முன்முயற்சியின் பேரில் 1960ஆம் ஆண்டு செப்டெம்பரில் தோற்றுவிக்கப்பட்டது. விதிமுறையின்படி ''சுத்தமாக'' எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள், அதாவது எண்ணெய் எடுத்தல் எங்கே தேவைக்கு அதிகமாக எடுக்கப்படுகிறதோ அந்நாடுகள் இதில் உறுப்பினராயிருக்கலாம். அல்ஜீரியா, வெனிசுலா, கபோன், இந்தோனேசியா, இராக், இரான், கத்தார், குவெய்ட், லிபியா, நைஜீரியா, ஒன்றிணைந்த அராபிய எமிரேட்டுகள், சவுதி அரேபியா, ஈக்வடோர் ஆகிய நாடுகள் இதில் உறுப்பு நாடுகள். சர்வதேச எண்ணெய் கார்ட்டெலின் தான்தோன்றித் தனத்திலிருந்து ''உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றின் தனித்தனி நலன்களைப் பாதுகாப்பதும் அனைத்தின் மொத்த நலன்களைப் பாதுகாப்பதும்'' எண்ணெய் எடுக்கும் நாடுகளின் வருமானங்களைப் பெருக்குவதும் ஸ்தாபனத்தின் நோக்கமென வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்தாபனம் பன்முறை எண்ணெய் விலைகளை உயர்த்துவதில் வெற்றி கண்டுள்ளது.—67.

11 **தாமிரம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அரசாங்கக் கவுன்சில்**—1967ஆம் ஆண்டு ஜூனில் லுஸாக்காவில் (ஜாம்பியா) நடைபெற்ற தாமிரம் பற்றிய மகாநாட்டில் உருவாக்கப்பட்ட உடன்

படிக்கைக்கு ஏற்ப 1968ஆம் ஆண்டு மே மாதம் தோற்றுவிக்கப்பட்டது. தாமிரத்தை ஏற்றுமதி செய்வதால் கிடைக்கும் உண்மை வருமானங்களின் சீரிசைவான, இடையறு அதிகரிப்பிற்கு வகை செய்யும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பது; தாமிர உற்பத்தி மற்றும் விற்பனை சம்பந்தமான பிரச்சினைகளில் உறுப்பு நாடுகளின் கொள்கையைச் சீரிசைக்க உதவி செய்தல்; தாமிர உற்பத்தி செய்யும் நாடுகளின் பொருளாதார, சமூக வளர்ச்சிக்கான நிதி மூலாதாரங்களைப் பெருக்குதல் போன்றவை ஸ்தாபனத்தின் நோக்கங்களாகும். ஜாயிர், ஜாம்பியா, இந்தோனேசியா, மவ்ரித்தானியா, பெரு, சிலி ஆகிய நாடுகள் இதில் உறுப்பு நாடுகளாகும்; ஆஸ்திரேலியா மற்றும் பாப்புவா-நியூகினி கூட்டு உறுப்பு நாடுகளாகும்.—67.

12 **பன்னாட்டுக் கார்ப்பரேஷன்கள்** — சர்வதேச ஏகபோகங்கள்; தமது மூலதனத்தில் இவை தேசிய நிறுவனங்கள், தம் நடவடிக்கைத் தன்மையில் சர்வதேச நிறுவனங்களாகும். சர்வதேச ஏகபோக வர்த்தகத்தின் உண்மையான "திமிங்கலங்கள்" 300 அமெரிக்க பன்னாட்டுக் கார்ப்பரேஷன்களாகும். இத்தகைய நிறுவனங்களின் செழுமை "ஆதாரம் கொண்டிருக்கும் நாட்டின்" உள்ளே இவற்றின் நடவடிக்கைகளைப் பொறுத்து இல்லை, மாறாக "ஏற்கும் நாடுகளில்" இவற்றின் செயல்பாட்டைப் பொறுத்து உள்ளது. பன்னாட்டுக் கார்ப்பரேஷன்களின் சாராம்சம் இவற்றின் "உலகளாவிய போர்தந்திரத்தில்" அடங்கியுள்ளது; லாபமடித்தல் மற்றும் கொள்ளையடிப்பதுதான் இத்தகைய போர்தந்திரமாக இருந்தது, இருந்து வருகிறது. தற்போது வளர்முக நாடுகளில் பன்னாட்டுக் கார்ப்பரேஷன்களின் விஸ்

தரிப்பு கண்கூடாக அதிகரித்து வருகிறது, நவீன காலனியாதிக்கத்தின் முக்கிய தாக்கு சக்தியாக இவற்றின் நடவடிக்கைத் தீவிர மடைந்து வருகிறது.—68.

13 **பன்துஸ்தான்**—தென்னுப்பிரிக்காவில் கறுப்பு நிறத்தவர்களுக்கான சேரிப்பகுதி. தென்னுப்பிரிக்க பன்துஸ்தான்களை அங்கீகரிக்கக் கூடாதென்ற தீர்மானம் கூட்டுச்சேரா நாடுகளின் அரசு மற்றும் அரசாங்கத் தலைவர்களின் 5 வது மகாநாட்டில் ஏற்கப்பட்டது.—72.

14 **அமெரிக்கா, இஸ்ரேல், சதாத் அரசாங்கங்களின் சதித்திட்டம்**—1978ஆம் ஆண்டு செப்டெம்பர் 5—17இல் கேம்ப்-டேவிடில் முத்தரப்பு (எகிப்து — இஸ்ரேல் — அமெரிக்க ஐக்கிய நாடு) பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. பேச்சு வார்த்தைகளின் முடிவில் ''மத்தியக் கிழக்கில் சமாதான வரம்புகள்'' மற்றும் ''எகிப்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான வரம்புகள்'' எனும் இரு உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. இவை நடைமுறையில் மத்தியக் கிழக்கு சச்சரவை நியாயமான முறையில் தீர்க்கும் வாய்ப்பை மறுத்தன. இந்த இரு ஆவணங்களும் ஐ. நா. சங்கப் பாதுகாப்புக் கவுன்சில் தீர்மானங்களுக்கு எதிரானவை.—77.

15 ''எகிப்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான வரம்புகளின்'' அடிப்படையில் வாஷிங்டனில் 1979ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் தேதி ''எகிப்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையே

சமாதான ஒப்பந்தம்'' செய்து கொள்ளப்பட்டது.—79.

16 கூட்டுச் சேரா இயக்கத்தின் 6வது மகாநாட்டு அரசியல் பிரகடனத்தில்(ஷரத்துக்கள் 164—165), சுயநிர்ணயம், சுதந்திரம் மற்றும் பிரதேச முழுமையின் பால் பெலிஸ் மக்களுக்கு உள்ள பிரிக்க இயலா உரிமைக்கு முழு ஆதரவு தெரிவிக்கப்பட்டது; இந்த உரிமையை முழுமையாக நிறைவேற்றுவதற்குத் தடையாக இருக்கும் எந்த ஒரு நிர்பந்தமும் அச்சுறுத்தலும் கண்டிக்கப்படுகின்றன; இந்த அச்சுறுத்தலைப் பயன்மிகு வகையில் எதிர்த்துச் சமாளிக்க அவசியமானதாகக் கருதும் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ள பெலிஸ் அரசாங்கத்திற்கு உள்ள உரிமைக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது.—82.

17 1975 ஏப்ரல் 17இல் கம்பூச்சியாவில் (கம்போடியாவில்) அமெரிக்க ஆதரவு லோன் நோல் ஆட்சிக் கும்பல் தேசபக்த சக்திகளால் தூக்கியெறியப்பட்ட பின் போல் போட்—இயெங் சாரி பிற்போக்குக் கும்பல் நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றியது, பாசிச சர்வாதிகார ஆட்சிமுறையை ஏற்படுத்தி பெரும் பயங்கரத்தைக் கட்டவிழ்த்து விட்டது. 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாத ஆரம்பத்தில் புரட்சிகர நாட்டுப் பற்றுச் சக்திகள் கம்பூச்சிய தேசிய மீட்பு ஐக்கிய முன்னணியின் தலைமையில் வெகுஜனங்களின் தீவிர ஆதரவோடு போல் போட் — இயெங் சாரி ஆட்சியை முறியடித்தன. 1979ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் தேதி கம்பூச்சியா மக்கள் குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டது. முற்போக்கு மனிதகுலம் முழுவதும் கம்பூச்சிய மக்களின் வெற்றியை

வரவேற்றது. புதிய தலைமை, கம்பூச்சிய சமுதாயத்தின் சாதாரண வாழ்க்கையைச் சீரமைப்பதற்காகத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டது.—84.

18 **ஆசியான்** (ACEAN) —தென்கிழக்கு ஆசிய அரசுகளின் ஸ்தாபனம். இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், புரூனை ஆகிய நாடுகளை உள்ளடக்கிய பிரதேச ஸ்தாபனம். பாங்காங்கில் நடைபெற்ற மேற்கூறிய நாடுகளின் வெளிவிவகாரத் துறையமைச்சர்களின் மகாநாட்டில் 1967ஆம் ஆண்டு ஆகஸ்டு 8ஆம் தேதி தோற்றுவிக்கப்பட்டது. பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார முன்னேற்றத்திற்கு உதவி புரிவது, சமாதானத்தையும் பிரதேச ஸ்திரத் தன்மையையும் பலப்படுத்துவது, விஞ்ஞான ஆராய்ச்சிப் பணிகளிலும் கல்வி, தொழில்நுட்பம், ஊழியர் பயிற்சி போன்றவற்றிலும் பரஸ்பர உதவி போன்றவற்றைத் தனது முக்கியக் கடமைகளாக இந்தஸ்தாபனம் பிரகடனப்படுத்தியது.—84.

19 முந்தைய ஸ்பெயின் காலனியான மேற்கு சஹாராவிற்குச் சுதந்திரம் வழங்கியதையடுத்து மவ்ரித்தானியா, மொரோக்கோ மற்றும் அல்ஜீரியாவிற்கு இடையே தோன்றிய சச்சரவு இங்கே குறிப்பிடப்படுகிறது.—91.

20 1979ஆம் ஆண்டு ஆகஸ்டில் கு.உயேதேயின் தலைமையில் சாத் அரசாங்கம் (இதில் கி.ஹாப்ரே பாதுகாப்பு அமைச்சர் பதவியை மேற்கொண்டார்) தோற்றுவிக்கப்பட்டது. இந்த அரசாங்கத்தால் நாட்டில் நிலவிய கடுமையான தேசிய, சமூக, மத முரண்பாடுகளைத் தீர்க்க இயலவில்லை. இதனால் இரண்டு

பகைமைக் கோஷ்டிகளுக்கு இடையே—உயேதேய் கோஷ்டிக்கும் ஹாப்ரே கோஷ்டிக்கும் இடையே—கடுமையான மோதல்கள் வெடித்தன. ஜாயிர், பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடு ஆகியன சச்சரவில் தலையிட்டன.—91.

21 பிற்போக்கு மற்றும் ஏகாதிபத்திய சக்திகளோடு சேர்ந்து சதி செய்த மக்கள் விரோத அமீன் ஆட்சிக் கும்பல் முறியடிக்கப்பட்டதையடுத்து 1979ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் தேதி ப. கர்மால் தலைமையில் ஆப்கானிய ஜனநாயகக் குடியரசின் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டது. இந்தப் புதிய அரசாங்கம் பரவலான மக்கள் திரளினரின் நலன்களுக்கு ஏற்ற தேசிய ஜனநாயக, சமூகப் பொருளாதார, அரசியல் மாற்றங்களுக்கான செயல் திட்டங்களை அறிவித்தது. அந்நிய ஆக்கிரமிப்பு அபாயத்தையொட்டி, தேசிய சுய உரிமையைப் பாதுகாப்பதில் உதவி புரியுமாறு ப. கர்மால் அரசாங்கம் சோவியத் யூனியனிடம் வேண்டுகோள் விடுத்தது. நட்பு, நல் அண்டை உறவு மற்றும் ஒத்துழைப்பு சம்பந்தமான சோவியத்-ஆப்கானிய ஒப்பந்தத்தின் ஷரத்துக்களேற்ப இத்தகைய உதவி அளிக்கப்பட்டது. ஆப்கானிய ஜனநாயக குடியரசிற்கு எதிராகப் பிரகடனப்படுத்தாத யுத்தத்தை நடத்தி வரும் ஏகாதிபத்திய மற்றும் பிற்போக்கு வட்டங்கள், ஐ.நா. சங்க விதிமுறைகளுக்கு முற்றிலும் ஏற்றதாக உள்ள சோவியத் யூனியனின் இந்த உதவியைத் திரித்துக் கூறி ''ஆப்கானிய விவகாரங்களில் சோவியத் யூனியனின் தலையீடு'' எனும் அவதூறான பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன.—91.

22 லெபனுனுக்கு எதிரான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு —அரபு உலகைப் பிளவுபடுத்தி மத்தியக் கிழக்கில் இஸ்ரேலுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் மேலாதிக்க நிலையை அளிக்க உதவும் ஒரு ஒப்பந்தத்தை லெபனுன் நாட்டின் மீது திணிப்பதற்காக 1982ஆம் ஆண்டு ஜூனில் இஸ்ரேல் லெபனுன் பரப்பை ஆக்கிரமித்தது.—96.

23 நமீபியாவிற்கு சுதந்திரம் வழங்கும் பிரச்சினையின் தீர்வை, அங்கோலாவில் உள்ள மட்டான கியூபப் படைகள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்பதுடன் ''இணைப்பதன்'' அவசியத்தைப் பற்றி ''தொடர்புக் குழு'' என்றழைக்கப்படுவதன் மற்ற உறுப்பினர்களின் (கனடா, பிரான்ஸ், கிரேட் பிரிட்டன் மற்றும் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு) ஒப்புதலோடு அமெரிக்க ஐக்கிய நாடு 1981ஆம் ஆண்டு வசந்த காலத்தில் கூற ஆரம்பித்தது. தென் ஞப்பிரிக்கக் குடியரசுப்படைகள் அங்கோலாவில் புகாமல் காப்பாற்றுவதற்காக அங்கோல மக்கள் குடியரசின் சட்ட பூர்வமான வேண்டுகோளின் பேரில்தான் கியூபப் படைகள் அந்நாட்டில் உள்ளன. இது ஐ.நா. சங்க விதிமுறைகளுடன் முற்றிலும் ஒத்துப் போகிறது.—96.

24 பனுமா கால்வாய் மீது பனுமா நாட்டிற்குள்ள உரிமையை அங்கீகரிக்கும் முகமாக அமெரிக்க ஐக்கிய நாடு 1977ஆம் ஆண்டு செப்டெம்பரில் இந்நாட்டுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. ஆனுல் அமெரிக்கா ஒரு சில சலுகைகளைத் தக்க வைத்துக் கொண்டது. 1999ஆம் ஆண்டில்தான் கால்வாய் மீதான முழு உரிமை பனுமா அரசாங்கத்திற்குக் கிடைக்கும்.—97.

25 1983ஆம் ஆண்டு அக்டோபரில் அமெரிக்கப் படைகள் கிரினடாவிற்குள் புகுந்தன. சுய மான அரசிற்கு எதிரான அமெரிக்காவின் வெட்கங்கெட்ட ஆக்கிரமிப்பை உலகெங்கும் உள்ள முற்போக்குச் சக்திகள் முழுவதுமாகக் கண்டித்தன. கிரினடா நிலவரத்தைப் பற்றி விவாதிப்பதற்காக உடனடியாகக் கூட்டப் பட்ட ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் அவசர முழுப் பேரவை அமர்வில் நிறை வேற்றப்பட்டத் தீர்மானத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் இந்நடவடிக்கைகள் சர்வ தேச சட்ட முறையின் முரட்டுத் தனமான மீறல் என்றும் கிரினடா நாட்டின் சுதந்திரம், அரசுரிமை மற்றும் பிரதேச முழுமையின் மீதான ஆக்கிரமிப்பு என்றும் சித்தரிக்கப் பட்டுள்ளன. தீர்மானத்திற்கு ஆதரவாக 108 வாக்குகளும், எதிராக 9 வாக்குகளும் அளிக்கப்பட்டன.—97.

26 சாகோஸ் தீவுக் கூட்டம் மொரீஷியஸ் அர சைச் சேர்ந்தது. இக்கூட்டத்தின் ஒரு தீவு— — டியகோ-கார்சியா — முன்னர் ஆதிக்கம் செலுத்திய நாடாகிய கிரேட் பிரிட்டனால் 1965ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டு பின் அமெ ரிக்க ஐக்கிய நாட்டிற்குக் குத்தகைக்கு விடப் பட்டது. அங்கே அமெரிக்கா இந்து மகா சமுத்திரப் பிரதேசத்திலேயே மிகப் பெரும் தனது இராணுவக் கப்பற்படைத் தளங்களில் ஒன்றை அமைத்தது. —99.

27 சாதாரண மற்றும் அணு ஆயுத யுத்தத்திற் காகப் பயிற்றுவிக்கப்பட்ட காலாட்படை, கப்பற்படை, விமானப் படை மற்றும் கடற் படை எனும் நான்கு வித அமெரிக்கப் படைத் தொகுதிகளைக் கொண்டு ''துரிதத் தாக்குதல் படை'' உருவாக்கப்படுகிறது. உலகின் எந்த

ஒரு பிரதேசத்திலும் ''அமெரிக்காவின் ஜீவாதார நலன்களைப்'' பாதுகாக்கும் பொருட்டு ''பதட்ட நிலை'' நிலவும் இடங்களுக்கு அனுப்புவதற்காகத்தான் அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவ அரசியல் தலைமை ''துரிதத் தாக்குதல் படையை'' உருவாக்கியது. அமெரிக்காவிற்கு ''விசேஷ'' போர்த்தந்திர மற்றும் பொருளாதார அக்கறை உள்ள தென் மேற்கு ஆசியப் பகுதிதான் (சுமாராக 20 நாடுகள்) இந்தப் படையின் முக்கிய நடவடிக்கை மண்டலமாக ஆரம்பத்திலிருந்தே அறிவிக்கப்பட்டு வருகிறது. இப்படை மீண்டும் தோற்றுவிக்கப்பட்டுள்ள ''மத்தியப் படைத் தலைமையகத்தின்'' (**சென்ட்கோம்**) வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ''துரிதத் தாக்குதல் படை'' லெபனனிலும் கிரினடாவிலும் அமெரிக்க ஆக்கிரமிப்பின் போது பயன்படுத்தப்பட்டது.—*99.*

28 லோன் நோல் 1970ஆம் ஆண்டு மார்ச்சில் ஆட்சிக் கவிழ்ப்பிற்குத் தலைமை தாங்கி சியானுக் • முறியடிக்கப்பட்டதாக அறிவித்தார். லோன் நோல் 1975ஆம் ஆண்டு ஏப்ரலில் கம்பூச்சிய தேசிய ஐக்கிய முன்னணிப் படையினரால் தோற்கடிக்கப்பட்டார். ஹெங் சமரின்—கம்பூச்சிய தேசிய மீட்பு ஐக்கிய முன்னணித் தலைவர், கம்பூச்சிய மக்கள் குடியரசின் மக்கள் புரட்சிக் கவுன்சில் தலைவர், பின்னல் கம்பூச்சிய மக்கள் ஜனநாயகக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர்; 1981 முதல் கம்பூச்சிய ஜனதிபதி.—*102.*

29 எத்தியோப்பியாவிற்குச் சொந்தமான நிலப் பரப்பில் ஒரு பகுதியாகிய ஒகதேன் மீது சோமாலி உரிமை கொண்டாடுவதையடுத்து ''சோமாலிய-எத்தியோப்பிய தகராறு''

தோன்றியது. இது 1977 ஜூலையில் எத்தியோப்பியாவிற்கு எதிரான சோமாலியின் இராணுவ ஆக்கிரமிப்பாக மாறியது.—126.

30 **நிக்ஸன் கோட்பாடு**—ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க சச்சரவுகளில் அமெரிக்க இராணுவத்தின் நேரடி பங்கேற்பைக் "குறைக்கும்" ஒரு கொள்கை. உதாரணமாக, இக்கொள்கை ஸ்தல பிற்போக்குச் சக்திகளை (எடுத்துக்காட்டாக இரான் ஷா மன்னன்) மத்தியக் கிழக்கில் தேசிய விடுதலை இயக்கத்தை ஒடுக்குவதற்காகப் பயன்படுத்துமாறு முன்மொழிந்தது.—141.

31 அமெரிக்க ஐக்கிய நாடு, பிரான்ஸ், கிரேட் பிரிட்டன், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு மற்றும் கனடா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய "தொடர்புக் குழு" ஐ.நா. சங்கப் பாதுகாப்புக் கவுன்சிலின் 435வது தீர்மானத்தின் அடிப்படையில் (நமீபியாவிற்குச் சுதந்திரம் அளித்தல்) நமீபியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதை, பிரிட்டோரிய ஆட்சிக் கும்பலுடனை பல்வேறு சமரசங்களால் மாற்றீடு செய்ய முயன்றது.—148.

32 ஆசிய வளர்ச்சி வங்கியை நிறுவுவது பற்றிய உடன்படிக்கை 1966ஆம் ஆண்டு ஆகஸ்டில் அமுலுக்கு வந்தது. ஆசிய நாடுகளின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கான அரசாங்க கடன் உதவி வழங்கும் இந்த நிறுவனம் மனிலாவில் (பிலிப்பைன்ஸ்) உள்ளது. வங்கியில் அமெரிக்க ஐக்கிய நாடும் ஜப்பானும் ஆதிக்கம் செலுத்துகின்றன.—152.

33 1922ஆம் ஆண்டில் பொருளாதார, நிதிப் பிரச்சினைகள் பற்றிய சர்வதேச மகாநாடு ஜெனோவாவில் (இத்தாலி) நடைபெற்றது. இதில் 29 அரசுகளும் கிரேட் பிரிட்டனின் 5 டொமினியன்களும் கலந்து கொண்டன (அமெரிக்க ஐக்கிய நாடு மகாநாட்டில் பங் கேற்க மறுத்து விட்டது). ''மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் பொருளாதாரப் புனர மைப்பிற்கான'' நடவடிக்கைகளைத் தேடுவது தான் மகாநாட்டின் அதிகாரபூர்வமான நோக் கமாக இருந்தது. ஆனால் சாராம்ச ரீதியாகப் பார்த்தால், சோவியத் ஆட்சியை இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம் முறியடிக்கும் முயற்சி கள் தோல்வியடைந்த பின் சோவியத் அரசிற் கும் முதலாளித்துவ உலகிற்கும் இடையிலான உறவுகள் பற்றிய பிரச்சினைதான் மகாநாட் டின் முன் நின்ற முக்கியப் பிரச்சினையாக இருந் தது. சர்வபொது படைக் கலைப்பைப் பற்றி மகாநாட்டின் முதல் முழுப் பேரவைக் கூட் டத்திலேயே (1922, ஏப்ரல் 10) சோவியத் தூதுக் குழுவால் வைக்கப்பட்ட முன்மொழிவு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாயிருந்தது. ஆனால் படைக் கலைப்பைப் பற்றிய பிரச் சினையும் பரஸ்பர நிதி, பொருளாதார பிரச் சினைகளை ஒழுங்கமைக்கும் பிரச்சினைகளும் முதலாளித்துவ அரசுகளின் குற்றத்தால் ஜெனோவா மகாநாட்டில் தீர்க்கப்படவில்லை. —159.

34 இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் எகிப்து பரப்பில் (சூயஸ் கால்வாய் பிரதேசத்தில்) பிரிட்டிஷ் படைகள் இருந்தன. 1945ஆம் ஆண்டு செப்டெம்பர் இறுதியில் பிரிட்டிஷ் படைகள், இன்னமும் ஆயுதத்தைக் கீழே போடாத ஜப்பானிய போர்வீரர்களைச் சுய மான இந்தோனேசிய அரசிற்கு எதிரான

போராட்டத்தில் பயன்படுத்தி, இந்தோனேசியாவை ஆக்கிரமித்தன. சிரியாவிலும் லெபனுனிலும் பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சுப் படைகள் இருந்தன. தமது நாடுகளிலிருந்து பிரெஞ்சு மற்றும் பிரிட்டிஷ் படைகள் வெளியேற வேண்டுமென்று சிரியாவும் லெபனுனும் ஐ.நா. சங்கப் பாதுகாப்புக் கவுன்சிலில் வைத்த முன்மொழிவுகளை சோவியத் யூனியன் தீவிரமாக ஆதரித்ததன் பயனுய் பிரெஞ்சு மற்றும் பிரிட்டிஷ் படைகள் **1946**ஆம் ஆண்டு சிரியாவிலிருந்தும் **1947**இல் லெபனுனிலிருந்தும் வெளியேறின.—*160*.

35 **1965**ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையிலான உறவுகள் கடுமையாக மோசமடைந்து வெளிப்படையான ஆயுத மோதலாக மாறின. சமாதானமான, நல் அண்டை உறவுகள் இந்நாட்டு மக்களின் அடிப்படை தேசிய நலன்களுக்கு உகந்தவை எனும் உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில், இந்த இரு நாட்டுத் தலைவர்களின் சந்திப்பிற்கு (பாகிஸ்தான் ஜனுதிபதி அயூப் கானிற்கும் இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரிக்கும் இடையில்) தன் நாட்டில் ஏற்பாடு செய்ய தான் தயார் என்று சோவியத் யூனியன் முன்மொழிந்தது. இந்த முன்மொழிவு ஏற்கப்பட்டு **1966**ஆம் ஆண்டுத் துவக்கத்தில் தாஷ்கென்டில் இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. இங்கே கையெழுத்தான தாஷ்கென்ட் பிரகடனம் இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையிலுள்ள விவாதத்திற்குரியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அடிப்படையாக அமைந்தது.—*163*.

36 **1967—1969**ஆம் ஆண்டுகளில் நைஜீரியாவின் கிழக்கே ‘‘பியாஃப்ராக் குடியரசு’’

எனும் தனி அரசை அமைப்பதற்கான தீவிர பிரிவினை இயக்கம் தோன்றியது. இப்பிரிவினை இயக்கத்திற்கு ஏகாதிபத்திய அரசுகள் ஆதரவளித்தன. 1970ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் தேதி பிரிவினைவாதிகளின் படைகள் சரணடைந்தன.—163.

37 1971ஆம் ஆண்டு தேசிய விடுதலை, அரசுரிமைக்கான பலம் மிக்க இயக்கத்தின் பயனாய் முந்தைய கிழக்கு பாகிஸ்தான் பரப்பில் பங்களாதேஷ் குடியரசாகப் பிரகடனப் படுத்தப்பட்டது.—163.

38 உதாரணமாக, ஐ.நா. சங்கப் பொதுச் சபையின் முன் கூட்டுச் சேரா நாடுகளால் கொண்டு வரப்பட்ட **புதிய சர்வதேசப் பொருளாதார முறையை நிலைநாட்டுவதற்கான பிரகடனமும், செயல் திட்டமும்** 1974ஆம் ஆண்டு டிசம்பரில் சோவியத் யூனியன், மற்ற சோஷலிச அரசுகளின் ஆதரவோடு ஏற்கப்பட்டன. படைக்கலைப்பு பற்றி விசேஷ அமர்வைக் கூட்ட வேண்டுமென்று கூட்டுச் சேரா நாடுகளின் ஐந்தாவது மகாநாடு (1976) வெளியிட்ட முன்மொழிவை சோவியத் யூனியன் தீவிரமாக ஆதரித்தது. இத்தகையதொரு ஐ.நா.சங்கப் பொதுச் சபைஅமர்வு 1978ஆம் ஆண்டு ஜூனில் நடைபெற்றது. 1979ஆம் ஆண்டு சோவியத் யூனியனின் முன் மொழிவின் பேரில் **சர்வதேச உறவுகளில் மேலாதிக்கக் கொள்கையை அனுமதிக்க இயலாது** என்ற தீர்மானம் ஐ.நா. சபையில் நிறைவேற்றப்பட்டது. இப்பிரச்சினை கூட்டுச் சேரா இயக்க உறுப்பு நாடுகளால் பன்முறை விவாதிக்கப்பட்டது, இந்நாடுகளின் உயர் மட்ட மகாநாடுகளின் தீர்மானங்களில் பிரதிபலித்தது.—172.

## விற்பனையாளர்கள்

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

### தலைமை அலுவலகம்

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
சென்னை—600098

### ஷோ-ரூம்

136, அண்ணுசாலை, சென்னை—600002

### கிளைகள்

80, மேலக்கோபுர வீதி, மதுரை—625001
3-4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர்—641018
42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008
செர்ரி ரோடு, சேலம்—636001

### விற்பனை நிலையங்கள்

3-22-75-D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்—627001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ், உதகமண்டலம்—643001
நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல்—624001

வி. பெனெவலேன்ஸ்கி—சோவியத் விஞ்ஞானப் பேரவையின் கீழுள்ள கிழக்கத்திய ஆராய்ச்சிக் கல்லூரி யின் துணைத் தலைவர், வரலாற்று விஞ்ஞானத்தில் நிபு ணர், வளர்ச்சியுறும் நாடுகளின் பிரச்சினைகளை ஆராய்ச்சி செய்பவர்.

இந்நூலில் கூட்டுச் சேரா இயக்கம் தோன்றியதி லிருந்து நம் நாட்கள் வரை இந்த இயக்கத்தைப் பற்றி எளிய வடிவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. கூட்டுச் சேரா நாடுகள் சந்திக்கும் பிரச்சினைகள் அனைத்தையுமோ அல் லது பெரும்பாலானவற்றையோ கவரும் லட்சியத்தை தன் முன்வைக்காத ஆசிரியர் இந்த இயக்கத்தின் வாய்ப்பு களையும் பிரச்சினைகளையும் சுட்டிக்காட்டுகிறார். ஆவணங் கள், இயக்கத் தலைவர்களின் பேச்சுகள், ஏற்றுக் கொண்ட தீர்மானங்களை நடைமுறையில் நிறைவேற்றியது ஆகியவற்றைப் பற்றிய பகுப்பாய்வின் அடிப்படையில் ஆசிரியர் இந்த இயக்கத்தின் பங்கைப் பற்றியும் எதிர் காலம் குறித்தும் தன் சொந்தக் கருத்தை எடுத்துரைக் கிறார்.

இந்நூலில் கூட்டுச் சேரா இயக்கத்தின் பாலான சோவியத் மற்றும் அமெரிக்க நிலை சித்தரிக்கப்பட்டுள் ளது, இயக்க ஒற்றுமையைக் குலைப்பதை நோக்கமாகக் கொண்ட சக்திகளின் செயற்பாடு தோலுரித்துக் காட்டப் பட்டுள்ளது.